பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஐப்பசி 13 புதன்கிழமை (29.10.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 335

# தள்ளாடியிலும் கொழும்பிலும் புலிகள் விமானத்தாக்குதல்கள்!

## நாட்டின் பல இடங்கள் இருளில் மூழ்கின

கொழும்பு, ஒக்ரோபர் 29

மன்னார் தள்ளாடியில் உள்ள இராணுவத்தலைமையகம் மீதும், கொழும்பில் களனிதிஸ்ஸ மின்நிலையம் மீதும் விடுதலைப்புலிகள் நேற்றிரவு விமானத்தாக்குதல்களை நடத்தினர்.

தள்ளாடியில் உள்ள இராணுவத் தலைமையகம் மீது நேற்றிரவு 10.30 மணிக்கு விடுதலைப்புலிகளின் இரண்டு விமானங்கள் தாக்குதல்களை நடத்தின.

இத்தாக்குதலில் தள்ளாடியில் பலத்த சேதம் ஏற்பட்டதாக முதலில் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

அதன்பின்னர் கொழும்பு களனிதிஸ்ஸவில் (கிராண்ட் பாஸுக்கு அருகே) உள்ள பிரதான மின்நிலையத்தின் மீது நேற்றிரவு 11.00 மணியளவில் விடுதலைப்புலிகளின் ஒரு விமானம் தாக்குதலை நடத்தியது. அந்தத் தாக்குதலில் மின்நிலையத்தின் ஒரு பகுதி சேதமடைந்ததாக முற்கொண்டு கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. (16 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டிலும் நேற்றிரவு மின்தடை

யாழ்ப்பாணம், ஒக்.29

குடாநாட்டில் நேற்று இரவு 10.35 மணிக்கு திடீரென மின்விநியோகம் துண்டிக்கப்பட்டது.

மன்னார் தள்ளாடி இராணுவ முகாம் மீது நேற்றிரவு 10.30 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதலை அடுத்தே குடாநாட்டில் மின்தடை நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டதாகச் சொல்லப்பட்டது. நேற்றிரவு 11.45 மணியளவில் மின்விநியோகம் வழமைக்குத் திரும்பியது.

## விமானத் தாக்குதலால் கொழும்பு நகரம் இருளில்!
## இரண்டரை மணிநேரம் ஏக்கத்தில் மூழ்கினர் மக்கள்!!

கொழும்பு, ஒக்.29

தள்ளாடி இராணுவ முகாம் மீது விடுதலைப்புலிகளின் இரண்டு இலகுரக விமானங்கள் இரு குண்டுகளை வீசி தாக்குதலை நடத்தின என்றும் -

களனிதிஸ்ஸ பிரதான மின்நிலையம் மீது புலிகளின் விமானம் ஒரு குண்டை வீசியது என்றும் - இராணுவப் பேச்சாளர் வெளிநாட்டுச் செய்தி நிறுவனத்திற்கு நேற்றிரவு தெரிவித்திருந்தார்.

மின் நிலையம் மீது விழுந்த குண்டுகளால் கூலர் பா(F)ன் (Cooler Fan) சேதமடைந்தது என்றும் அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

மன்னார் தாக்குதல் நடத்தப்பட்டதும் (16 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் நள்ளிரவு வட்டமிட்ட விமானங்கள்

வவுனியா, ஒக்.29

நேற்றிரவு நள்ளிரவு வேளையில் கிளிநொச்சி, விசுவமடு, முரசு மோட்டை மற்றும் இரணைமடு ஆகிய பகுதிகளில் படையினரின் கிபீர் விமானங்கள் பராவெளிச்சம் பாய்ச்சியபடி வட்டமிட்டுத் திரிந்தன என்று வன்னித் தகவல்கள் தெரிவித்தன.

புலிகளின் விமானங்களை இலக்கு வைத்து தரையிலிருந்து படையினர் தாக்குதல் நடத்தினர். விமானப்படை விமானங்களும் அவற்றைத் தேடி விரைந்தன.

(அ-சி)

# செங்கலடியில் கருணா குழுவினரின் அலுவலகம் மீது அதிரடித் தாக்குதல்

## நால்வர் பலி; ஐவரைக் காணவில்லை

மட்டக்களப்பு, ஒக்ரோபர் 29

மட்டக்களப்பு, செங்கலடிப் பகுதியில் கறுத்தப்பாலத்துக்கு அருகில் அமைந்திருந்த கருணா குழுவினரின் அலுவலகம் மீது நேற்று அதிகாலை 12.15 மணியளவில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அதில் கருணா குழுவைச் சேர்ந்த நால்வர் பலியாகினர். மேலும் ஐந்து பேர் காணாமல் போயுள்ளனர். அவர்களின் ஆயுதங்களும் மாயமாகியிருக்கின்றன- என்று தெரிவிக்கப்பட்டது. (16 ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டு நிறுவன அலுவலகத்தில் கைத்துப்பாக்கிகள் மீட்பு

கொழும்பு, ஒக்.29

மன்னாரிலுள்ள புலம்பெயர்ந்தோருக்கான சர்வதேச அமைப்பின் அலுவலகத்தில் நேற்று இரு கைத்துப்பாக்கிகள் மீட்கப்பட்டன.

கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகம் இதனை உறுதி செய்துள்ளது.

மன்னாரில் உள்ள ஐ.ஓ.எம். அலுவலகத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இரு (16 ஆம் பக்கம் பார்க்க)

## அதிரடிப்படை காவலரண் மீது கல்லடியில் தாக்குதல்

மட்டக்களப்பு, ஒக். 29

மட்டக்களப்பு, கல்லடி, மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு அருகில் உள்ள விசேட அதிரடிப் படையினரின் காவலரண்மீது திங்கட்கிழமை இரவு 8 மணியளவில் மேற் (16 ஆம் பக்கம் பார்க்க)

## யதார்த்தத்தை உணர்ந்துள்ள இந்திய அரசு ஆக்கபூர்வமான தீர்வுக்கு உருப்படியாக உதவ வேண்டும்

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன்

கொழும்பு, ஒக்.29

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்திய மத்திய, மாநில அரசுகளின் பங்களிப்பு அவசியமானது என்ற சூழ்நிலை தற்போது உருவாக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு அப்பால் யுத்தம் நிறுத்தப்பட்டு அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண இந்தியா ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், நாடாளுமன்றக் குழுவின் தலைவருமான இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதியின் விசேட தூதுவர் பஸில் ராஜபக்ஷ இந்தியாவில் நடத்திய பேச்சுக்கள் தொடர்பாக பி.பி.ஸி யின் தமிழோசைக்கு நேற்றிரவு வழங்கிய பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## மேற்குலக நாடுகள் மீது பஸில் ராஜபக்ஷ பாய்ச்சல்

### உள்விவகாரங்களில் தலையிடுகின்றனவாம்

கொழும்பு, ஒக்.29

இலங்கையின் உள் விவகாரங்களில் மேற்குலகம் தலையிடுவதாக ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பஸில் ராஜபக்ஷ குற்றஞ்சாட்டியிருக்கின்றார். பி.பி.ஸியின் சிங்கள சேவைக்கு [illegible] (16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# Special Promotion .......

**SONY MP3 PENDRIVE** 4,250/=
* 1GB * FM Radio
* Pendrive * Head Phone
* MP3 * External Micro SD
* Voice Recording Solt

**ORANGE MP4 PLAYER** 2GB - 5,500/=
* MP4 * Voice Recording
* MP3 * Head Phone
* FM Radio
1GB - 4,500/=

**PEN DRIVE**
1GB - 700/= 8GB - 1,950/=
2GB - 850/= 16GB - 4,850/=
4GB - 1,100/= 32GB - 6,950/=
Warrenty one Year

**MP3 PLAYER**
* 1GB
* MP3
* USB Cable
* Head Phone
* Power Changer
~~4,000/=~~ 2,500/=

* 2GB
* MP3
* USB Cable
* Head Phone
~~5,000/=~~ 3000/=

**COMPAQ LAPTOP**
Processor:- Inter Core2duo 1.50Ghz
Ram :- DDRII 1GB
Hard Disk :- 160GB
VGA:- 256MB
DVD R/W LightScribe
WI-FI / Blue Tooth
~~105,000/=~~ 92,500/=
FREE:- Bag & Mouse
Warrenty One Year

**MENI NOTE BOOK (Lap Top)**
Processor:Intel Atom N270 1.6GHz
Ram:1GB DDR II 667
Hard:Disk 80GB SATA
Screen:10" LCD panel
4-in-1Integrated Digital - Media Reader 3USB 2.0
Wi - Fi / Blue Tooth
1.3 MP Cam
~~74,000/=~~ 69,750/=
Warrenty One Year

**MP4 PLAYERS (Sony)**
*1GB (Expand 2 GB)
*Camara *FM Radio
*MP3 *Games
*Voice Recording
*USB Cable *Power Charger
*Head Phone *Driver CD
1GB - 8,500/=
2GB - 9,750/=

**DIGITAL CAMARA**
FUJIFILM, KODAK,SANYO
DIGITAL CAMARA
8.1 Mega Pixels
&
8.2 Mega Pixels
21,000/=

# MUSIC WORLD & COMPUTERS
141 B, பலாலி வீதி, தபால்பெட்டி சந்தி, திருநெல்வேலி. 021 222 6554
(ஞாயிறு, விடுமுறை தினங்களிலும் திறந்திருக்கும்)


## நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஒக்.29

கலாநிதி க.இரகுநாதனின் ''தேர்தல் முறைகளும் அவற்றின் பரிமாணங்களும்'' என்ற நூல் வெளியீட்டு விழா அரசறிவியல் ஒன்றியத் தலைவர் சி.நிமலன் தலைமையில் நாளை வியாழக்கிழமை பி.ப. 2 மணிக்கு பல்கலைக்கழகப் புவியியற்றுறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அரசறிவியற்றுறை தலைவர் பேராசிரியர் அ.வே.மணிவாசகர் வெளியீட்டு உரையையும், ஊடக வள நிலைய இயக்குநர், வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை ஆய்வுரையினையும் வழங்குவார்கள்.

இந் நூல் வெளியீட்டுவிழா இம்மாதம் 23.10.2008 திகதியன்று நடைபெற விருந்து ஒத்திவைக்கப்பட்டது. (அ)

## கனேடிய சேவைகள் நிறுவன விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஒக்.29

கனேடிய பல்கலைக்கழக சேவைகள் நிறுவனம் வடமாகாணத்தில் தனது பத்து ஆண்டு சேவை நிறைவை முன்னிட்டு, யாழ்.கல்வி வலயத்துடன் இணைந்து விளையாட்டுப் போட்டிகளை நடத்தி வருகிறது. போட்டிகளின் இறுதி நிகழ்வு நாளை 30ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கல்விப்பணிப்பாளர் அ.வேதநாயகம் தலைமையில் நடைபெறும் இந்த விளையாட்டு விழாவில் அரசாங்க அதிபர் க.கணேஷ் பிரதம விருந்தினராகவும் கனேடிய பல்கலைக்கழக சேவைகள் நிறுவ[illegible]தின் வதிவிடப் பணிப்பாளர் ஷீலா சவேஜ சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வார்கள். (அ-201)

# நல்லூர் பிரதேச சபை

## 2009 ஆம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் சந்தைகள், இறைச்சிக் கடைகள் என்பவற்றை 2009 ஆம் ஆண்டு தை மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் மார்கழி 31 ஆம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் 14.11.2008 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணி வரை நல்லூர் பிரதேச சபை தலைமைக் காரியாலயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்று மாலை 2.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.

கேள்விப் பத்திரங்கள் மூன்று பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியுட்பட இரு பிரதிகளை செயலாளர், நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். மூன்றாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் கீழ்குறிப்பிட்ட மீளளிக்கப்படாத படிவக் கட்டணமும் மீளளிக்கப்படக்கூடிய வைப்புப்பணமும் செலுத்திப் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் 13.11.2008 ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரங்களை பெறுபவர்கள் தமது அடையாள அட்டையைக்கொண்டு வருதல்வேண்டும்.

கூட்டுறவுச் சங்கங்கள் தவிர்ந்த தனிப்பட்டவர்கள் திருநெல்வேலிச்சந்தை, கொக்குவில் சந்தை என்பவற்றுக்குரிய விண்ணப்பப் பத்திரங்களைப்பெற்றுக்கொள்ள விரும்பின் ஏதாவதொரு வங்கியில் தங்கள் பெயரில் முறையே ரூபா 1, 500,000.00 இற்கும் ரூபா 200,000.00 இற்கும் குறையாது வைப்பில் உள்ளமைக்கான ஆதாரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ செயலாளருக்கு பூரண அதிகாரம் உண்டு. ஏற்றுக்கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித்தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது. தெரிவு செய்யப்படும் சந்தைக்குரிய கேள்விகாரர் கேள்வித்தொகையின் 1/3 பகுதியையும் இறைச்சிக் கடைகளுக்குரிய கேள்விகாரர் கேள்வித்தொகையின் 2/3 பகுதியையும் 24.11.2008 திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ளவேண்டும். மேலதிக விரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

### 2009 ஆம் ஆண்டு சந்தைகள் இறைச்சிக் கடைகளுக்கான குத்தகை அட்டவணை

| இல | சந்தைகள், (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையங்களுடன்), இறைச்சிக்கடைகள் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த தொகை (வற்வரி தவிர்ந்த ரூபா) |
|---|---|---|---|---|
| | **நல்லூர் உப அலுவலகம்** | | | |
| 1. | திருநெல்வேலிச் சந்தை (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையத்துடன்) | 1000.00 | 15,000.00 | 5,837,700.00 |
| | வாகன தரிப்பிடக் கட்டணம் (பலாலி வீதி, ஆடியபாதம் வீதி, பாடசாலை வீதி) | 500.00 | 5000.00 | 100,000.00 |
| 2. | திருநெல்வேலிச் சந்தை ஆட்டிறைச்சிக் கடை இல.1 | 500.00 | 5000.00 | 151,250.00 |
| 3. | திருநெல்வேலிச் சந்தை ஆட்டிறைச்சிக் கடை இல.11 | 500.00 | 5000.00 | 150,700.00 |
| | **கொக்குவில் உப அலுவலகம்** | | | |
| 1. | கொக்குவில் குளப்பிட்டிச் சந்தை (துவிச் சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையத்துடன்) | 1000.00 | 10,000.00 | 286,000.00 |
| 2. | கொக்குவில் சந்தை, மாட்டிறைச்சிக்கடை. | 500.00 | 5000.00 | 204,215.00 |
| 3. | கொக்குவில் சந்தை, ஆட்டிறைச்சிக் கடை. | 500.00 | 5000.00 | 176,710.00 |
| 4. | கொக்குவில் உப அலுவலக மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 5000.00 | 315,700.00 |
| 5. | கொக்குவில் உப அலுவலக ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 5000.00 | 34,100.00 |
| 6. | கோண்டாவில் ஸ்ரேசனடி மரக்கறிச் சந்தையும் மாட்டிறைச்சிக் கடையும் | 500.00 | 5000.00 | 79,310.00 |
| 7. | கொக்குவில் உப அலுவலக இல. 329, பலாலி வீதி ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 5000.00 | 117,700.00 |

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி. 28.10.2008

[illegible]
செயலாளர், நல்லூர் பிரதேச சபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 30.09.2008 அன்று
சிவபதமடைந்த எமது குடும்ப
ஒளிவிளக்கு




அமரர்
## விவேகானந்தன் பூபாலதேவி
அவர்களின்

அந்தியேட்டிக் கிரியைகள் பெரியார் பகுதி,
அல்வாய் கிழக்கில் உள்ள அன்னாரின் இல்லத்தில்
நாளை (30.10.2008) வியாழக்கிழமை காலை
5.00 மணிக்கும், அதனைத் தொடர்ந்து
இடம்பெறும் சபிண்டீகரண
வீட்டுக்கிருத்தியத்திலும் பங்குபற்றுவதோடு மதிய
போசனத்திலும் கலந்து கெண்டு சிறப்பிக்குமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

*பெரியார் பகுதி,*
*அல்வாய் கிழக்கு, அல்வாய்.*

இங்ஙனம்
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## கனகர் இலட்சுமி

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகர் இலட்சுமி நேற்று (28.10.2008) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - பார்வதி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கனகரின் பாசமிகு மனைவியும், சிவக்கொழுந்து, பொன்னி, பூரணம், செல்லம்மா, தங்கம்மா, சின்னத்தம்பி, பொன்னுத்துரை, மணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாக்கியம், குணமணி ஆகியோரின் அன்புத் தாயும், வைத்தி.கந்தசாமியின் மாமியாரும், பிரபா, முகுந்தன், உதயா, கஜந்தன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.10.2008) புதன்கிழமை பி.ப. 1 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உரும்பிராய் கிழக்கு,*
*உரும்பிராய்.*

தகவல்:
வை.கந்தசாமி (மருமகன்).

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# இராணுவ ஆக்கிரமிப்பு மூலம் ஜனநாயகம் மலர்ந்து விடாது

'பயங்கரவாதத்தின்' பிடியிலிருந்து கிழக்கை மீட்டு விட்டாயிற்று என்றும் -

அங்கு இப்போது ஜனநாயகம் மலர்ந்து வருகின்றது என்றும் -

சர்வதேசத்துக்கும் கயிறு விட்டுக் கொண்டிருக்கின்றது கொழும்பு அரசுத் தலைமை.

கிழக்கில் மலர்ந்துள்ள ஜனநாயக நடைமுறைகளைப் பேணி மேம்படுத்துவது என இந்தியாவுடன் சேர்ந்து இணக்கம் வேறு கண்டிருக்கின்றது கொழும்பு.

அண்மையில் இலங்கை ஜனாதிபதியின் விசேட தூதுவராக அவரது ஆலோசகரும் சகோதரருமான பஸில் ராஜபக்ஷ புதுடில்லிக்கு விஜயம் செய்து, அங்கு நடத்திய பேச்சுகளை அடுத்து இலங்கையும் இந்தியாவும் கூட்டாக வெளியிட்ட அறிக்கையில், இப்படி கிழக்கில் ஜனநாயக நடைமுறைகளை மேம்படுத்த இரு நாடுகளும் இணங்கின என்றும் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது.

தமிழர் தாயகத்தைத் தமது ஆயுதப் படைகள் மூலம் கைப்பற்றி, ஆக்கிரமித்து, அங்கு ஓர் இராணுவ அதிகாரக் கட்டமைப்பை நிறுவிக்கொண்டு -

அந்த இராணுவக் கட்டமைப்பின் துணைப்படையாகச் செயற்படும் ஆயுதக் குழுவை - ஒட்டுப்படையை - அங்கு நிலைநிறுத்தி அதிகாரம் பண்ண விட்டபடி -

ஜனநாயகத்தை அங்கு நிலைநிறுத்தி விட்டதாகப் பீற்றிக் கொள்கிறது கொழும்பு. தெரிந்தோ, தெரியாமலோ அந்தக் கயிறுக்கு எடுபட்டு - நம்பி - அந்த 'ஜனநாயக மாய மானின்' பின்னால் தானும் போகிறது இந்தியா.

ஆனால் கிழக்கில் அரசு நிலை நிறுத்தி விட்டதாகக் கூறும் 'ஜனநாயகத்தின்' சீத்துவத்தை இப்போது அம்பலப்படுத்தியிருக்கின்றது நியூயோர்க்கைத் தளமாகக் கொண்டு இயங்கும் மனித உரிமைகள் கண்காணிப்பகம்.

ஆயுதக் குழுக்கள் கிழக்கில் இயங்கும் நிலையில் அங்கு 'ஜனநாயகம்' நிலவுவதாகக் கூறவே முடியாது எனச் சுட்டிக்காட்டியிருக் கின்றது அந்த அமைப்பு.

படையினரும் பொலிஸாரும் பார்த்திருக்க, ஆயுதக் குழுக்கள், பொதுமக்களைப் பொதுக்கூட்டங்களில் பங்குபற்றச் செய்வதற்காகப் பலவந்தமாக பஸ்களில் ஏற்றிச் செல்லும்போது அந்த மாகாண மக்களுக்கு, ஜனநாயகப் பாதுகாப்பு உள்ளதாகக் கூறவே முடியாது என்று சுட்டிக்காட்டியிருக்கின்றார் அந்த அமைப்பின் சட்ட மற்றும் கொள்கைப் பணிப்பாளர் ஜேம்ஸ் றொஸ்.

ஈழத் தமிழர்களின் பாதுகாப்புக் குறித்து தமிழகத்தில் எழுந்துள்ள உணர்வெழுச்சியைக் கண்டித்து மட்டக்களப்பில் கடந்த வார இறுதியில் நடத்தப்பட்ட பொதுக் கூட்டத்துக்கு ஆள்களைத் திரட்டுவதற்காக ஆயுதக் குழுக்கள் பலாத்காரத்தைப் பிரயோகித்தமையைக் குறிப்பிட்டு கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

'ஜனநாயக'த் தரப்புகள் என்ற பெயரில் இலங்கை அரசால் நிலைநிறுத்தப்பட்டிருக்கும் இலங்கை அரசின் 'கைப்பொம்மைகள்', இலங்கை விவகாரத்தில் இந்தியத் தரப்பின் நியாயமான கவலைகள், சிரத்தைகளைக் கண்டித்து ஆட்சேபனைப் பொதுக்கூட்டத்தை நடத்தும் போது -

அந்தக் கைப்பொம்மைத் தரப்புகளுக்கு அதிக அதிகாரங்களை வழங்கி, அவற்றை உயர்த்திவிடும் வகையில், ஜனநாயகத்தை மேம்படுத்துங்கள் என்று இலங்கைக்கு உபதேசித்திருக்கின்றது இந்தியா.

இந்தியாவின் இந்தக் குழப்பமான நிலைப்பாட்டைப் பார்த்து அழுவதா அல்லது சிரிப்பதா என்று தெரியாமல் குழம்புகின்றார்கள் தமிழர்கள்.

கிழக்கில் அண்மைக்காலமாகப் புலிகளின் தாக்குதல்கள் தீவிரமடைந்து வருகின்றன என்பது கண்கூடு.

நேற்றுக் கூட செங்கலடியில் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் கருணா குழுவைச் சேர்ந்த நால்வர் உயிரிழந்திருக்கின்றனர்; ஆறுபேர் வரை காணாமல் போயிருக்கின்றார்கள்.

கிழக்கைப் புலிகளின் பிடியிலிருந்து முற்றாக மீட்டு விட்டாயிற்று என்று கொழும்பு அரசு அறிவித்த பின்னர், அங்கு இடம்பெற்ற இத்தகைய தாக்குதல்களில் பல நூற்றுக்கணக்கான படையினரும், ஒட்டுக் குழுவினரும் உயிரிழந்திருக்கின்றார்கள்.

புலிகளைத் துரத்திவிட்டு - அல்லது அழித்துவிட்டு - ஜனநாயகத்தை நிலைநிறுத்துவது, நிரந்தரத் தீர்வை எட்டுவது, சமாதான முன்முயற்சிகளை மேற்கொள்வது என்றெல்லாம் கூறுவது வெறும் 'கப்ஸா', நடைமுறைச் சாத்தியமற்ற விவகாரம் என்பதற்கு இன்று கிழக்கு மாகாணமே நல்ல உதாரணம்.

இனப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட பிரதான தரப்புகளில் புலிகள் இயக்கமும் ஒன்று. தீர்வுக்கான பேச்சுகளின் போது தமிழர்கள் தரப்பில் பேரம் பேசும் வலிமையுடைய சக்தியாக இருப்பது புலிகள் அமைப்பு மட்டுமே. மற்றையவை எல்லாம் ஆளும் சிங்களப் பேரினவாதத் தரப்பின் கைக்கூலிகளே.

ஆகவே, புலிகள் தரப்பை ஒழித்த பின்னர் சமாதானத் தீர்வு என்பது தமிழர்களின் பலத்தைத் தகர்த்த பின், சிங்களம் போடும் பிச்சையைத் தமிழர்களை வேறு வழியில்லாத இணக்கத் தீர்வாக ஏற்க வைக்கும் எத்தனமாகும்.

அது சாத்தியப்படவே போவதில்லை என்பதற்கு இன்று கிழக்கு நிலைமை நல்ல முன் உதாரணமாகும். தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்ற புலிகளோடு சமரசம் செய்து, பேசிக் காணும் தீர்வே சாத்தியமானதாகவும் நின்று நிலைத்து நீடிப்பதாகவும் இருக்கும்.

# தெற்கில் இளைஞர் மேம்பாட்டுக்கு ஒதுக்கப்படும் நிதி வடக்குக்கு இல்லை

## இளைஞர் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளர் கவலை

யாழ்ப்பாணம், ஒக்.29

தெற்கில் இளைஞர்களின் மேம்பாட்டுக்குப் போதியளவு நிதி ஒதுக் கப்படுகின்றது. அந்த நிதி வடக்குக்கு ஒதுக்கப்படாமையால் இளைஞர்களின் வளர்ச்சிக்குத் தேவையான திட்டங்களை முன்னெடுக்க முடியவில்லை.

இவ்வாறு கவலை வெளியிட்டார் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் ரி.சிவதட்சணாமூர்த்தி.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வேலைத் திட்டம் தொடர்பாக விளக்கமளிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மாவட்ட அலுவலகத்தில் நேற்று செவ்வாயக்கிழமை இடம்பெற்ற மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்தவை:-

பாடசாலையை விட்டு விலகிய கிராமிய மட்டப் பிள்ளைகளின் வளர்ச்சியை மையமாகக் கொண்டுள்ள தேசிய சேவை மன்றம் எமது மாவட்டத்தின் களநிலை காரணமாக தனது தொழிற்பாடுகளை முன்னெடுப்பதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

மன்றத்தின் திட்டங்களைச் செயற்படுத்தக்கூடியதாக ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் இரண்டு உத்தியோகத்தர்கள் வீதம் 28 உத்தியோகத்தர்கள்தேவை. இப்போது 11 உத்தியோகத்தர்களுடன் நாங்கள் அனைத்துக் கடமைகளையும் செய்ய வேண்டியுள்ளது. புதிய நியமனங்கள் வழங்கப்பட்டு கடமைக்கு வந்தவர்கள் எங்களுக்குத் தெரியாமலேயே வேறு தொழில்களுக்குச் சென்று விடுகின்றனர். அண்மையில் இங்கு கடமையேற்ற பட்டதாரிகள் ஒரு சில மாதங்கள் இருந்து விட்டு ஆசிரியர்களாகிச் சென்றுவிட்டனர். எமது ஆளணி குறித்து நாம் உரியவர்க ளுடன் தொடர்பு கொண்டுள்ளோம். எனினும் ஆளணி பூர்த்தியாக்கப்பட்டவில்லை. இப்போது இருக்கும் உத்தியோகத்தர்கள் பல சிரமங்களுக்கு மத்தியில் தமது இலக்கை அடைய வேண்டியுள்ளது. அத்துடன் திட்டங்களை செயற்படுத்துவதற்குப் போதிய நிதிவளம் கிடைப்பதில்லை.

இளைஞர்களைப் பொறுத்தவரை இங்கு நிலைத்து வாழ்ந்து பயிற்சிகளையும் தொழில் முயற்சிகளையும் மேற்கொள்வதில் ஆர்வம் கொண்டவர்களாக இல்லை. தற்போதைய சூழ்நிலை காரணமாக அவர்கள் பெரும்பாலும் வெளிநாடுகளுக்குச் சென்று விடுவதிலேயே குறிப்பாக இருக்கிறார்கள். சமூகப் பொறுப்புகளை ஏற்க முன்வருவதில்லை.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் இளைஞர் பொருளாதார வளத்தை அதிகரித்தல், கல்வித்திறன், குடியியல் நிலைகளை வலுவூட்டல், கலாசார விழுமியங்கள், விளையாட்டுத்துறை எனத் தனது திட்டங்களைச் செயற்படுத்த நடவடிக்கைகள் எடுத்துள்ளது. இந்தத் திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக இளைஞர் மன்றங்களைக் கிராமம் தோறும் உருவாக்க வேண்டிய தேவை உண்டு. 30 இளைஞர், யுவதிகள் கொண்டதாக தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் அமைப்புகளை உருவாக்கி அதனூடாக இளைஞர் யுவதிகளுக்கு பயிற்சி வழங்கவுள்ளோம்.

அரசசார்பற்ற நிறுவனங்கள் கூடிய நிதியுதவிகளை வழங்குவதால் தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் பக்கம் இளைஞர், யுவதிகளது பார்வை - ஈர்ப்பு குறைவாகவே உள்ளது - என்றார். (50-111-236)

# கந்த சஷ்டி பூசைகள்

நீர்வேலி கந்தசுவாமி ஆலயத்தில் இன்று புதன்கிழமை மு.ப. 11 மணிக்குக் கொடியேற்றத்துடன் கந்தசஷ்டிப் பூசைகள் ஆரம்பமாகி அடுத்த மாதம் 6 ஆம் திகதி வியாழக்கிழமை வரை நடைபெறும்.

எதிர்வரும் 4 ஆம் திகதி செவ் வாய்க் கிழமை மு.ப. 10 மணிக்கு வேல் வழங்கும் காட்சியும் பிற்பகல் ஒரு மணிக்கு சூரசங்காரமும் இடம்பெறும். மறு நாள் 5 ஆம் திகதி புதன்கிழமை காலை தீர்த்தத் திருவிழாவும் 6 ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்குத் திருக்கல்யானமும் நடைபெறும். (201-224)

# தேசிய அடையாள அட்டை இல்லாதோரின் விவரங்கள் திரட்டப்படுகின்றன

யாழ்ப்பாணம், ஒக்.29

16 வயதுக்கு மேற்பட்டும் இது வரை தேசிய அடையாள அட்டை இல்லாதவர்களின் விவரங்கள் கிராம அலுவலர் பிரிவு ரீதியாகத் திரட்டப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் காலங்களில் நடைபெறவுள்ள தேர்தல்களில் வாக்களிப்பதற்குத் தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது எனத் தேர்தல் ஆணையாளர் அண்மையில் அறிவித்திருந்தார். இந்த நிலையில் தேசிய அடையாள அட்டை பெறாதவர்களின் விவரங்களை யாழ்.செயலகத்தின் பணிப்புரைக்கு அமையக் கிராம அலுவலர்கள் திரட்டத் தொடங்கியுள்ளனர்.

அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு அவற்றைப் பெற்றுக் கொடுப்பதற்காகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (202-68)

# சிமெந்து விநியோகம் குறித்த அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தால் வழங்கப்பட்ட சிமெந்து பெறுவதற்கான உத்தரவுப் படிவத்தைப் பெற்றவர்கள் இன்று புதன்கிழமை முதல் குறிப்பிட்ட கடைகளில் சிமெந்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்று கழகத் தலைவர் தெரிவித்துள்ளார்.

21.10.2008 வரை விநியோகிக்கப்பட்ட படிவத்தைப் பெற்றவர்களுக்கே இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (202)

# தமிழகக் கட்சிகளின் கோரிக்கைகள் குறித்து இந்தியத் தலைவர்களுடன் எதுவும் பேசவில்லை

## *பி.பி.சிக்கு வழங்கிய செவ்வியில் பஸில் ராஜபக்ஷ*

கொழும்பு, ஒக்.29

இலங்கைப் பிரச்சினை தொடர்பாகத் தமிழக அரசியல் கட்சிகள் முன்வைத்த கோரிக்கைகள் குறித்து இந்தியத் தலைவர்களுடன் எதுவும் பேசவில்லையென நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தனது இந்தியப் பயணம் தொடர்பாக பி.பி.சிக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது செவ்வியில் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தியத் தலைவர்களுடன் இடம்பெற்ற பேச்சுக்களில் நோர்வே குறித்து எதுவும் பேசவில்லை. ஆனால் நோர்வே இந்தியாவுடன் பலமுறை தொடர்புகொண்டு பேசியது என்பது எங்களுக்குத் தெரியும்.

வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களின் அரச அதிபர்களை விரைவில் அழைத்துப் பேசவிருக்கின்றோம். இலங்கைக்கான இந்தியத் தூதுவரும் அதில் கலந்துகொள்வார்.

அங்குள்ள மருத்துவத்துறை, கல்வித்துறை அதிகாரிகளுடனும், அந்தப் பகுதிகளுக்குச் சென்று திரும்பிய ஐ.நா. உதவி அமைப்புக்களைச் சேர்ந்த அதிகாரிகளுடனும் கலந்துரையாடி அங்குள்ள மக்களின் தேவைகளைக் கண்டறிவோம்.

அங்கே தேவையான அளவு உணவுப் பொருள்கள் உள்ளன. அதே சமயம் அங்கு மலேரியாத் தொற்று பரவக்கூடும் என்ற அச்சம் நிலவுகின்றது. அதனைக் கருத்திற்கொண்டு என்ன தேவை என்பதை உறுதி செய்வோம்.

இந்தியா தரக்கூடிய பொருள்களை, வன்னியில் அந்தந்த மாவட்டங்களில் உள்ள அரச நிறுவனங்கள் மூலம் விநியோகிப்போம். இப்பொருள்கள் அனுப்பப்படுவதற்குக் காலக்கெடு எதுவுமில்லை.

**ஐ.நாவும் உதவவுள்ளது**

ஐ.நா.சபையின் சார்பில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் ஒன்று அடுத்தவாரம் இடம்பெறவுள்ளது. இலங்கைக்கு உணவுப் பொருள்களை வழங்குவது பற்றி அதில் பேசவுள்ளார்கள்.

எனது விஜயத்தின்போது இராணுவ உதவிகள் குறித்து இந்தியாவிடம் எதுவும் பேசவில்லை. தமிழக அரசியல் கட்சிகள் இராணுவ நடவடிக்கை நிறுத்தப்பட வேண்டுமென முன்வைத்த கோரிக்கை குறித்தும் பேசவில்லை. இலங்கையில் சமாதானத்தைக் கொண்டுவருவதற்கான வழிவகைகள் குறித்தே விவாதித்தோம் - என்றார். (50)

| நாளை | |
|---|---|
| ஐப்பசி 14 | 30.10.2008 |
| | வியாழக்கிழமை |
| திதி: | பிரதமை |
| | காலை 06.06 |
| நட்சத்திரம் : | விசாகம் |
| | மு.இ. 11.04 வரை |
| சுபநேரம் : | 07.33-09.03 |
| ராகுகாலம் : | 01.33-03.03 |

# 'பாபுல்' வகை பாக்கை தடைசெய்ய வலியுறுத்து

கொழும்பு, ஒக்.29

வாய்ப்புற்றுநோயை ஏற்படுத்தக் கூடிய இரசாயனம் கலக்கப்பட்ட 'பாபுல்' என்றழைக்கப்படும் பாக்கு வகைகள், இலங்கையில் இறக்குமதி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன என்று ஐ.தே.கட்சி எம்.பி. ஜயலத் ஜயவர்த்தன நேற்றுக் கூறினார்.

இந்த வகைப் பாக்குகளை இறக்குமதி செய்து விற்பனை செய்வதற்கு ஆரம்பத்தில் தடை விதிக்கப்பட்டிருந்தபோதிலும் இந்த அரசால் அந்தத் தடை நீக்கப்பட்டுள்ளது என்று அவர் குற்றஞ்சாட்டினார்.

அதிகமான பாடசாலைகளுக்கருகில் அமைக்கப்பட்டுள்ள பெட்டிக் கடைகளில் இந்த 'பாபுல்' விற்பனை செய்யப்படுகிறது என்றும், அதனை வாங்கிப் பாவிக்கும் மாணவர்களும் ஏனையவர்களும் வாய்ப்புற்று நோய்க்குள்ளாகின்றனர் என்றும் அவர் சொன்னார்.

அரசியல் தலையீட்டின் காரணமாகவே 'பாபுல்' இறக்குமதி மீதான தடை நீக்கப்பட்டுள்ளது என்று கூறிய ஜயலத் ஜயவர்த்தன இதற்கான முழுப் பொறுப்பையும் சுகாதார அமைச்சரே ஏற்கவேண்டும் என்று சொன்னார். (-அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சு மூலம் அரசியல் தீர்வு காண்போமென இலங்கை அரசு கூறுவது கேலிக்கூத்தானது

## இப்படிச் சொல்கிறார் கம்யூ. பாண்டியன்



சென்னை, ஒக்.29

ஈழத் தமிழர் பிரச்சினைக்குப் பேச்சு மூலம் தீர்வு காண்போம் என்று இலங்கை அரசு கூறுவது கேலிக்கூத்தானது என்றும், அதுவொரு அரசியல் நாடகம் என்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் தா.பாண்டியன் கூறியுள்ளார்.

அத்துடன், இலங்கை அரசுக்கு இந்தியா ஆயுத உதவி மற்றும் இராணுவ உதவிகளை வழங்கக் கூடாது என்றும் - முதலில் ஈழத் தமிழர் மீது சிங்கள இராணுவம் குண்டுவீசுவதை நிறுத்தி போரை நிறுத்த ஆவன செய்ய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஈழத் தமிழர் பிரச்சினை தொடர்பாக சிறப்புத் தூதராக இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசகரும், சகோதரருமான பஸில் ராஜபக்ஷ கடந்த ஞாயிற்றுக்கிழமை டில்லி வந்து வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி மற்றும் அதிகாரிகளைச் சந்தித்துப் பேசினார். அதைத் தொடர்ந்து பிரணாப் முகர்ஜி சென்னை வந்து முதல்வர் கருணாநிதியைச் சந்தித்து இது தொடர்பாக விளக்கமளித்தார்.

அதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய முதல்வர் கருணாநிதி - தமிழக எம்.பிக்கள் ராஜினாமா குறித்த விடயத்தில் மத்திய அரசுக்குச் சிக்கலை உருவாக்கும் எந்தச் செயலையும் செய்ய மாட்டோம் என்று கூறினார்.

அதுபற்றிக் கருத்துத் தெரிவிக்கையிலேயே பாண்டியன் மேற்கண்டவாறு கூறினார்.

அப்போது மேலும் அவர் கூறியவை வருமாறு-

முதலில் ஈழத் தமிழர்கள் மீது இலங்கை இராணுவம் காட்டுமிராண்டித்தனமாக - கண்மூடித்தனமாகக் குண்டுவீசுவதை நிறுத்தி, போர் நிறுத்தத்திற்கு ஏற்பாடு செய்யவேண்டும். இலங்கைக்கு ஆயுத உதவி எதையும் இந்திய அரசு செய்யக்கூடாது.

ஈழத் தமிழர் பிரச்சினைக்குப் பேச்சு மூலம் தீர்வு காண்போம் என்று இலங்கை அரசு கூறுவது கேலிக்கூத்தானது. அதுவொரு அரசியல் நாடகம் - என்றார்.

எம்.பிக்கள் ராஜிநாமா தொடர்பாக முதல்வர் கருணாநிதி தெரிவித்த கருத்துப் பற்றி குறிப்பிட்ட அவர், அது முதல்வருடைய கருத்து என்றும் அதுபற்றித் தாம் எதுவும் சொல்ல விரும்பவில்லை - என்றார்.

மேலும் அது தொடர்பாக அனைத்துக் கட்சி கூட்டத்தை கூட்டினால் தாம் நிச்சயமாக அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கப் போகிறோம் எனவும், இதுவரை அதுபோன்ற ஒரு அழைப்பு வரவில்லை என்றும் அவர் கூறினார்.

# ஈழத் தமிழருக்கு ஆதரவாக சென்னையில் ஆர்ப்பாட்டம்

ஈழத் தமிழர்கள் மீது அரக்கத்தனமான - மூர்க்கத்தனமான - காட்டுமிராண்டித்தனமான முறையில் தாக்குதல் நடத்தி அவர்களைப் படுகொலை செய்துவரும் இலங்கை இராணுவத்தைக் கண்டித்து நேற்றுமுன்தினம் சென்னையில் மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். அதில் 25 மாணவர்கள் தமிழகப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அண்ணாசாலையில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தின்போது கைதுசெய்யப்பட்ட மாணவர்கள் பின்னர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள், இலங்கையில் தமிழர்கள் கொலை செய்யப்படுகின்றனர் எனவும், அவர்களுக்கான உணவுப் பொருள்களை எடுத்துச் செல்லும் போது இராணுவச் சோதனைச் சாவடிகளில் தடுக்கப்படுகிறது எனவும் குற்றம் சுமத்தினர்.

# உடனடியாக சர்வகட்சிக் கூட்டத்தை கூட்டுமாறு நெடுமாறன் வலியுறுத்தல்



இலங்கையில் உடனடியாகப் போர் நிறுத்தம் செய்ய வேண்டும், இலங்கைக்கு ஆயுத உதவி எதையும் இந்திய அரசு செய்யக்கூடாது என்பன பற்றி வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி எதுவும் கூறாதமை ஏமாற்றமளிப்பதால், அனைத்துக் கட்சிக்கூட்டத்தை உடனடியாகக் கூட்டுமாறு தமிழக முதலமைச்சர் கருணாநிதியிடம் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் பழ. நெடுமாறன் திங்கட்கிழமையன்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு-

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசகரும் சகோதரருமான பஸில் ராஜபக்ஷ டில்லியில் வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜியைச் சந்தித்துப் பேசிய பிறகு அதன் தொடர்ச்சியாக பிரணாப் முகர்ஜி சென்னையில் முதல்வர் கருணாநிதியைச் சந்தித்துப் பேச்சு நடத்திய பின்னர் செய்தியாளர் கூட்டத்தில் அவர் தெரிவித்த விவரங்கள் தமிழர்களுக்குத் திருப்தி அளிக்கவில்லை.

இலங்கையில் உடனடியாகப் போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என்றும், இந்திய அரசு இலங்கைக்கு ஆயுத உதவி செய்யக்கூடாது என்றும் தமிழக அனைத்துக் கட்சிகள் செய்துள்ள முடிவு குறித்து பிரணாப் முகர்ஜி எதுவும் கூறாதமை தமிழக மக்களுக்குப் பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளது.

எனவே, பிரணாப் முகர்ஜியின் அறிவிப்புக் குறித்து விவாதிக்க அனைத்துக் கட்சிக் கூட்டத்தை உடனடியாகக் கூட்டுமாறு முதலமைச்சரை வேண்டிக் கொள்கிறேன் - என்றுள்ளது.

# புன்னகை அரசி சினேகாவுக்கு மாநில அரசின் 'நந்தி' விருது



சிறந்த நடிகைக்காக ஆண்டுதோறும் வழங்கப்படும் ஆந்திர மாநில அரசின் உயர்ந்த விருதான நந்தி விருது இந்த ஆண்டு சினேகாவுக்குக் கிடைத்துள்ளது.

கே.அனில்குமார் தயாரிப்பில் பாபு இயக்கிய படம் 'ராதா கோபாலா'. இப்படத்தில் தெலுங்கு நடிகர் ஸ்ரீகாந்த் கதாநாயகனாக நடிக்கிறார். அவருக்கு ஜோடியாக சினேகா நடித்திருந்தார்.

இப்படத்தில் சட்டத்தரணி வேடத்தில் சினேகா நடித்துள்ளார். சினேகாவின் சிறப்பான நடிப்பாலும், வித்தியாசமான கதையம்சத்தாலும் இப்படம் ஆந்திராவில் பெரும் வெற்றி பெற்றது.

இந்த ஆண்டுக்கான ஆந்திர மாநில அரசின் நந்தி விருதுகள் நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது. அதில் ராதா கோபாலா படத்தில் நடித்ததற்காக சினேகாவிற்கு சிறந்த நடிகைக்கான நந்தி விருது கிடைத்துள்ளது. அடுத்த மாதம் ஐதராபாத்தில் நடைபெறும் பரிசளிப்பு விழாவின்போது இந்த விருது சினேகாவுக்கு வழங்கப்படும்.

இந்த விருது கிடைத்தமை குறித்து சினேகாவிடம் பேசியபோது, ஆந்திர அரசின் உயர் விருதான நந்தி விருது கிடைத்தமை மகிழ்ச்சி அளிக்கிறது. இதுபோன்ற விருதுகள் தொடர்ந்து வித்தியாசமான வேடங்களில் தேர்ந்தெடுத்து நடிப்பதற்கு ஊக்கமளிக்கிறது - என்றார்.

கடந்த ஆண்டு நந்தி விருதை நடிகை த்ரிஷா பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சுவிஸ், ஜேர்மன், டென்மார்க் நாடுகளில் அஜித் நடித்த 'ஏகன்' திரைப்படம் ரத்து




சுவிஸ், ஜேர்மன், டென்மார்க் ஆகிய நாடுகளில் அஜித் நடித்த 'ஏகன்' திரைப்படம் திரையிடப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்த விவரம் வருமாறு-

ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக எதிர்வரும் நவம்பர் முதலாம் திகதி சென்னையில் நடிகர் சங்கம் நடத்தும் உண்ணாவிரதப் போராட்டத்தில் நாங்கள் ஏன் கலந்துகொள்ள வேண்டும் என நடிகர்களான அஜீத், அர்ஜுன் ஆகியோர் கடந்த சில தினங்களுக்கு முன் சங்க நிர்வாகிகளிடம் கேட்டிருந்தனர் என்ற செய்தி வெளிவந்தது.

இச்செய்தி வெளிவந்த சிலமணி நேரங்களில் உலகத் தமிழர்கள் கொந்தளித்தனர். அஜித் நடித்த ஏகன் திரைப்பட இறுவெட்டை கொள்வனவு செய்த வெளிநாடுகளில் வாழும் தமிழ்த் திரையரங்கு உரிமையாளர்கள் இதனால் அதிர்ச்சிக்குள்ளாகினர்.

இதனையடுத்து ஜேர்மன், பிரான்ஸ், சுவிஸ் நாடுகளில் புலப்பெயர் தமிழ்மக்கள் 25.10.2008 சனிக்கிழமையன்று வெளியாகவிருந்த ஏகன் திரைப்படத்தை திரையிடவிடமாட்டோம் என்று ஆர்ப்பரித்தனர்.

இதனால், நடிகர் அஜித் மற்றும் அர்ஜுன் ஆகியோர் உண்ணாவிரதத்தில் பங்கேற்க இணக்கம் தெரிவித்திருந்ததுடன், என்றும் ஈழத் தமிழருக்கு தங்கள் ஆதரவு இருக்கும் என்று கூறினர்.

எனினும் சுவிஸ் வாழ் தமிழர்கள் ஏகன் திரைப்படத்தை திரையரங்குகளில் திரையிட அனுமதி வழங்க மறுத்து கொதித்தெழுந்தனர்.

இம்மக்களின் கொந்தளிப்பைக் கண்டு ஏகன் படத்தை விநியோகம் செய்த IMV ஸ்தாபனத்தினர் இத்திரைப்படத்தைத் திரையிடமாட்டோம் என மக்களுக்கு உறுதிமொழி அளித்து அத்திரைப்படத்தை ரத்து செய்ததோடு மக்களின் நன்மதிப்பையும் பெற்றுள்ளனர்.

இதுதொடர்பாக சுவிஸ் திரையரங்குகளில் "ஏகன்" திரைப்படத்தை வெளியிட இருந்தவரான, கஜன் என்பவரை 'தமிழ்வின்' தொடர்பு கொண்டு கேட்டபோது அவர் இணையத் தளத்திற்குக் கூறியவை வருமாறு-

"ஈழத்தமிழருக்கு ஆதரவு வழங்கி, நடிகர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் உண்ணாவிரதப் போராட்டத்தில் பங்கேற்க மறுத்த நடிகர் அஜித் நடித்த ஏகன் திரைப்படத்தை வெளியீடு செய்யக்கூடாது என சுவிஸ் வாழ் தமிழ்மக்கள் கொதித்தெழுந்ததை அடுத்தே இவ்வாறு முடிவு செய்துள்ளோம்" - எனக் கூறினார்.

இதேவேளை, ஜேர்மன் மற்றும் டென்மார்க் நாடுகளிலும் தமிழ்மக்களின் கொந்தழிப்பை தொடர்ந்து, ஏகன் திரைப்படம் திரையிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# சிறையிலுள்ள சீமான், அமீரைச் சந்திக்க மதுரை விரைந்தனர் திரையுலகத்தினர்

சென்னை, ஒக்.29

சிறையில் அடைக்கப்பட்டுள்ள இயக்குநர்கள் சீமான், அமீரைச் சந்திக்க நேற்று திரையுலகத்தினர் மதுரைக்குச் சென்றுள்ளனர்.

ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக இராமேஸ்வரத்தில் திரையுலகத்தினர் நடத்திய பேரணி பொதுக் கூட்டத்தில் இயக்குநர்கள் சீமான், அமீர் ஆகியோர் நாட்டின் இறையாண்மைக்கு விரோதமாகப் பேசினர் எனக் கைது செய்யப்பட்டனர். பின்னர் இராமநாதபுரம் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு மதுரை சிறையில் அடைக்கப்பட்டனர்.

இவர்களின் கைது திரையுலகினரை அதிர்ச்சி அடையச் செய்தது. இருவர் பேச்சிலும் உள்நோக்கம் இல்லை என்றும் அவர்கள் கைதாகி சிறையில் அடைக்கப்பட்டமை வேதனையளிக்கிறது என்றும் இயக்குநர் பாரதிராஜா கூறியுள்ளார்.

இந்த நிலையில் சீமான், அமீரைச் சந்திக்க பாரதிராஜா, சத்தியராஜ், பார்த்தீபன், சேரன், ஆர்.கே.செல்வமணி உள்ளிட்ட 15 பேர் நேற்று மதுரைக்குப் புறப்பட்டுச் சென்றனர். சிறைக்குச் சென்று சீமான், அமீரைச் சந்தித்துப் பேசிய பின்னர் சீமான் வீட்டுக்குச் சென்று பெற்றோர் மற்றும் உறவினர்களுக்கு ஆறுதல் தெரிவிக்கின்றனர். அதன் பிறகு அமீர் வீட்டுக்கு சென்று அவரது உறவினர்களையும் சந்திக்கின்றார் எனக் கூறப்படுகிறது.



# ஜெயலலிதாவைக் கைதுசெய்யுமாறு யாரும் உத்தரவு பிறப்பிக்கவில்லை

## பொலிஸ் டி.ஜி.பி.ஜெயின் தெரிவிப்பு

சென்னை, ஒக்.29

முன்னாள் முதல்வரும், அ.தி.மு.கவின் பொதுச் செயலாளருமான ஜெயலலிதாவைக் கைதுசெய்யுமாறு எமக்கு யாரும் உத்தரவு பிறப்பிக்கவில்லை - பொலிஸ் டி.ஜி.பி.ஜெயின் மேற்கண்டவாறு உறுதியாகக் கூறியுள்ளார்.

என்னைக் கைது செய்யுமாறு பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கு முதல்வர் கருணாநிதி ஆணையிட்டுள்ளார் என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா குற்றஞ்சாட்டியிருந்தார்.


இந்நிலையில் இந்த விடயம் குறித்து நேற்றுமுன்தினம் வெளியிட்ட செய்திக்குறிப்பிலேயே டி.ஜி.பி. இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் அந்தச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

உயர் அதிகாரிகள் கூட்டம் எதுவும் நடக்கவுமில்லை. கைது குறித்த எந்தவிதமான உத்தரவையும் யாரும் பிறப்பிக்கவுமில்லை.

ஜெயலலிதா பரபரப்பை ஏற்படுத்தவே இவ்வாறு முற்றிலும் உண்மைக்குப் புறம்பான செய்திகளைக் கூறிவருகிறார் - என்றுள்ளது.

# இலங்கையில் போரை நிறுத்த வலியுறுத்துக; கருணாநிதியிடம் ஜி.கே.மணி வேண்டுகோள்



சென்னை, ஒக் 29

இலங்கையில் பற்றி எரிந்துகொண்டிருக்கும் யுத்தத்தை உடனே தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் - அங்கு தீவிரமடைந்துவரும் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண விரைந்து செயற்பட வேண்டும் என்றும் மத்திய அரசை முதல்வர் கருணாநிதி கடுமையாக வலியுறுத்த வேண்டும்.

- இவ்வாறு பா.ம.க. தலைவர் ஜி.கே. மணி கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையில் தமிழர்களை சிங்கள இராணுவம் அரக்கத்தனமாக - விலங்குகளை விடக் கொடூரமான முறையில் கொன்று குவிப்பதைத் தடுத்து நிறுத்தக் கோரி தமிழ் அமைப்புகளின் கூட்டு இயக்கம் சார்பில் சென்னை சேப்பாக்கத்தில் தொடர் முழக்க போராட்டம் நேற்று நடந்தது. புலவர் முத்து எத்திராஜன் தலைமை தாங்கினார்.

இதில் கலந்து கொண்டு பேசிய பின்னர் செய்தியாளர்களுக்குப் பேட்டியளிக்கையிலேயே ஜி.கே.மணி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு-

இலங்கையில் தமிழர்கள் பாதுகாக்கப்பட வேண்டும். போரை உடனே நிறுத்த வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தி தமிழக அரசியல் கட்சிகள் சார்பாக மனித சங்கிலி போராட்டம் நடத்தப்பட்டது.

இலங்கையில் உடனே போரை நிறுத்தவும், அரசியல் தீர்வு காணவும் முயற்சி மேற்கொள்ள வேண்டும். இந்திய அரசு எடுத்துள்ள முயற்சி ஓரளவுக்கு திருப்தியாக இருந்தாலும் மேலும் விரைந்து தீர்வுகாண வேண்டும்.

ஈழத் தமிழர்களுக்கு உணவு, மருந்துகள் நேரடியாகக் கிடைக்கும் வகையில் மத்திய அரசு வழிவகை செய்ய வேண்டும். பிரதமர் மன்மோகன்சிங் இலங்கை சென்றபோது இந்திய இராணுவ வீரர்கள் சிலர் அங்கேயே தங்கிவிட்டனர் எனக் கூறப்படுகிறது. அவர்களை அங்கிருந்து வெளியேற்ற வேண்டும் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சியில் 13 அபிவிருத்திப் பணிகளுக்கு 'கமநெகும' திட்டத்தின்கீழ் 33 லட்சம் ரூபா

யாழ்ப்பாணம், ஒக்.29

வடமராட்சி தெற்கு, மேற்கு (கரவெட்டி) பிரதேச செயலர் பிரிவில் 13 அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கென 'கமநெகும' திட்டத்தின் கீழ் 33 லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தேசநிர்மாண மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு இந்த நிதி ஒதுக்கீட்டைச் செய்துள்ளது.

மணலாவடி கிராமத்தில் பொதுக்கிணறு அமைப்பதற்கு 2 லட்சம் ரூபாவும், உடுப்பிட்டி பைங்கூரன் கிராமத்தில் வாய்க்கால் அமைப்பதற்கு ஒரு லட்சம் ரூபாவும் உடுப்பிட்டி தெற்கு சனசமூக நிலைய திருத்தம் மற்றும் தளபாடங்கள் கொள்வனவுக்கு 2லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் -

உடுப்பிட்டி தெற்கு பொதுநோக்கு மண்டபத்திருத்தம் மற்றும் உபகரணங்கள் கொள்வனவுக்கு 2 லட்சம் ரூபாவும், ஆதியாமலை, தூப்புலம் கிராமத்துக்கு தண்ணீர்த் தாங்கி அமைத்தல், நீர்ப்பாசன வசதி என்பவற்றுக்கு 5 லட்சம் ரூபாவும், இடைக்குறிச்சி சனசமூக நிலையத்திற்கு உபகரணங்கள் கொள்வனவுக்கு ஒருலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சாத்தியத்தோட்டம்கிராமத்துக்கு நீர் விநியோகத்தை விரிவுபடுத்த ஒரு லட்சம் ரூபாவும், சாத்தியத் தோட்டம் முன்பள்ளிக்கு மலசல கூடம் அமைப்பதற்கு ஒரு லட்சம் ரூபாவும், அல்லயைம்பதி கிராமத்தின் பொதுக்கிணறு திருத்துதல், குழாய் நீர் விநியோகம் என்பவற்றுக்கு 6 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் அல்லையம்பதி ஸ்ரீ மித்திரன் முன்பள்ளிக்கு சுற்றுமதில் அமைக்க 3 லட்சம் ரூபாவும்,

ஐயனார் கோயிலடிக் கிராமத்துக்கு தண்ணீர் தாங்கி அமைத்தல், நீர்ப்பாசன வசதி ஏற்படுத்தல் ஆகியவற்றுக்கு 3 லட்சம் ரூபாவும், பொதுக்கிணறு அமைத்தலுக்கு 3 லட்சம் ரூபாவும், அல்வாய் மனோகராக் கிராமத்துக்கு மின்னிணைப்பு வழங்க 2 லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதாகக் கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ். சத்திய சீலன் அறிவித்துள்ளார். (202)

## சொல்வதெழுதல் போட்டி பரிசளிப்பு நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், ஒக்.29

யாழ்.றோட்டறிக் கழகத்தின் அனுசரணையுடன் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஆங்கில மன்றம் பாடசாலை மாணவர்களிடையே நடத்திய சொல்வதெழுதல் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

றொட்டேறியன் கே. பாலசுப்பிரமணியம் தலை மையில் இடம் பெறும் இந்நிகழ்வில் பலாலி ஆசிரிய கலாசாலை ஆங்கிலப் பிரிவு தலைவர் ஐ.இராமச்சந்திரா, யாழ்.வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஆங்கிலம்) எஸ்.தியாகராசா ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொள்வர். (1)




நெல்லியடி ஹற்றன் நஷனல் வங்கியின் நான்காவது ஆண்டு நிறைவு தின நிகழ்வுகளின் ஆரம்பத்தில் வங்கி முகாமையாளர் ப.சங்கர், பிரதிமுகாமையாளர் க.ஸ்கந்தபாபு உட்பட வங்கியாளர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## உரும்பிராய், ஊரெழு, கோப்பாய் விவசாயிகளுக்கு விதை உருளைக்கிழங்கு கடனாக வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஒக்.29

உரும்பிராய், ஊரெழு, கோப்பாய் பகுதிகளிலுள்ள விவசாயிகளின் பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து வெகுவிரைவில் தீர்வு பெற்றுத் தருவதாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மேற்படி பிரதேசங்களின் விவசாயிகள் கடன் மற்றும் மழை என்பவற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் விவசாய உள்ளீடுகளைக் கொள்வனவு செய்து உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதில் நெருக்கடியை எதிர்கொள்வதாக அமைச்சருக்குச் சுட்டிக்காட்டினர்.

குடாநாட்டில் 2008/2009 காலபோகத்தில் பாரிய அளவில் மேற்கொள்ளப்படவுள்ள உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கையில் ஈடுபட தங்களுக்கு விதை உருளைக் கிழங்கினைக் கடனுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கும்படி கோரிக்கை விடுத்தனர். தங்களது உற்பத்திகளை சந்தைப்படுத்தும் போது நியாயமற்ற முறையில் சந்தைவரி அறவீடுகள் இடம்பெற்று வருவதாகவும் இதனால் தாங்கள் மென்மேலும் பாதிக்கப் பட்டுள்ளதாகவும் விவசாயிகள் சுட்டிக் காட்டினர்.

விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு செவிமடுத்த அமைச்சர் விதை உருளைக் கிழங்கைக் கடனாக வழங்குவதற்கு தான் நடவடிக்கை எடுப்பதாகவும், அநேகமாக இலவசமாக வழங்கக்கூடிய வாய்ப்புகள் குறித்து ஆராய்ந்து வருவதாகவும் தெரிவித்ததுடன், யாழ்.தேசவள விவசாயிகள் சங்கத்தில் மேற்படி விவசாயிகளைப் பதிவு செய்துகொள்ளுமாறும் தெரிவித்தார்.

விவசாயக் கடன் மற்றும் மழை காரணமாக ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதாகவும் அதற்கான நிவாரணங்களை வழங்கக்கூடிய வழிவகைகள் குறித்து ஆராய்ந்து உரிய தீர்வொன்றை வழங்குவதாகவும் தெரிவித்துள்ள அமைச்சர் சந்தை வரி தொடர்பில்தான் விரைவில் நியாயமான தீர்வொன்றைப் பெற்றுத் தருவதாகவும் உறுதியளித்துள்ளார் என அமைச்சு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (202)




## பேராசிரியர் நடராஜசுந்தரம் எழுதிய 'முகாமைத்துவ நுட்பங்கள்' நூலுக்கு விருது

மந்திகை, ஒக்.29

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் 2007 ஆம் ஆண்டுக்கான இலக்கிய நூல் பரிசுத் தேர்வில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக முகாமைத்துவத்துறைப் பேராசிரியர் எம்.நடராஜசுந்தரத்தின் 'முகாமை நுட்பங்கள்' நூல் உயர்கல்விக்கான விருதை பெற்றுள்ளது.

வடக்கு ,கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் 2003 ஆம் ஆண்டுக்கான இலக்கிய நூல் பரிசுத்தேர்வில் பேராசிரியர் நடராஜசுந்தரத்தின் 'சர்வதேச நாணய முகாமைத்துவம்' என்னும் நூல் உயர்கல்விக்கான விருதினைப் பெற்றிருந்ததும் குறிப்பிடத்தக்கது.



பேராசிரியர் 'துடுப்பாட்டம்' என்னும் விளையாட்டுத்துறைக்கான அரிய தமிழ் நூலொன்றையும் எழுதி வெளியிட்டிருக்கின்றார்.

தற்போது 'நவீன முகாமைத்துவம்', 'மிலேனியம் வங்கியியல்', 'ஆசிரியர்களுக்கான 100 பண்புகள்' ஆகிய மூன்று நூல்களையும் எழுதி வருகின்றார். இம் மூன்று நூல்களும் வெகுவிரைவில் வெளியிடப்படவுள்ளன . (202-218)

## உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தி

## மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த குடாநாட்டில் 'கெயர்' நிறுவனம் திட்டம்

சங்கானை, ஒக்.29

உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பல்வேறு திட்டங்களைக் குடாநாட்டில் 'கெயர்' நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது.

'கெயர்' நிறுவனத்தின் பிரதித் திட்டப் பணிப்பாளர் திருமதி ஞானேஸ்வரன் ஜோய்றோஸ் இத்தகவலைத் தெரிவித்தார்.

வலிகாமம் மேற்கு சங்கானைப் பிரதேச செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற 'கெயர்' சர்வதேச 'லிவ்ற்' திட்டம் - 2 கலந்துரையாடலின்போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

பிரதேச செயலர் திருமதி தே.பாபு தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

உள்ளூரில் உள்ள சனசமூக நிலையங்கள், மாதர்சங்கங்கள், சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற அமைப்புகள் மூலம் எமது நிறுவனம் தமது செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது.

மக்களின் ஜீவனோபாய,வாழ்வாதாரப் பாதுகாப்பு, சமூக மட்ட உறவுப்பாலத்தை கட்டியெழுப்புதல், சூழல் மாற்றம், அனர்த்த நேரங்களில் தயார்நிலையில் இருத்தல், திட்டங்களைச் செயற்படுத்த தந்திரோபாய அணுகுமுறைகள் போன்றவற்றை நடைமுறைப்படுத்தி வருகின்றோம்.

உள்ளூரில் அரச திணைக்களங்களுடன் இணைந்து மக்களுக்கான சேவைகளை எதுவித பலாபலன்களையும் எதிர்பாராது நிறைவேற்றி வருகின்றோம். அந்தந்த இடங்களில் உள்ளவர்களுக்கு அந்தந்த இடங்களிலேயே சிறுசிறு வேலைவாய்ப்புகளை அளித்து அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முயல்கின்றோம்.

உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களை உள்ளடக்கி அவற்றின் மூலம் எமது திட்டங்களின் பலாபலன்களை மக்களுக்கு அளித்து வருகிறோம்.

அராலி, பொன்னாலை போன்ற கரையோரக் கிராம மக்களின் மேம்பாட்டை முன்னிறுத்தி இந்த 'லிவ்ற' 2 திட்டத்தினை இங்கு ஆரம்பித்துள்ளோம் - என்றார்.

இந்நிகழ்வில் வலிகாமம் மேற்கு பிரதேச சபை செயலாளர் ரி.புத்திசிகாமணி, கிராம அலுவலர்கள் மற்றும் பொது நிறுவன அமைப்பு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டு தமது கருத்துக்களையும் எடுத்துரைத்தனர். (202-29)

## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக்.29

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் மானிப்பாய் கொத்தணியின் ஏற்பாட்டில் ஸ்தாபகத் தலைவர் சு.நடேசு, முன்னாள் பொது முகாமையாளர் அமரர் க.சந்திரராசா ஆகியோரின் நினைவுதின நிகழ்வும் முன்பள்ளிகளுக்கு 'பாண்ட்' வாத்தியக் கருவிகள் வழங்கும் நிகழ்வும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளன.

முற்பகல் 10 மணிக்கு கலையரங்க மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுகளுக்குக் கொத்தணித் தலைவர் க.மெய்யழகன் தலைமை வகிப்பார். பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் கே.கணேஸ் கலந்து கொள்வார். (202)

* * *

யாழ்ப்பா ணம், ஒக்.29

வல்வெட்டித்துறை தர்மகுலசிங்கம் சனசமூக நிலையம் கலைஞர்கள், சமூகத் தொண்டர்கள், கல்விச் சாதனையாளர்கள் ஆகியோரைக் கௌரவிக்கவுள்ளது.

இக்கௌரவிப்பு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நிலையத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் கி.இராசதுரை தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் வெ.சுப்பிரமணியம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (202-70)




வடமராட்சி வடக்கு, பருத்தித்துறைப் பிரதேச செயலகம் நடத்திய முதியோர் தின விழாவில் எடுக்கப்பட்ட படங்கள் இவை.நிகழ்வில் பிரதம விருந்தினரான கைதடி முதியோர் இல்ல அத்தியட்சகர் என்.இராஜலிங்கம் உரையாற்றுவதை முதலாவது படத்தில் காணலாம். பருத்தித்துறைப் பிரதேச செயலர் இரா. வரதீஸ்வரன், சாந்திகம் நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் எஸ்.வி.சங்கரப்பிள்ளை ஆகியோர் முதியோர்களுக்குப் பரிசில் வழங்கிக் கௌரவிப்பதை அடுத்துள்ள இரு படங்களிலும் காணலாம். (படங்கள்: [illegible]தா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குருதி வழியும் துயரம்

ஒருநாள் காலையில் படுக்கையிலிருந்து எழும்பும் போது உங்கள் உடலெல்லாம் குருதியில் குளித்திருந்தால் உங்கள் மனநிலை எப்படி இருக்கும்? அது உங்கள் உடலில் இருந்து வழிந்த குருதி எனவும், உடலில் காயம் ஏதும் ஏற்படாமலேயே உங்கள் உடலிலுள்ள குருதி வழிந்து கொண்டிருக்கிறது என்பதையும் அறிந்தால் உங்கள் அதிர்ச்சி எந்தளவுக்கு இருக்கும்? அந்தப் பேரதிர்ச்சியில் இருக்கிறாள் பதின்மூன்றே வயதான சிறுமி டிவிங்கில் திவேதி. கண்கள், தலை, மூக்கு, காது, கை, கால்கள் என உடலின் சகல பாகங்களில் இருந்தும் திடீரென குருதி வழிய உடலில் குருதி யின் அளவு குறைந்துபோய் பலவீனமும், வலியுமாய் கடந்த ஒரு வருடமாகக் கடின வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறாள் இந்தச் சிறுமி. வெளிநாடுகளுக்குச் சென்றெல்லாம் மருத்துவம் பார்க்குமளவுக்கு வசதியற்ற இந்தச் சிறுமி வசிப்பது இந்தியாவின் உத்தரப்பிரதேசத்தில். தன் மகளைக் காப்பாற்ற வேண்டுமே என தாய் தவியாய் தவித்துக் கொண்டிருக்க, என்ன செய்வதென்றே தெரியாமல் திகைத்து நிற்கிறார் இவருடைய சகோதரி.

கோயில்கள், மசூதிகள், தேவாலயங்கள் என மத வேறுபாடின்றி விண்ணப்பங்கள் வைத்தாயிற்று. ஏதேனும் ஒரு கடவுள் மனமிரங்கி இந்த நோயைக் குணமாக்க மாட்டாரா எனும் ஏக்கத்தில் தவிக்கிறாள் சிறுமி. ஒருநாள் ஐந்து தடவை முதல் இருபது தடவைகள் வரை உடலில் இருந்து குருதி வழிய துயரத்துடன் கழிகின்றன இவளுடைய பொழுதுகள்.

இப்படி ஒரு நோய் இருப்பதனால் பள்ளிக் கூடத் திலிருந்தும் வெளியேற்றப்பட்டு தனியே வீட்டில் அமர்ந்து படிக்கும் நிலை இவளுக்கு. நண்பர்கள் யாரும் இல்லை, வந்து நட்புடன் உரையாடுவார் யாருமில்லை என நோயின் வலியை, நிராகரிப்பின் வலி மிஞ்சுகிறது. இது "ரைப் 2 வான் வில் பிராண்ட்" நோயாக இருக்கலாம் என லண்டன் மருத்துவர் டிரியோ புரோவன் தெரிவிக்க 'ரைப் 2 பிளாட்லெட் டிஸார் டிராய்' நோயாக இருக்கலாம் என அகில இந்திய மருத்துவக் கழகம் தெரிவிக்க ஊரில் உள்ளவர்களோ இது கடவுளின் சாபம் எனச் சிறுமியின் குடும்பத்தினரை நோக்கிக் கூச்சலிடுகின்றனர். ******

## என் அன்புத் தோழியே.....!

என் உயிரினும் மேலான
தோழியே உன்னைக் கவிதையில்
வடிக்க ஆசைப்பட்டேன்
வார்த்தைகள் வரவில்லை.
அதனால்தான் பதில் எழுத முடியவில்லை
காதல் மடல் எழுதிய எனக்கு
நட்பின் வரிகள் கிடைக்கவில்லை.
காதலுக்கு இசைந்த பேனா
நம் நட்பிற்கு அசைய மறுக்கிறது.
அதற்கும் காதலால் வேதனையோ
என்னவோ இருந்தாலும் உனக்காக
ஒரு நிமிடம் அசைகிறது.
காதலால் கல்வி இழந்த
எனக்கு புதிதாக ஏடு தொடக்கி
கல்வி காட்டிய என் உயிர்த்
தோழிக்காக இசைந்திருக்கிறது.
காதல் வரியைத் தேடிய இதயம்
தற்போது நட்பின் வரியைத்தேடி
உன் பக்கம் சாய்கிறது. நட்பின்
வரியைத் தேடுகின்ற என் இதயத்திற்கு
நீ கொடுக்கும் பதில் என்ன?
நீ கொடுக்கும் அந்த வரிகள்தான்
என் இறுதி மூச்சு வரை உன்
நட்பை சுமந்து செல்லும்.
இன்று என்கைகள் உனக்காக
இறைவனிடம் கையேந்தி நிற்கிறது,
பல்லாண்டு காலம் பலகோடி செல்வம்
பெற்று என்றும் இன்முகத்துடன்
வாழ வேண்டும் என்று
வாழ்க! வாழ்க! வாழ்க!

நட்புக்காக
**பிரதாப்**, அளவெட்டி.

# நட்சத்திரங்கள் பேசுகின்றன



பூமியில் உள்ள பல்வேறு கூறுகளும் தமக்கெனப் பிரேத்தியேகமான ஒலி எழுப்பும் இயல்பைக் கொண்டிருப்பதுபோல விண்வெளியில் உள்ள நட்சத்திரங்களும் தமக்கெனப் பிரேத்தியேகமான (நமது சூரியன் உட்பட) ஒலிகளை எழுப்புகின்றன என்று விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

நட்சத்திரங்கள் எழுப்பும் ஒலிகள் நட்சத்திரத்துக்கு நட்சத்திரம் அவற்றின் வயது, பருமன் மற்றும் இரசாயனக் கட்டமைப்புக்கள் குறித்து வேறுபடுகின்ற அதேநேரம், அவ்வொலிகள் குறிப்பிடத்தக்க அளவுக்கு சீரான சந்த ஒழுங்கைக் காண்பிப்பனவாகவும் இருக்கின்றன.

விண்வெளியில் சஞ்சரிக்கும், பிரான்ஸ் நாட்டின் 'கரொட்' விண்வெளி தொலைநோக்கியின் உதவி கொண்டு விஞ்ஞானிகள் நட்சத்திரங்களில் இருந்து எழுப்பப்படும் ஒலிகள் குறித்த தகவல்களைப் பெற்றிருப்பதுடன் அவற்றை நாம் கேட்கக் கூடிய வகைக்கும் ஒலிப்பதிவு செய்து தந்துள்ளனர்.

இவ்வாறு நட்சத்திரங்கள் தமக்கெனப் பிரேத்தியமாக எழுப்பும் ஒலியின் இயல்புகளைக் கொண்டு நட்சத்திரங்களில் நிகழும் செயற்பாடுகள் பற்றிய மேலதிக தகவல்கள் பலவற்றை அறிவியல் ரீதியாக அணுகிக் கண்டறிய வாய்ப்பிருப்பதாக அறிவியலாளர்கள் கூறுகின்றனர். ******




# அஞ்சல் சேவை உலகில் எவ்வாறு ஆரம்பமானது

தபால் அல்லது அஞ்சல் எவ்வாறு ஆரம்பித்தது என்பது ருசிகரமான சங்கதி. ஆதிகாலத்தில் தூதுவர்கள் மூலமே அரசர்களும் அதிகாரவர்க்கத்தினரும்செய்திகளையும் தகவல்களையும் பரிமாறிக் கொண்டார்கள் என்று அறிகிறோம். செய்திகளை அனுப்புவதற்கு பழக்கப்பட்ட பறவைகளை - புறாக்களையும் பிற்காலத்தில் பயன்படுத்தி இருக்கிறார்கள்.

தூதுவர்கள் மூலம் செய்திகளை அனுப்பும் அடிப்படையை வைத்துத்தான் பிரபல்யமான இலக்கியங்கள் எழுந்துள்ளன. காளிதாசனின் மேகதூத் - மேக விடுதூது இந்த வகையைச் சேரும். அன்னப் பறவையைத் தூதாக அனுப்பிய காவியம் நள - தமயந்தி சரித்திரம் ஆகும். இராமனின் தூதுவனாக ஆஞ்சனேயர் இலங்கைக்குச் சென்றதெல்லாம் நாம் அறிந்தவையே. ஆனால் தற்காலத்தில் உலகம் முழுவதும் செயற்பட்டுவரும் அஞ்சல் முறையானது மேலை நாடுகளில்தான் ஆரம்பிக்கப்பட்டது.

ஆரம்பகாலத்தில் பேர்ஸியாவிற்கும் ரோமாபுரிக்கும் இடையில் செய்திகளை பரிமாறிக் கொள்ள அரசாங்கங்களே ஏற்பாடுகளை செய்திருந்தன. ஆனால் அவை அரச காரியங்களுக்காக மட்டுமே மேற்கொள்ளப்பட்டன.

### மத்திய காலத்தில் அஞ்சல் சேவை

மத்திய காலத்தில் வர்த்தக நிறுவனங்களும், அமைப்புகளும் சில பல்கலைக் கழகங்களும் கூட தமது உறுப்பினர்களின் பயன்பாட்டுக்கு மட்டுப்படுத்திய அளவில் அஞ்சல் சேவைகளை நடத்தியிருக்கிறார்கள்.

16 ஆம் நூற்றாண்டில்தான் அரசுகள் முழு அளவில் ஒழுங்கான அஞ்சல் சேவைகளை நடத்த ஆரம்பித்தன.




அதற்கு மூன்று முக்கிய காரணங்கள் கூறப்பட்டன. முதலாவதாக இரகசிய செய்தித் தொடர்புகளைக் கண்டறிவது, இரண்டாவது: வருமானத்தை உருவாக்கிக் கொள்வதற்கு. மூன்றாவது, பொதுமக்களுக்கு ஒரு சேவையை வழங்குவது. மூன்றாவது காரணத்துக்காகவே இன்று அஞ்சல் சேவை முற்று முழுதாக நடத்தப்பட்டு வருகின்றது.

இங்கிலாந்தில் VIII ஹென்றி அரசர் காலத்தில் அஞ்சல் சேவையொன்று செயற்பட்டுள்ளது. பிற்கால அரசர்களால் இது விரிவுபடுத்தப்பட்டிருந்தது.1906 ஆம் ஆண்டு காலத்தில் அரச அதிகாரம் வழங்கப்படாத எவரும் செய்திகளை எடுத்துச் செல்ல முடியாது. 1680 ஆம் ஆண்டில் லண்டன் வணிகர் ஒருவர் நகருக்குள்ளேயும் புறநகர்ப் பகுதிக்குமென தனது சொந்தப் பொறுப்பில் 'பெனி' தபால் சேவை ஒன்றை ஆரம்பித்தார். அது மிக வெற்றிகரமாகச் செயற்பட்டது. எனவே அரசாங்கமே அதனைப் பொறுப்பேற்று நடத்தத் தொடங்கியது. 1801 ஆம் ஆண்டு வரை இது நீடித்தது. 1840 ஆம் ஆண்டு இது மாற்றம் பெற்றது. முத்திரை ஒட்டும் முறை அறிமுகமானது, தூரம் மற்றும் தபாலின் பாரத்தைப் பொறுத்து முத்திரையின் மாதிரியும் பெறுமதியும் மாற்றி அமைக்கப்பட்டது. பெரிய பிரித்தானியாவின் இந்த அஞ்சல் முறையை பிறகு ஏனைய எல்லா நாடுகளும் பின்பற்றத் தொடங்கின. ***

**- ரம்யன்-**

# ஆண்களின் தலைமுடி உதிர்விற்கு யார் காரணம்?

ஆண்களுக்குத் தலையில் முடி உதிர்வதற்குத் தாயும் ஒரு காரணம் எனக் கூறுவார்கள். அதாவது தாயிடமிருந்து பெறப்படும் X வகை நிறமூர்த்தத்தில் (Chromosome) உள்ள பரம்பரை அலகே (Gene) ஆண்களின் வழுக்கைக்குக் காரணம்.



தாய்மாரே! பயந்துவிடாதீர்கள். மேற்சொன்ன கருத்தே உண்மையானது என இதுவரை காலமும் நம்பப்பட்டு வந்தது. ஆனால் இப்போது வேறு ஓர் அறிவியல் ஆராய்ச்சித் தகவலை விஞ்ஞானிகள் வெளியிட்டுள்ளனர்.

X நிறமூர்த்தத்தில் உள்ள பரம்பரை அலகுக்கு நிகராக மனிதனில் உள்ள 23 சோடி நிறமூர்த்தங்களில் 20 சோடியில் உள்ள பரம்பரை அலகுகளும் செல்வாக்குச் செலுத்துகின்றன என்ற தகவல் தற்போது வெளியிடப்பட்டிருக்கின்றது. தந்தை வழியில் இருந்தும் தாய் வழியில் இருந்தும் [illegible] பரம்பரை அலகுகளால் கூட முடி உதிர்தல் தூண்டப்படலாம்.

அந்த வகையில் ஆண்களில் முடி உதிர்தலுக்கு தாய்வழி X நிறமூர்த்தத்தில் உள்ள பரம்பரை அலகு மட்டுமன்றி தந்தை வழி பரம்பரை அலகுகளும் காரணமாக இருக்கின்றன என்பதால் தந்தைக்கு முடி உதிர்தல் அல்லது வழுக்கை இருக்கும் பட்சத்தில் மகனுக்கும் இருக்க அதிக வாய்ப்புள்ளது.

அதுமட்டுமன்றி ஆண்களில் சுமார் 14% பேர் மேற்குறிப்பிட்ட இரண்டு வகை பரம்பரை அலகுகளிலும் முடி உதிர்தலைத் தூண்டும் அலகுகளைக் கொண்டிருக்கின்றனர். இப்பரம்பரை அலகுகளின் தாக்கத்தால் முடி உதிர்தல் பிரச்சினை 7 மடங்கு அதிகரித்தளவில் இளமைக்காலத்திலேயே ஏற்பட வாய்ப்பிருப்பதாகக் குறித்த ஆய்வில் இருந்து கண்டறிந்துள்ளனர்.

மேலும் ஏதாவது ஒரு முடியுதிர்தல் பரம்பரை அலகுடன் சுமார் 40 % ஆண்கள் இருக்கின்றனர்.

எனவே மரபணு அலகு அல்லது பரம்பரை அலகு 'ஸ்கானின்' மூலம் பெறப்படும் தகவல்களைக் கொண்டு முன் கூட்டிய முடி உதிர்தலைத்தடுக்க மரபணுச் சிகிச்சை (Gene Therapy) உட்பட பலவகை சிகிச்சை முறைகளை ஆரம்பிக்க முடியும் அல்லது முடி மீள நாட்டல் மூலம் முடியை வளர்க்க முடியும் என்று ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

**************

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14 வயதுப் பிரிவு உதைபந்தாட்டம்

# பரபரப்பான இறுதிப்போட்டியில் பற்றிக்ஸ் கல்லூரி சம்பியனானது

வலி.வடக்கு, ஒக்.29

யாழ்ப்பாணக் கல்வி வலயப் பாட சாலை அணிகளுக்கு இடையே இடம் பெற்ற 14 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டப் போட்டியில், யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி, கல்வி வலயச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப்போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரியும், சென். சாள்ஸ் வித்தியாலயமும் மோதிக்கொண்டன.

இரு அணிகளும் போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை ஓர் அணிக்கு மற்றைய அணி எந்த வகையிலும் சளைத்தது அல்ல என்பதை நிரூப்பது போல விளையாடின.

முதல்பாதி ஆட்டம் நிறுத்தப்படும் வரை இரு அணிகளும் கோல்களைப் பெறுவதற்கு பெரு முயற்சி மேற்கொண்ட போதிலும் அது கைகூடாத நிலையே காணப்பட்டது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பித்ததும், இரு அணிகளும் மாறிமாறி கோல் கம்பத்தை நோக்கிப் பந்தை நகர்த்திய போதிலும், கோல் பெறும் முயற்சி கை கூடாத நிலைமையே தொடர்ந்த தொடர்ந்தது.

இதற்கு முற்றுப்புள்ளி வைப்பது போல் சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் முன் கள வீரர் ஒருவர் பந்தை தூக்கி அடித்து தனது அணிக்கு கோல் ஒன்றைப் பெற்றுக்கொடுத்தார்.

ஆட்டத்தின் இறுதியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் சென். சாள்ஸ் வித்தியாலயத்தை வெற்றி கொண்டு, யாழ். கல்வி வலயச் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

மூன்றாம் இடத்துக்கான போட்டியில் யாழ். மத்திய கல்லூரியும் யாழ். இந்துக் கல்லூரியும் மோதிக் கொண்டன. இதில் மத்திய கல்லூரி 2:0 என்ற கோல் கணக்கில், இந்துக் கல்லூரியை வெற்றி கொண்டு 3 ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. (4-86)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ். நகர் றோட்டறக்ட் கழகம், யாழ்ப்பாணப் பாடசாலை அணிகளுக்கிடையே நடத்திவரும் கூடைப்பந்தாட்டப் போட்டியில், இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாண கல்லூரியின் கூடைப் பந்தாட்டத்திடலில் இடம்பெறவுள்ள அரையிறுதி ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

**பெண்கள் அணி**

* வேம்படி பெண்கள் உயர்தரப் பாட சாலை எதிர் திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலை.

**ஆண்கள் அணி**

* வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி எதிர் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.

## கூடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# நெல்லியடி ம.ம.வி. அணியை வீழ்த்தி வெற்றியைத் தனதாக்கியது மகாஜனா

வலி.வடக்கு, ஒக்.29

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில், யாழ்ப்பாணப் பாடசாலைகளின் 13வயதுப்பிரிவினர்களுக்குஇடையேஇடம் பெறும் கிரிக்கெட் போட்டி ஆட்டமொன்றில் நெல்லியடி ம.ம.வியை, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி வெற்றி கொண்டுள்ளது.

மகாஜனக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய நெல்லியடி ம.ம.வி, 39 ஓவர்கள் நிறைவில் 96 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

ஜனன் ஐந்து நான்குகளுடன் 23 ஓட்டங்களையும், இந்துஜன் 13 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். உதிரிகளாக 32 ஓட்டங்கள் பெறப்பட்டன.

மகாஜனக் கல்லூரி சார்பில் கஜந்தன் 10 ஓவர்கள் பந்து வீசி 03 ஓட்டமற்ற ஓவர்களுடன் 18 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுக்களையும், பிரசாந் 08 ஓவர்கள் பந்து வீசி 02 ஓட்ட மற்ற ஓவர்களுடன் 12 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும், அபிராம் 7 ஓவர்கள் பந்து வீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 19 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கல்லூரி 40.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 103 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

மயூரன் ஏழு நான்குகளுடன் 47 ஓட்டங்களையும், ரிசோத் 13 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். 27 ஓட்டங்கள் உதிரிகளாகக் கிடைத்தன.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தின் சார்பில் ஜனன் 12 ஓவர்கள் பந்து வீசி, 04 ஓட்டமற்ற ஓவர்களுடன் 28 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுக்களையும், விதுசன் 6.5 ஓவர்கள் பந்து வீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 12 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டையும், தனுஜன், வினித்குமார் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய நெல்லியடி ம.ம.வி. அணி, 26.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 74 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது.

மதுஜன் மூன்று நான்குகளுடன் 16 ஓட்டங்களையும் தனுஜன் மூன்று நான்குகளுடன் 14 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

மகாஜனக் கல்லூரி சார்பில் ஜனந்தன் 10 ஓவர்கள் பந்து வீசி 05 ஓட்டமற்ற ஓவர்களுடன் 15 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டையும், அபிராம் 06 ஓவர்கள் பந்துவீசி 14 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டையும் சாய்த்தனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கல்லூரி 10 ஓவர்களில் 03 விக்கெட்டை இழந்து 39 ஓட்டங்களைப் பெற்றநிலையில் ஆட்டம் நிறைவுபெற்றது.

இந்த நிலையில், முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெற்ற மகாஜனக் கல்லூரி அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப் பட்டது.(4-86)

# மகாஜனக் கல்லூரி நடத்திய சதுரங்கப் போட்டியின் முடிவுகள்

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவினையொட்டி, சுன்னாம் மக்கள் வங்கி அனுசரணையுடன், வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளின் சதுரங்க அணிகளுக்கிடையே நடத்திய போட்டியின் முடிவுகள் வருமாறு:-

**9 வயதுப் பிரிவு(ஆண்)**

ச.லக்ஷன்(மகாஜனக் கல்லூரி), ச.அபிசரன் (மகாஜனக் கல்லூரி), து.லக்ஷன் (மகாஜனக் கல்லூரி)

**9 வயதுப் பிரிவு (பெண்)**

ம.துஷாரா (மகாஜனக் கல்லூரி)

**11 வயதுப் பிரிவு (ஆண்)**

ர.நிரூபன் (பன்னாலை சோ். கனகசபை வித்தியாலயம்), க.துளபிகன்(மகாஜனக் கல்லூரி) , க.சஜீபன் (மகாஜனக் கல்லூரி).

**11 வயதுப் பிரிவு (பெண்)**

து.துவாரகா(மல்லாம் கனிஷ்ட வித்தியாலயம்), மே.ஆரபி(மல்லாம் கனிஷ்ட வித்தியாலயம்), சி.மதுசனா (மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்).

**15 வயதுப் பிரிவு (ஆண்)**

ம.பிறைசூடன் (மகாஜனக் கல்லூரி), சி.தனுராஜ் (சுதுமலை வடக்கு தமிழ்க் கலவன் வித்தியாலயம்), ம.நிருஷன் (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி).

**15 வயதுப் பிரிவு (பெண்)**

ம.தரண்யா(மகாஜனக் கல்லூரி), ச.அபிசயணி (மகாஜனக் கல்லூரி), செ.நிரோஷிகா (சுதுமலை வடக்கு தமிழ்க்கலவன் வித்தியாலயம்).

**15 வயதுப் பிரிவு (ஆண்)**

பா.விஜிதரன்(மகாஜனக் கல்லூரி), இ.ஜனார்த் தனன்(மகாஜனக் கல்லூரி), ப.பிரகாந் (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி).

**15 வயதுப் பிரிவு(பெண்)**

க.டயோனி(சுதுமலை வடக்கு தமிழ்க் கலவன் வித்தியாலயம்), யோ.தனுஜா(சுதுமலை வடக்கு தமிழ்க்கலவன் வித்தியாலயம்)., க.அபிராமி (சுதுமலை வடக்கு தமிழ்க்கலவன் வித்தியாலயம்).

**17 வயதுப் பிரிவு (ஆண்)**

கெ.ஜெயநேரியோ(மகாஜனக் கல்லூரி), இ.பகீரதன்(மகாஜனக் கல்லூரி), ச.யது குலன்(மகாஜனக் கல்லூரி).

**17 வயதுப் பிரிவு (பெண்)**

வ.கஸ்தூரி(சுதுமலை வடக்கு தமிழ்க் கலவன் வித்தியாலயம்),சு.சோபிகா (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), ரி.அகிலினி (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி).

**19 வயதுப் பிரிவு (ஆண்)**

சி.பவகணேஸ், ஜெ.பிரதாபன், அ.கிரிசாந்தன்(தெல்லிப்பழை யூனியன் கல்லூரி)

**19 வயதுப் பிரிவு (பெண்)**

பா.ஜெனித்தா(மகாஜனக் கல்லூரி), சி.லக்ஷிகா(மகாஜனக் கல்லூரி), சி.செல்வரஞ்சினி (மல்லாகம் மகா வித்தியாலயம்).

# சாதனைகள் நிலைநாட்டிய சம்பியன்கள்



யாழ்ப்பாணப் பாடசாலைகள் கூடைப் பந்தாட்டச் சங்கத்தினால் நடத்தப்பட்ட கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் மாவட்ட ரீதியில் 17 வயதுப் பெண்கள் அணியில் சம்பியனான திருக்குடும்பக் கன்னியர்மடம் பாடசாலை அணியினரைப் படத்தில் காணலாம். (படம்: நேசன்)



வடமாகாண சாரணர்களுக்கிடையே நடத்தப்பட்ட பெரு விளையாட்டுப் போட்டியில் சம்பியன் பட்டத்தை வென்ற தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயச் சாரணர் அணியினரை பாடசாலை அதிபர், சாரணர் பொறுப்பாசிரியர், உதவி ஆசிரியர்களுடன் படத்தில் காணலாம். (படம்: சுந்தா)



தேசிய மட்டத்தில் வெண்கலப் பதக்கம் பெற்று, வெற்றிவாகை சூடிய மானிப்பாய் மகளிர் கல்லூரி உடற்பயிற்சி அணியினரை, பாடசாலை அதிபர், ஆசிரியர்களோடு படத்தில் காணலாம். (படம்: நேசன்)

## 17 வயதுப் பிரிவில்

# சிறந்த பந்து வீச்சாளர், சிறந்த துடுப்பாட்ட வீரர் மகாஜனாவிலிருந்து மாவட்ட ரீதியில் தெரிவு



கே.கபிலன் டிலக்ஷன்

வலி வடக்கு, ஒக்.29

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில், யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்ட 17 வயதுப் பிரிவினர்களுக்கான கிரிக்கெட் போட்டிகளின் அடிப்படையில், மாவட்ட ரீதியில் சிறந்த பந்து வீச்சாளராகத் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியைச் சேர்ந்த டிலக்ஷனும், அதே பாடசாலையைச் சேர்ந்த கபிலனும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

சிறந்த பந்து வீச்சாளராகத் தெரிவு செய்யப்பட்ட ஸ்ரீதரன் டிலக்சன் 5 போட்டிகளில் 15 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளார். இவர் இரண்டு தடவைகள் 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

சிறந்த துடுப்பாட்ட வீரராகத் தெரிவு செய்யப்பட்ட கபிலன் 5 போட்டிகளில் துடுப்பெடுத்தாடி 237 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டுள்ளார். இதில் ஒரு சதமும், ஒரு அரைச்சதமும் அடங்குகின்றன. இவர் ஒரு போட்டியில் 125 ஓட்டங்களைத் தன்னுடைய அதிகபட்ச ஓட்டங்களாகப் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (4-86)

# அதிரடியான ஆட்டத்தால் சம்பியனானது 'ஃபோர் ஸ்ரார்' விளையாட்டுக்கழகம்

யாழ்ப்பாணம், ஒக்.29

'யங் ஃபைற்றேர்ஸ்' விளையாட்டுக் கழகம் நடத்திய மென்பந்துச் சுற்றுப் போட்டியில் 'ஃபோர் ஸ்ரார்' விளையாட்டுக் கழகம் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

தலா 7 பேர் கொண்டதும், 5 பந்துப் பரிமாற்றங்களை உள்ளடக்கியதுமான இந்த மென்பந்துச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் அண்மையில் சிங்கள மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. இதில் 'யங்ஃபைற்றேர்ஸ்' விளையாட்டுக் கழகமும், 'ஃபோர் ஸ்ரார்' விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய 'ஃபோர் ஸ்ரார்' அணி நிர்ணயிக்கப்பட்ட 5 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து, 54 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. அந்த அணியைச் சேர்ந்த கே.றொகான் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி, 3 சிக்ஸர்கள் உள்ளடங்கலாக 28 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்.

55 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய 'யங் ஃபைற்றேர்ஸ்' அணி 'ஃபோர் ஸ்ரார்' வீரர்களின் அபார பந்துவீச்சால் 38 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழக்க, வெகு எளிதாகச் சம்பியன் கிண்ணத்தை 'ஃபோர் ஸ்ரார்' அணி தட்டிக்கொண்டது. 'யங்ஃபைற்றேர்ஸ்' அணியைச் சேர்ந்த எஸ்.அஜன் 19 ஓட்டங்களைப்பெற்றுக் கொண்டார்.

பந்து வீச்சில் 'ஃபோர் ஸ்ரார்' அணி வீரர் எஸ்.விமலகாந் 5 ஓட்டங்களை மாத்திரமே விட்டுக்கொடுத்து, 3 விக்கெட்டுகளை வீழ்த்தி, அந்த அணியின் வெற்றிக்கு வழிசமைத்தார். (04-302)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நல்லூர் லயன்ஸ் கழகம் தனது பிரிவில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவித்தது.

காசிப்பிள்ளை வித்தியாலய மாணவர் ஒருவருக்கு லயன்ஸ் ஆர்.ராகவன் பரிசில் வழங்கிக் கௌரவிப்பதையும் அருகில் லயன் வ.பரமசிவம் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்: லக்ஸ்மன்)

## சிவன் கோவிலில் புதிய கோபுரம் அமைக்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக். 29

புலோலி பசுபதீஸ்வரர் ஆலயத்தில் (சிவன் கோவில்) மேற்கு வாசலில் புதிய இராஜகோபுரம் அமைக்கப்படவிருக்கின்றது.

இப் புதிய இராஜ கோபுரம் அமைக்கும் சம்பிரதாய பூர்வ நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 9.37 மணிக்கு இடம்பெறவுள்ளது. (1)


## சூர்யா கிளினிக்

பருத்தித்துறை வீதி, ஆவரங்கால்.

**விசேட வைத்திய நிபுணர்களின் சேவை**

1) கண் வைத்திய நிபுணர்
ஒவ்வொரு புதனும் பிற்பகல் 4 மணி

2) குழந்தை மகப்பேற்று வைத்திய நிபுணர்
ஒன்றுவிட்ட சனி பிற்பகல் 3.30 மணி

3) காது,மூக்கு,தொண்டை சத்திர சிகிச்சை நிபுணர்
ஒன்றுவிட்ட ஞாயிறு பிற்பகல் 3.30 மணி

மற்றைய வைத்திய நிபுணர்களின் சேவைகளும் மிக விரைவில் ஆரம்பமாகும்

* முற்பதிவுகள் செய்யப்பட வேண்டும்

முற்பதிவு செய்யும் இடங்கள்

சூர்யா மருந்தகம், பஸ் நிலையம், அச்சுவேலி.

சூர்யா மருந்தகம், புத்தூர்.


# வாசகர் திருமுகம்

## வீட்டுத்திட்டம் கிடைத்தவர்களை கவலையில் தள்ளியுள்ள அறிவிப்பு

"நீர்ப்" நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்.அரச அதிபரின் பணிப்பின் பேரில் சாவகச்சேரிப் பிரதேச செயலகத்தால் வீட்டுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுப் பல மாதங்களாகி விட்டன. பிரதேச செயலக அதிகாரிகளால் வீட்டின் அளவுத் திட்டத்திற்கான வரைபடமும் வழங்கப்பட்டது. அவர்களின் மேற்பார்வையின் கீழ் சில வீடுகள் ஓரளவு கட்டப்பட்ட நிலையிலும், சில வீடுகள் முழுமையடைந்த நிலையிலும் உள்ளன. ஆனால், தற்போது சாவகச்சேரிப் பிரதேச செயலரின் ஒப்பத்துடன் கொடிகாமம் பிரதேச சபையினரால் வீட்டுத்திட்டப் பயனாளிகளுக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதில் "பிரதேச சபையின் அனுமதியைப் பெறாது கட்டப் படும் வீடுகளுக்கு மேற்கொண்டு கொடுப்பனவுகள் வழங்கப்படமாட்டா" எனக் குறிப்பிடப்பட்டுள் ளது. இதனால் பயனாளிகள் பிரதேச சபையை நாடியபோது, அனுமதி பெறுவதற்கான படிவம் ஒன்றினை ரூ.152.50 செலுத்தி பெற்றுக் கொள்ளுமாறு கூறப்பட்டது. அப்படி பெற்றுக்கொண்ட படிவத்தோடு வீட்டின் அமைவிடப் படமும் இணைத்து மீண்டும் ரூ.230 உடன் சமர்ப்பிக்குமாறும் கூறப்பட்டது. இவ்வரைபடத்தை வரைய ரூ.1700 முதல் ரூ.2000 வரை செலுத்த வேண்டியும் உள்ளது. ஏற்கனவே அரச அதிபர் வீட்டுத்திட்டத்திற்கென சிமெந்தினை வழங்கிய போதும் தென்மராட்சிக் கிழக்கு மக்களில் சிலரைத் தவிர ஏனையோருக்கு இச் சிமெந்து கிடைக்கவில்லை. அவர் கள் தமது நகைகளை வங்கிகளில் அடகு வைத்து அதிக விலைக்கு சிமெந்தினை வாங்கியும், முழுமையாக வீட்டினைக் கட்டி முடிக்காத இந்நிலையில் பிரதேச சபையினரின் அறிவிப்பு அவர்களுக்கு பெரும் சுமையாகியுள்ளது. 'எதிர்காலக் கொடுப்பனவுகள் நிறுத்தப்படும்' என்ற அறிவிப்பால் ஏற்கனவே கடன் சுமையுடன் வாழும் மக்களால் எதுவுமே செய்ய முடியாதுள்ளது.

அவர்களின் நிபந்தனைக்கு அமையாதுவிடின் வீட்டினை இடித்துக் கட்ட முடியுமா? சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இப்பிரச்சினை தொடர்பான உரிய பதிலை பத்திரிகை மூலம் தருவார்கள் என எதிர்பார்க்கிறோம்.

தென்மராட்சி கிழக்கில் பாதிக்கப்பட்டவர்கள்.

## அதிகாரிகளின் அசமந்தப் போக்கால் மலேரியா பரவும் நிலை அதிகரிக்கிறது

சுன்னாகம் கிழக்கிலுள்ள ரயில் வீதியில் சுன்னாகம் றோட்டறிக் கழகத்தினால் தகரத்தாலான குப்பைத் தொட்டி ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. அப்பகுதியிலுள்ள வீடுகளில் சேரும் கழிவுப் பொருள்கள் அவற்றிலேயே ஒன்றுசேர்க்கப்பட்டு பிரதேச சபையினால் அகற்றப்பட்டு வந்தது. ஆனால், சேரும் கழிவுகள் ஒழுங்காக அகற்றப்படாததினால் கழிவுத் தொட்டி நிரம்பி தொட்டிக்கு வெளியிலும் கழிவுகள் போடப்பட்டது. இவற்றை நாய், பூனை போன்ற பிராணிகள் கிளறுவதால் ஏற்பட்ட துர்நாற்றத்தினால் அயலில் வசிப்பவர்களின் முறைப்பாட்டை அடுத்து சில மாதங்களுக்கு முன் கழிவுத் தொட்டி அகற்றப்பட்டுள்ளது.

தொட்டி அகற்றப்பட்டதின் பின் கழிவுகள் ரயில் பாதையிலும் - சுன்னாகம் கிழக்கிற்குச் செல்லும் காளி கோவில் வீதியின் இரு மருங்கிலும் தகரம்,பீங்கான், பிளாஸ்ரிக் பொருள்கள் பழைய உடுபுடைவைகள், இறந்த மிருகங்களின் எச்சங்கள் போன்ற நானாவித பொருள்களும் போடப்படுவ்தால் மக்கள் பிரயாணம் செய்யும் பொழுது மூக்கைப் பொத்திப் பிடித்துக்கொண்டு செல்லவேண்டியதாகவுள்ளது. தகரம், பீங்கான் போன்ற ஆபத்தான பொருள்கள் பாதசாரிகளுக்கும் ஆபத்தை ஏற்படுத்தக்கூடியதாகவுள்ளன. அதுமட்டுமன்றி இக்கழிவுப் பொருள்களை காகம் போன்ற பிராணிகள் எடுத்து வந்து அயலிலுள்ள குடிதண்ணீர்க் கிணறுகளிலும் போட்டு விட்டுச் செல்கின்றன. இதனால் அயலிலுள்ளவர்கள் மிகவும் அசௌகரியத்துடன் வாழ வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகியுள்ளார்கள்.

இக்கழிவுப் பொருள்களை மாதத்தில் ஒரு முறையாவது அகற்றி சூழல் மாசடைவதை தடுக்குமாறு சம்பந்தப்பட்டவர்களை பலமுறை கேட்டபொழுதும் அதற்குரிய தீர்வை அவர்கள் பெற்றுத்தரவில்லை. இது அவர்களுடைய அசமந்தத்தனத்தை எடுத்துக்காட்டுவதாகும். கடந்த 10 வருடங்களுக்கு முன் இப்பகுதி வீதிகள் வாரம் ஒருமுறை சுத்தம் செய்தது யாவருக்கும் தெரிந்த ஒன்றாகும். அன்றிருந்த மேற்பார்வையாளர் திரு.செல்லச்சாமியை இன்றும் இப்பகுதி மக்கள் வியந்து பாராட்டுகின்றார்கள்.

பிரதேச சபைக்குரிய கழிவு அகற்றும் வாகனம் பெட்டியின் கால்ப்பகுதிகூட நிரம்பாத நிலையில் அப்பகுதியூடாகச் செல்வதை பலரும் பலவேளைகளில் கண்டிருக்கின்றார்கள். மக்கள் சென்று முறையிடும்பொழுது வாகனம் இல்லை அல்லது குப்பை போடுபவர்களை தடுத்து நிறுத்துங்கள் என்று கூறும் உத்தியோகத்தர்கள் வெறுமனே செல்லும் டிராக்டரில் இக்கழிவுகளையும் ஏற்றி அகற்றினால் என்ன?

யாழ்.மாநகரசபை செய்வதுபோன்று சுழற்சி முறையில் சேரும் கழிவுகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தால் என்ன?

"யாழ்.குடாநாட்டில் மீண்டும் மலேரியா" என்ற தலைப்புடன் 18.10.2008 ஆம் திகதிய உதயன் செய்தி வெளியிட்டுள்ளது. இவற்றை எல்லாம் நோக்கும்போது மலேரியா உற்பத்தித் தளமாக இவ்விடமும் அமையலாமல்லவா!

சம்பந்தப்பட்டவர்கள் இதில் கவனம் செலுத்துவார்களா?

நலன்விரும்பி.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலையத் தலைவர்

**திரு.ச.கிருஷ்ணன்**

அவர்கள் யா/மட்டுவில் அ.த.க. பாடசாலை அதிபராக நியமனம் பெற்றமையையிட்டு அவரை மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆண்டு பல பணி செய்து
நல்லாசிரியனாயிருந்து
கண்ணெனப் போற்றும்
கல்விச் செல்வமதை
அன்போடு மாணவர்க்கு
ஊட்டி உயர்த்தி வைத்த
கண்ணியம் மிக்கதோர்
கதாநாயகனாய்த் திகழ்ந்தீர்
பண்பான சேவையினால்
பாரில் புகழ்பெற்று எண்ணம் போல் நீர் பெற்ற பதவிதனைப்
போற்றி என்றும் வண்ணமாய்ப் பல்லாண்டு வாழ்கவென
வாழ்த்துகின்றோம்.

**வளர்மதி சனசமூக நிலையம்**

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**தம்பிப்பிள்ளை சுப்பிரமணியம்**

(பிஸ்கால் உத்தியோகத்தர், மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்)

மலர்வு: 25.05.1948

மறைவு: 29.10.2006

அன்பின் உறைவிடமே
பாசத்தின் பிறப்பிடமே
குடும்பத்தின் குலவிளக்கே
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உம் நினைவுகள் எம்மை
விட்டு என்றுமே நீங்காது!

என்றும் உமை மறவா:

மனைவி, பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினர் (மாதகல்)

70, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாவகச்சேரி, சங்கத்தானை மகளிர் அபிவிருத்திச் சங்கமும் இளைய நிலா சிறுவர் கழகமும் இணைந்து சிறுவர் தின விழாவினை அண்மையில் நடத்தின. நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட தென்மராட்சிப் பிரதேச செயலக கலாசார அலுவலர் கா.இராசதுரை சிறுவன் ஒருவனுக்குப் பரிசில் வழங்குவதை முதலாவது படத்தில் காணலாம்.
சிறுவர்களின் கலை நிகழ்வொன்றினையும் நிகழ்வில் கலந்து கொண்ட சிறார்களையும் அடுத்துள்ள படங்களில் காணலாம். (படங்கள்: தென்னவன்)

## ஏ.ஆர். ரஹ்மான் இலங்கை வரவுள்ளார்

கொழும்பு, ஒக். 29

தென்னிந்தியாவின் பிரபல இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான் இலங்கைக்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார் என்று இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கை, பாகிஸ்தான் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள ஏ.ஆர். ரஹ்மான் இந்த நாடுகளில் உள்ள 15 முக்கிய நகரங்களில் இசை நிகழ்ச்சிகளை நடத்தவுள்ளார் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ரஹ்மானின் இலங்கை வருகை உள்ளூர் கலைஞர்களின் திறமைகள் வெளிப்படுத்தப்படுவதற்கு முக்கிய உந்து சக்தியாக விளங்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

இலங்கையில், ஏ.ஆர். ரஹ்மான் உள்ளூர் இசைக்கலைஞர்களுடன் இணைந்து நடத்தும் இசை நிகழ்ச்சிகள், பின்னர் இந்தியத் தேசியத் தொலைக்காட்சியான தூர்தர்ஷனில் ஒளிபரப்பப்படும் என இந்தியச் செய்திகள் மேலும் தெரிவித்தன. (அ-சி)

### தமிழர் சுயநிர்ணய உரிமையை ஏற்கும்

# எந்த நாட்டின் மத்தியஸ்தத்துடனும் பேச்சு நடத்துவதற்கு புலிகள் தயார்

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. கூறுகிறார்

கொழும்பு, ஒக். 29



"தமிழர் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் எந்த நாடாக இருந்தாலும் அந்த நாட்டின் மத்தியஸ்தத்துடன் பேச்சு நடத்த தமிழீழ விடுதலைப் புலிகள் தயாராக இருக்கின்றனர்"

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. எஸ். ஜெயானந்தமூர்த்தி தெரிவித்துள்ளார்.

முப்பது வருடங்களாகப் போரை முன்னெடுத்துவருகின்ற பேரினவாதத்தின் இழுத்தடிப்புக்கள் தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்த்து வைக்கப் போவதில்லை. இது ஒரு கேலிக்கூத்து என்பதை அமெரிக்கா நன்கு புரிந்துகொள்ளவேண்டும் - என்றும் அவர் கூறினார்.

தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளைச் செயலிழக்கச் செய்வதற்கும் சர்வகட்சிக் குழுவின் யோசனைகளை சகல அரசியல் கட்சிகளும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அமெரிக்கத் தூதுவர் கூறியிருக்கின்றமை தொடர்பாகத் தெரிவித்தபோதே ஜெயானந்தமூர்த்தி எம்.பி. மேற்கண்டவாறு சொன்னார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டமே தற்போது இடம் பெற்று வருகின்றது. சிங்களப் பேரினவாதம் தமிழ் மக்களை நசுக்கி அடக்கி ஒடுக்கி இறுதியில் அழித்துவிடும் ஒரு பயங்கரவாதத்தையே கடைப்பிடித்து வருகின்றது.

தற்போது பிரச்சினைக்கான தீர்வு என முன்வைக்கப்பட்டுள்ள சர்வகட்சிக் குழு கடந்த மூன்று வருடங்களாகக் கூடுவதும் பின்பு கலைவதுமாக இழுத்தடிப்புக்களையே மேற்கொண்டு வருகின்றது.

தமிழ் மக்களின் பிரச்சினையைச் சர்வகட்சிக் குழு யோசனைகளால் தீர்த்து வைக்க முடியும் என்பது ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒன்றல்ல. அது மேலும் மேலும் தமிழ் மக்களை ஏமாற்றுகின்ற யோசனைகளாகும். அமெரிக்கா கூறுவதுபோல் சர்வகட்சிக் குழுவினால் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்படப் போவதில்லை. அதன் கேலிக்கூத்துக்களை நன்கு புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழ் மக்களால் முன்வைக்கப்பட்டுள்ள தமிழர் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கை அங்கீகரிக்கப்பட வேண்டும். இதனை எந்த நாடு ஏற்றுக்கொள்கின்றதோ அந்த நாட்டின் மத்தியஸ்தத்துடன் பேச்சுகளில் கலந்து கொள்ளப் புலிகள் தயாராகவே இருக்கின்றனர்.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தையும் அதன் நியாயத்தன்மைகளையும் தமிழகம் நன்கு உணர்ந்து கொண்டுள்ளது. தமிழ் நாட்டில் அரசியல் எழுச்சியும் மக்கள் அலையும் இலங்கைத் தமிழருக்கு ஆறுதலாக இருக்கின்றன. அத்துடன் சக்தியையும் கொடுத்திருக்கின்றது.

அரசின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ற வகையில் தமிழர் போராட்டத்தை திசை திருப்புகின்ற நடவடிக்கையானது தமிழ் மக்களை வேதனைப்படுத்துகின்ற செயற்பாடாகும்.

அதேவேளை, தங்களுக்கு ஏற்ற வகையில் ஆர்ப்பாட்டங்களுக்கும் ஹர்த்தால்களுக்கும் வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள் பலவந்தப்படுத்தப்பட்டு வருகின்றமையும் அவர்களை வெறுப்படையச் செய்)

## வரவு - செலவுத் திட்டத்தை ஐ.தே.கட்சி எதிர்க்கும்

கொழும்பு, ஒக். 29

அரசால் அடுத்த வாரம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் 2009 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சி இந்த முறையும் எதிராகவே வாக்களிக்கும் என்று அக்கட்சி அறிவித்துள்ளது.

இந்த வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதத்தைப் பயன்படுத்தி அரசு மேற்கொண்டுவரும் பல ஊழல் மோசடிகளை மக்களுக்கு அம்பலப்படுத்தப்போவதாகவும் அக்கட்சி மேலும் தெரிவித்துள்ளது.

அரசால் அடுத்தவாரம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு - செலவு திட்டம் மூலம் இந்நாட்டு மக்களுக்கு எந்த நன்மையும் கிடைக்கப்போவதில்லை.

2008 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் வழங்கப்பட்டுள்ள வாக்குறுதிகள் எவையும் இற்றைவரை நிறைவேற்றப்படாத நிலையில் 2009 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தை எப்படி நம்பமுடியும்?

இந்த வரவு - செலவுத்திட்டத்தில் நிச்சயம் பொய் வாக்குறுதிகள்தான் அடங்கியிருக்கும்.

ஆகவே, 2008 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை நாம் எதிர்த்தது போல் 2009 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்தையும் நாம் எதிர்ப் போம் - என்று ஐ.தே.கட்சியினர் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் தகவல் தெரிவிக்கப்பட்டது. (அ-சி)

## சுயதொழில் கொடுப்பனவு

நவாலி, ஒக். 29

வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 4 குடும்பங்களுக்கு சுயதொழில் முயற்சிக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

சமூக சேவைகள் திணைக்களம் இக்கொடுப்பனவை வழங்கியுள்ளது எனப் பிரதேச சமூக சேவை உத்தியோகத்தர் அருந்தவராசா தெரிவித்தார். (202-100)

## இந்திய அமைச்சர் சிதம்பரம் எதற்காக இலங்கை வருகிறார்?

### கேள்வி எழுப்புகிறது ஐ.தே.கட்சி

கொழும்பு, ஒக். 29

இந்தியாவின் சிரேஷ்ட அமைச்சர் சிதம்பரம் இன்னும் சில நாள்களில் கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ளமை குறித்து ஐக்கிய தேசியக் கட்சி சந்தேகம் வெளியிட்டுள்ளது.

கட்சியின் கோகாலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் காசிம் கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் இலங்கை அரசின் மீதான இந்தியாவின் தலையீடுகள் தொடர்பில் விமர்சித்து விளக்கமளித்தபோதே இந்தச் சந்தேகத்தை எழுப்பினார்.

யுத்தத்தை தொடர்ந்து நடத்த முடியாது என்பதனால் அரசின் அமைதி முயற்சி எனக் கூறிக்கொண்டு இந்தியாவின் உதவியை அது நாடியிருக்கின்றது எனவும் அவர் குற்றஞ்சாட்டினர்.

"இந்தியாவின் மூத்த அமைச்சர் சிதம்பரம் இன்னும் சில நாள்களில் கொழும்புக்கு வருகைதரவுள்ளார் என எமக்குக் தகவல் ஒன்று கிடைத்துள்ளது. அரசியல் தீர்வு ஒன்றை முன்வைக்கவே அவர் கொழும்புக்கு வருகின்றார். அப்படியானால் அது என்ன அரசியல் தீர்வு? புலிகளுக்கு எதிரான யுத்தம் தொடர்பில் அரசின் கொள்கை என்ன?" என்றும் நாடாளு மன்ற உறுப்பினர் மேலும் கேள்வியெழுப்பினர். (அ-சி)

## மகிமையுள்ள ஸ்கந்த ஷஷ்டி



தமிழ்க் கடவுள் என்று அழைக்கப்படும் முருகப் பெருமானுக்கு முக்கிய விர தங்கள் மூன்று உள்ளன. வார விரதம் ஒன்றும், திதி விரதம் ஒன்றும், நக்ஷத்திர விரதம் ஒன்றும் என மூன்று முத்தான விரதங்கள் முருகக் கடவுளுக்கு உண்டு. இவற்றுள் மிகச் சிறந்த மகத்தான விரதமாக ஸ்கந்த ஷஷ்டி விரதம் அமைகின்றது.

ஐப்பசி மாதத்து, தீபாவளி அமாவாசையை அடுத்து வருகின்ற வளர்பிறைப் பிரதமை முதல் ஷஷ்டி ஈறாகக் கொண்ட ஆறுநாள்கள் ஸ்கந்த ஷஷ்டி விரத காலமாகும். அதி சக்திவாய்ந்த இந்த விரதமானது சகல செல்வங்களையும், சுகபோகங் களையும் தரக்கூடியது. அத்தோடு இந்த விரதமானது புத்திர பாக்கியத்திற்குச் சிறப்பானதொரு விரதமாக அமைகின்றது. இதன் காரணமாகவே "சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வரும்" எனப்பட்டது. அதாவது ஸ்கந்த ஷஷ்டி விரதமிருந்தால்தான் அகப்பையாகிய கருப்பையிலே கரு உண்டாகும் என்பதே இதன் உட்பொருள் கருத்தாக அமைகின்றது. இப்பழமொழியின் கருத்தையே பலர் இன்று மாற்றுகின்றார்கள்.

எனவே இவ்வாறான சக்தி வாய்ந்த இந்த விரதமானது தூய முறையிலே அனுஷ்டிக்கப்படல் வேண்டும். ஆலயங்களில் ஆரம்ப தினத்திலே தர்ப்பை அணிந்து, காப்புக் கட்டி, சங்கற்பித்து ஆறு நாள்களும் உபவாச நோன்பு நோற்றல் வேண்டும். இறுதி நாளில் காப்பைக் கழற்றி தர்ப்பையுடன் சேர்த்துத் தாம்பூல தக்ஷிணைகளுடன் அர்ச்சகரிடம் கொடுத்தல் வேண்டும்.

ஏழாம் நாள் பாரணைப் பூஜை கண்டு அதன்பின் மகேஸ்வர பூசை செய்து அடியார்களுக்கு அன்னமிட்டுப் பாரணை செய்ய வேண்டும்.

இவ்வாறாகக் கடும் விரதத்தினை அனுஷ்டிக்க முடியாதவர்கள் முதல் ஐந்து நாள்களும் இரவு ஒருபொழுது பால்பழம் அல்லது பலகாரம் உண்டு இறுதிநாள் உபவாசம் இருக்கலாம். அல்லது முதல் ஐந்து நாள்களும் பகல் ஒருபொழுது அன்னமும் ஆறாம் நாள் இரவு பால், பழம் அல்லது பலகாரம் உட்கொண்டு விரதம் அனுஷ்டிக்கலாம்.

ஆறாம் நாள் ஷஷ்டித் திதியில் சூரசம்ஹாரம் நிகழும். இது பகல் பன்னிரண்டு நாழிகைக்குக் குறையாமல் பஞ்சமித் திதியும் அதன்பின் ஷஷ்டி வியாபகமும் இருக்கும் நாள் சூரன் போருக்குரியது.

எனவே இவை யாவற்றையும் கண்டு விரதத்தினைத் தூய முறையில் அனுஷ்டித்து சகல சௌபாக்கியங்களையும் முருகப் பெருமானின் அருளால் பெற்றுய்வோமாக.

- சைவப்புலவர் பொன்.சுகந்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவசமயப் போட்டிகள்

சங்கானைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையில் கோட்ட, கொத்தணி ரீதியாக சைவசமயப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

கொத்தணி மட்டப் போட்டிகள் எதிர்வரும் 8ஆம் திகதி நடைபெறவுள்ளன.

சுழிபுரம் கொத்தணிப் பாடசாலைகளுக்கான போட்டிகள் பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்திலும், வட்டுக்கோட்டை கொத்தணிப் பாடசாலைகளுக்கான போட்டிகள் வட்டு.மத்திய கல்லூரியிலும் நடைபெறவுள்ளன எனக் கோட்டக் கல்வி அதிகாரி க.துரைஎங்கரசு தெரிவித்தார். (202-28)

## வீடு வாடகைக்கு

10A, கதீற்றல் வீதியில் மேல்மாடி வீட்டில் ஒரு பகுதி (3 படுக்கையறை, வரவேற்பறை, சமயலறை மற்றும் நவீன வசதிகள் அடங்கியது) வாடகைக்குண்டு. அரசாங்க உத்தியோகத்தர்கள், சிறிய குடும்பம் விரும்பத்தக்கது.

தொடர்பு: 10A, கதீற்றல் வீதி, யாழ்ப்பாணம்.

(79519) T.P: 0212225687

## கந்த ஷஷ்டி புராண படிப்பு

சுழிபுரம், ஒக்.29

தொல்புரம் சிவபூமி இல்லத்தின் ஞானவைரவர் ஆலயத்தில் கந்த ஷஷ்டி புராண படிப்பு இன்று புதன்கிழமை ஆரம்பமாகும்.

தொடர்ந்து 6 நாள்களும் பிற்பகல் 3 மணிக்குப் புராண படிப்பு இடம்பெறும். (202-28)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். பிராந்திய ஸ்ரீலங்கா ரெலிக்கொம் அலுவலக உத்தியோகத்தர் **திருமதி தனுசியா சுதாகர்** அவர்களின் அன்புப் புதல்வி

**துஷாரா சுதாகர்**

அவர்களின் மறைவையொட்டி எமது கண்ணீர் அஞ்சலிகளையும் அனுதாபங்களையும் தெரிவிப்பதோடு, அவர் தம் குடும்பத்தாரின் துயரினையும் பகிர்ந்துகொள்கின்றோம்.

**பிராந்திய முகாமையாளரும், பிராந்திய அலுவலக ஊழியர்களும்.**

(79485)

## திருமண சேவை

சுலபமான வாழ்க்கைத்துணை தெரிவுக்குச் சுய தெரிவு முறையே! சுயதெரிவு முறை பற்றிய வரன்முறையைத் தெரிந்திட திங்கள், புதன், வெள்ளி மாலை வேளைகளில் மூத்த புகழ்பூத்த-சுயதெரிவுமுறை முன்னோடி-தனி மனித நிறுவுநர்- சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர், மாயெழுவேல் அமுதனுடன் தொடர்பு கொள்க. கொழும்பு நேரடித் தொலை பேசி - 2360488, 2360694, 4873929.

## யா/வைத்தீஸ்வராக் கல்லூரி

**தரம் 6 இற்கான அனுமதி - 2009**

மேற்படி வகுப்பிற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆங்கிலம், தமிழ் மொழிமூலம் கற்கவிரும்புவோர் அலுவலகத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று 20.11.2008 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

(C/555110) நா.வன்னியசிங்கம், அதிபர்.

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த லண்டனில் வசிக்கும் 36 வயதுடைய 12 இல் செவ்வாயுள்ள 16 கிரகபாவமுடைய மணமகனுக்கு 28 வயதுக்குட்பட்ட படித்த மணமகள் தேவை. வெளிநாடும் விரும்பத்தக்கது. படம், குறிப்புடன் தொடர்பு கொள்ளவும்.

மே/பா இல:3154, உதயன்.

## எட்டாம் ஆண்டு நினைவலைகள்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 05 | 27 |
| 11 | 10 |
| 1968 | 2000 |

**செல்வன் திரவியம் விஜயதரன்**

திதி:பிரதமை (29.10.2008)

*எட்டு வருடங்கள் ஆனதையா - வீசி*
*உனது புன்சிரிப்பு எங்கே? - வீசி*
*உன்னை நினைக்கும் போது*
*உடலில் நெருப்பு எரிகின்றது - வீசி*
*மரணம் உன்னைக் கொன்றதனால்*
*கவலையில் நோயால் தவிக்கின்றோம் ஐயா - வீசி*
*வீசி உன் நினைவால் வாடுகின்றோம்.*

த.மு.: 38/9, மருதடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
நி.மு.: நாவற்குழி. (சி/555112)

தகவல்: குடும்பத்தினர்

## பரிசுத்த ஆவிக்கு ஜெபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே! உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட்கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிபவரே, என் வாழ்வில் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு; உற்ற துணையான உமக்கு இச்சிறிய ஜெபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகிறேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக்காரணம் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகிறேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்கு பெற வேண்டுகிறேன்.

(79520) - அடியாள்.

## முதலாம் வருட நினைவலைகள்



மண்ணில்: 20.06.1932

விண்ணில்: 29.10.2007

திருமதி

**மேரிதிரேசா ஜீவரட்ணம்**


ஆண்டு ஒன்று சென்றாலும் என்றும் உம் நினைவில்

பண்டத்தரிப்பு வீதி,
பெரியவிளான், இளவாலை.

- குடும்பத்தினர்

(79455)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும்



## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

# செல்லத்துரை திலகரத்தினம்

(உரிமையாளர் - மொடோன் ரேடியோ சேர்விஸ்)

பிறப்பு:- 28*01*1928

இறப்பு:- 29*09*2008

கடந்த 29.09.2008 அன்று சிவபதமடைந்த எமது குடும்ப விளக்கின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (29.10.2008) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அன்றைய தினம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கச்சாய் வீதி,
சக்தியம்மன் பாடசாலை அருகில்,
சாவகச்சேரி.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

(சி/555103)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சுவேலியில் இலங்கை வங்கிக் கிளை தரமுயர்த்துகை அங்குரார்ப்பண விழா சிறப்பு மலர் - 29.10.2008

## எனது சேவையின் இறுதிநாளில் மட்டற்ற மகிழ்ச்சி



இலங்கை வங்கி தனது 308 ஆவது கிளையை அச்சுவேலியில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கின்றது. அச்சுவேலி மக்களின் ஒத்துழைப்புடன் இந்த முயற்சி நிறைவேறுவதை முன்னிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். எனது வங்கி வாழ்வின் இறுதிநாளில் ஒரு தனிக் கிளையை உருவாக்குவதற்குரிய சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு மன நிறைவடைவதுடன், ஆண்டவனுக்கு நன்றி கூறி புளகாங்கிதம் அடைகின்றேன். குறுகிய காலத்தில் இந்தக்கிளை தனிக்கிளையாக உயர்வு பெறுவதற்கு உழைத்த முகாமையாளர் ரி.புவனேந்திரன் மற்றும் ஊழியர்களிற்குப் பாராட்டு தெரிவிப்பதுடன் அதற்குப் பல்வேறு விதத்திலும் உதவிய வாடிக்கையாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் இந்தக்கிளை வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவைகளை வழங்கி, வங்கியும் வாடிக்கையாளர்களும் உயர்வுபெற இறை ஆசி வேண்டி வாழ்த்துகின்றேன்.

**B.A.அருமைநாயகம்**
*உதவிப்பொதுமுகாமையாளர்.*
*இலங்கை வங்கி வடபிராந்திய அலுவலகம், யாழ்ப்பாணம்.*

## முப்பரிமாண முயற்சி



விடாமுயற்சி, அயராத உழைப்பு எமது இலக்கு அச்சுவேலி விரிவாக்கற் கிளையை 'C' தரக்கிளையாக்குவதே என்ற திடசங்கற்பத்துடன் உழைத்த ஊழியர்களும் முகாமையாளரும் ஒருபுறமும்

அச்சுவேலி மண்ணில் சுதந்திரமாக இயங்கக் கூடிய ஓர் இலங்கைவங்கிக்கிளையை உருவாக்க எங்களால் முடியாதா? என்ற உணர்வுமிக்க எழுச்சியுடனும் உத்வேகத்துடனும் உழைத்த வாடிக்கையாளர்களும் நலன் விரும்பும் மண்ணின் மைந்தர்களும் மறுபுறமும்

எப்படியாவது தற்போதைய உதவிப்பொது முகாமையாளர் ஓய்வுபெறும் நாளான 30.10.2008 இற்கு ஒருநாள் முதலாவது இக்கிளையை தன்னிச்சையாக இயங்குவதற்கான முயற்சியில் வெற்றி கண்ட உயர்மட்ட முகாமைத்துவம் இன்னொரு முயற்சியிலுமாக முப்பரிமாண உந்துதலால் உருவான இந்த இலக்கை இன்று அடையும் இந்நாளில் அனைவருக்கும் எனது அன்பையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கும் இவ்வேளையில் எமது உதவிப்பொது முகாமையாளர் B.A. அருமைநாயகம் அவர்களுக்கு இக்கிளையின் பிறப்பைக் காணிக்கையாக்குகின்றோம்.

**ந.சிவரத்னம்.**
*செயற்பாட்டு முகாமையாளர்,*
*வடபிராந்திய அலுவலகம், யாழ்ப்பாணம்.*




## அச்சுவேலியில் இலங்கைவங்கி

2002.01.14 ஆம் திகதி தைப்பொங்கல் திருநாளில் சாவகச்சேரி இலங்கைவங்கிக் கிளை தென்மராட்சியில் இருந்து இடம்பெயர்ந்த நிலையில் அச்சுவேலியில் தனது பணிகளை ஆரம்பித்தது. இந்தவகையில் அரசசார்பு வங்கி ஒன்றின் பணிகள் வலி.கிழக்குப் பிரதேசத்தில் முதன்முதல் அச்சுவேலியில் ஆரம்பமாகின.

சாவகச்சேரி இலங்கைவங்கியின் முகாமையாளர் கே.தவயோகன் தனது முகாமைத்துவ ஆளுமைச் சிறப்பினால் மனம் கவரத்தக்க விதத்தில் வங்கிச் சேவைகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்கியதோடு, அச்சுவேலியில் இலங்கை வங்கியின் சேவையை கால்கோள் செய்தார். சாவகச்சேரி இலங்கை வங்கி தென்மராட்சிக்கு மீளத்திரும்பியதை அடுத்து 2002.08.05 ஆம் திகதி முதல் சுன்னாகம் இலங்கைவங்கியின் விரிவாக்கல் கிளையாக அச்சவேலி வங்கிச் செயற்பாடுகள் நடைபெற்று வந்தன. முகாமையாளர்களாக என்.இராசகோபால், ஆர்.இராசேந்திரா, என். இந்திரகுமார், வி.தம்பித்துரை ஆகியோர் பணியாற்றினர்.

வல்லை வீதியில் செயற்பட்ட வங்கியின் செயற்பாடுகளுக்கு அமைவிடம் பொருத்தமில்லை என்பதைக் கருத்தில் கொண்டு கட்டட உரிமையாளர் சி.சந்திரலிங்கம் நிலைய முக்கியத்துவம் வாய்ந்த இந்த இடத்தில் வங்கிக்கான புதிய கட்டடத்தை நிர்மாணித்து வழங்கியதோடு வங்கியின் புதிய முகாமையாளராக த.புவனேந்திரன் பொறுப்பேற்றது வங்கியின் வளர்ச்சிக்கும் வாடிக்கையாளர்களுக்கான சேவைகள் உதவிகளுக்கும் வசந்தகாலமாக அமைந்தது. தனிக்கிளையாக தரம் உயர்த்துவதற்கான நிதிக்கையாளுகை வாடிக்கையாளர் தொகை என்பன புதிய முகாமையாளரின் தனித்துவமான முகாமைத்துவப் பண்புகளினால் முழு நிலை பெற்று இன்று தனிக்கிளையாக தலை நிமிர்ந்து நிற்கின்றது.

மலர் அமைப்பு: ஞானஆதவன்

## மக்களின் நீண்ட நாள் விருப்பம் ஈடேறுகிறது



வலி.கிழக்கு பிரதேசம் மிகப் பெரிய நிலப்பரப்பையும் மாவட்டத்தில் அதிக சனத்தொகையையும் கொண்டிருந்த போதும், இதுவரையில் நிரந்தர இலங்கைவங்கிக் கிளை அமையாதகுறை தற்போது நீங்கியிருப்பது உண்மையில் மகிழ்ச்சிக்குரியதாகும். மேலும் இச் செயற்பாட்டிற்கு முன்னின்றுழைத்த அனைத்துத்துத்தரப்பினரையும் இந்தத் தருணத்தில் பாராட்டுவதுடன், இவ்வகையான துரித செயற்பாட்டின் மூலம் கோப்பாயில் இயங்கும் இலங்கைவங்கிக் கிளையினையும் நிரந்தரக் கிளையாகச் செயற்பட நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை வங்கியின் நிர்வாகத்தினரைக் கேட்டுக் கொள்கின்றேன். மேலும் அச்சுவேலியில் அமைந்துள்ள இலங்கைவங்கியின் நிரந்தரக்கிளை அமைப்பதில் பாடுபட்ட அனைவருக்கும் வலி.கிழக்கு பிரதேச செயலர் என்ற வகையில் வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவிப்பதுடன், இவ்வங்கிக்கூடாக முழுமையான சேவையும் நவீன வசதிகளும் மக்களுக்குச் சிறப்புறக் கிடைக்க வாழ்த்துவதோடு. அதற்கு எல்லாம் வல்ல இறைவன் கிருபை கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

**சீ.ஏ.மோகனதாஸ்,**
*பிரதேச செயலர்,*
*வலி.கிழக்கு பிரதேச செயலகம், கோப்பாய்.*

## நிழல் நிஜமாகிறது!



சாவகச்சேரியில் நடந்த அனர்த்தத்தினால் அங்கிருந்து இடம்பெயர்ந்த எமது கிளை யாழ்.நகரில் இயங்கியது. சாவகச்சேரியிலிருந்து இடம்பெயர்ந்த எமது வாடிக்கையாளர்கள் பரவலாக பருத்தித்துறை, அச்சுவேலி போன்ற இடங்களில் வசித்த காரணத்தால் இக்கிளையை அச்சுவேலிக்கு இடம்மாற்றினால் வசதியாய் இருக்கும் என்று பல கோரிக்கைகள் விடப்பட்டன. அதன்படி திரு.சி.சந்திரலிங்கம் அவர்களின் பாரிய ஒத்துழைப்புடன் பருத்தித்துறை வீதியிலிருந்த அவரது கட்டடம் மிக விரைவாக ஒரு வங்கிக்குரிய இடமாக அவரால் மாற்றித் தரப்பட்டது. இக் கட்டடத்துக்கு எமது சாவகச்சேரிக்கிளை மாற்றப்பட்டது. இதனால் அச்சுவேலியையும் சுற்றியுள்ள அப்பிரதேச மக்களும் இந்த வங்கியைப் பூரணமாகப் பயன்படுத்தத் தொடங்கினர்.

பின்னர் சாவகச்சேரி மக்கள் குடியிருப்புக்கு அனுமதிக்கப்பட்டபோது சாவகச்சேரிக் கிளை அங்கு போக வேண்டிய தேவை ஏற்பட்டது. ஏற்கனவே அச்சுவேலி வாடிக்கையாளர் தொகை அதிகமாக இருந்த காரணத்தினால் சாவகச்சேரிக்கிளையை மாற்றும்போது அவர்களுக்கு மிகுந்த சிரமத்தைக் கொடுக்கும் என எல்லோராலும் உணரப்பட்டது.

அச்சுவேலிக்கு ஒரு கிளை வேண்டுமென்ற கோரிக்கையை 1976 ஆம் ஆண்டளவிலேயே நான் முன் வைத்ததைச் சுட்டிக்காட்டியதாலும் ஒரு விரிவாக்கக் கருமபீடம் அமைக்க மேலிடம் ஒப்புக்கொண்டது. இன்றைய முகாமையாளர் திரு.ரி.புவனேந்திரனின் பெரும் பங்களிப்பினாலும் இன்று இக்கிளை சுதந்திரமாக இயங்குவதும் எல்லோருக்கும் தெரிந்த கதை.

இக்கிளை மேலும் உயரவும் முகமையாளரும் ஊழியர்களும் பல பதவி உயர்வுகளைப் பெறவும் அருமையான வாடிக்கையாளர்கள் வாழ்வின் வசந்தத்தில் அடியெடுத்து வைக்கவும் எனது வாழ்த்துக்களும் இறையாசிகளும் என்றும் இருக்கும் .

வரப்பிரபுயர!

**க.பாலசுப்பிரமணியம்,**
*முன்னாள் உதவிப் பொது முகாமையாளர் (வ.பி).*

## தனக்கென்ற தனித்துவத்துடன் இலங்கைவங்கி அச்சுவேலியில்...



எமது மக்களின் மாறிவரும் தேவைகளுக்கிணங்க அத்தேவைகளைத் திருப்தியாகவும், நம்பகமாகவும், சிறந்த முறையிலும் பூர்த்திசெய்ய, இலங்கை வங்கி காலத்துக்குக் காலம் புதிய மாற்றங்களை உள்வாங்குகின்றது. அந்த வகையில் எமது அச்சவேலிப் பகுதிவாழ் மக்களது அபிலாசைகளைத் தனித்துவத்துடன் பூர்த்தி செய்யத்தக்க வகையில், சுன்னாகம் மேற்றரக்கிளையிலிருந்து பிரிந்து, இன்று தனிக்கிளையாக எமது அச்சுவேலிக்கிளை பரிணமிக்கின்றது.

இந்த விழாவிற்கு காரணகர்த்தாக்களாக இருந்தவர்கள் எமது அச்சுவேலிப பகுதிவாழ் மக்களும், அச்சுவேலிக்கிளை முகாமையாளரும், உத்தியோகத்தர்களும் என்று சொன்னால் அது மிகையாகாது. முகாமையாளர் த.புவனேந்திரன் எமது ஆலோசனைகளுக்கிணங்கப் பல புதிய மாற்றங்களை மேற்கொண்டு, இந்நிலைக்குக் கட்டியெழுப்பியுள்ளார். அதன் பயன் இன்று அறுவடை ஆகின்றது. இப்புதிய கிளை ஆழவேரூன்றி அகலவிழுது விட்டு தன்பணி தொடர எமது கிளை ஊழியர்களுடன் இணைந்து இறையருள் வேண்டி வாழ்த்துகின்றேன்.

**சி.பொ.அரசகுமார்,**
*முகாமையாளர், இலங்கைவங்கி மேற்றரக்கிளை, சுன்னாகம்.*

## பாட்டாளி மக்களின் கூட்டாளி இலங்கை வங்கி



இலங்கை வங்கியின் நீடித்த கருமபீடமாக பல வருடங்களாக அச்சுவேலியில் இயங்கி வந்த கிளையானது ஒரு தனிக்கிளையாக தனித்துவமாக 29.10.2008 தொடக்கம் மிளிர இருப்பதையிட்டு நான் எனது சார்பாகவும் அச்சுவேலிவாழ் மக்களின் சார்பாகவும் வாழ்த்துவதில் பெருமிதம் அடைகிறேன். விவசாயப் பெருமக்கள், வர்த்தகர்கள், தொழிலதிபர்கள், பொதுமக்கள் கூடுதலாக வாழும் இப்பிரதேசத்திற்கு ஒரு தனிக்கிளை அவசியம் தேவை என இப்பகுதி மக்கள் எடுத்த முயற்சி கைகூட அயராது பாடுபட்ட வங்கி வரலாற்று சாதனையாளன் உதவிப்பொதுமுகாமையளர் B.A. அருமைநாயகம் ஐயா அவர்களையும் அவருக்கு உறுதுணையாக நின்ற செயற்பாட்டு முகாமையாளர் N.சிவரத்தினம் ஐயா அவர்களையும் தரம் உயர்த்துவதற்குத் தேவையான அனைத்து வளங்களையும் பெற்றுத் தந்த அச்சுவேலி வங்கிக் கிளையின் முகாமையாளர் தம்பி T. புவனேந்திரன் அவர்களையும், வங்கி ஊழியர்களையும், அச்சுவேலிக்கு ஓர் இலங்கைவங்கிக்கிளை உதயமாக வித்திட்ட முன்னாள் உதவிப்பொது முகாமையாளர் K. பாலசுப்பிரமணியம் அவர்களையும் நன்றியுடன் பாராட்டுவதில் பெருமிதம் அடைகின்றேன்.

மேலும் இக்கிளை வெகுவிரைவில் மேற்றரக்கிளையாக தரமுயர்த்தப்பட்டு பாட்டாளி மக்களின் கூட்டாளியாக மிளிர வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

**சிதம்பரம் சந்திரலிங்கம் J.P,**
*மாவட்ட நீதிமன்ற ஒய்வுபெற்ற பதிவாளர்,*
*அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.*

## மேலும் தரம் உயரும் அச்சுவேலி இலங்கை வங்கி



யாழ். மாவட்டத்தில் அச்சுவேலியில் சிறப்பாக இயங்கிக்கொண்டிருக்கும் இலங்கை வங்கியின் அச்சுவேலிக் கிளை தனித்து இயங்கக் கூடிய நிலைக்குத் தரமுயர்த்தப்பட்டுள்ளதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இந்த நிலைக்கு இந்த வங்கி வருவதற்கு அயராது உழைத்த கிளை முகாமையாளர் திரு.த.புவனேந்திரன், வடபிராந்திய உதவி முகாமையாளர் திரு.பி.ஏ.அருமைநாயகம் மற்றும் உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வங்கி அச்சுவேலியிலும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களிலும் தனது வங்கிச் சேவையைத் திறம்பட வழங்கிக் கொண்டிருக்கிறது. மென்மேலும் இந்த வங்கி நவீன தொழில்நுட்பத்துடன் தனது சேவைகளை விரிவுபடுத்தி மக்களுக்குச் சேவையாற்ற வேண்டும் என்பதுடன் வங்கியால் முன்னெடுக்கப்பட்டுள்ள கிராம அபிவிருத்தித் திட்டமான இலங்கை வங்கிக் கிராமம் போன்று இன்னும் பல கிராமங்களை அபிவிருத்தி செய்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்பது எனது அவாவாகும்.

இதற்குச் சகல வசதிகளும், வாய்ப்புக்களும் இறைவனுடைய ஆசீர்வாதமும் இவர்களுக்குக் கிடைக்கவேண்டும் என்று மனதார இந்நாளில் வாழ்த்துகிறேன்.

**டாக்டர் சி.விமலேந்திரன்,**
*மாவட்ட வைத்திய அதிகாரி, பிரதேச வைத்தியசாலை, அச்சுவேலி.*

## விவசாயிகளின் நண்பன்



இலங்கை வங்கி அச்சுவேலிக் கிளையானது இன்றுமுதல் நிரந்தரக் கிளையாக பரிணமிப்பதையிட்டுப் பெரும் உவகை அடைகின்றோம். இந்தக் கிளையைத் தரம் உயர்த்துவதற்கு முயற்சித்த வட பிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் திரு.பி.ஏ.அருமைநாயகம் அவர்களுக்கும் கிளைமுகாமையாளர் திரு.ரி.புவனேந்திரன் அவர்களுக்கும் எமது உளம் கனிந்த நன்றிகள். எமது வங்கியை சூழ்ந்திருப்பவை விவசாயிகள் கூடிய கிராமங்கள் ஆகும். இன்றைய நிலையில் பல வழிகளிலும் விவசாயிகளுக்குப் பல உதவித் திட்டங்களை இவ்வங்கி வழங்கி வருகின்றது. இலங்கை வங்கி மேலும் பல உதவிகளை வழங்கி என்றும் விவசாயிகளின் நண்பனாக செயல்படும் என எதிர்பார்க்கின்றோம்.

**வே.குருபரன்,**
*வர்த்தகப் பிரமுகர், சூர்யா மருந்தகம், அச்சுவேலி.*


## மேலும் சிறப்புற வாழ்த்துகின்றோம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஸ்ரீ முத்துப் பிள்ளையார் பல்பொருள் வாணிபம் அச்சுவேலி. | இலக்சுமி பேக்கரி சந்நிதி றோட், அச்சுவேலி. | சூர்யா மருந்தகம் அச்சுவேலி. | இராஜ மாணிக்கம் கல்யாண மண்டபம் கலாமினி வீடியோ சென்ரர் அச்சுவேலி. | செல்வா சயிக்கிள் & ஹாட் வெயர்ஸ் பருத்தித்துறை வீதி, ஆவரங்கால். | நாதன் ஸ்ரோர்ஸ் ஆவரங்கால், புத்தூர். |
| விதுரன் மோட்டோர்ஸ் அன் ஹாட்வெயர்ஸ் ஆவரங்கால் சந்தி, அச்சுவேலி. | கல்பனா பேக்கரி அச்சுவேலி. | திருப்பதி கல்லுடைக்கும் தொழிற்சாலை வல்லைச்சந்தி, அச்சுவேலி | விவசாய சம்மேளனம் அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி. | சௌந்திரி மெக்கானிக்கல் வேக்ஸ் நாவற்காடு, அச்சுவேலி. | விஜிதா அரிசி ஆலை வல்லை வீதி, அச்சுவேலி. |

(சி/55 5109)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2008ஆம் ஆண்டு 5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் 135 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த யா/இந்து ஆரம்ப பாடசாலை மாணவி

**செல்வி இரத்தினேஸ்வரன் கிருஷ்ணாகினி**

மேலும் பல சிறப்புகள் பெற்று வாழ வாழ்த்துவதுடன் அவருக்கு ஊக்கம் அளித்த அதிபர், ஆசிரியர்களையும் வாழ்த்துகிறோம்.

759, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம். உறவினர்கள்.

(79394)

## தவறிவிட்டது

துரைச்சாமி சுகுமாரன் என்பவரது தே.அ.அ. (531092937V) நல்லூர் ஆலய சூழலில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: து.சுகுமாரன்,
காளிகோயிலடி, ஏழாலை மத்தி, ஏழாலை.

## யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

### புதிய அனுமதிகள் – 2009

### தரம் 1, தரம் 6, தரம் 9

மேற்படி வகுப்புகளுக்கான அனுமதி பெற விரும்புவோர் விண்ணப்பப்படிவங்களைக் கல்லூரி அலுவலகத்தில் பெற்று பூரணப்படுத்தி 07.11.2008 இக்கு முன் ஒப்படைக்கவும்.

சண்டிலிப்பாய். அதிபர்.

## புலோலி பசுபதீஸ்வரர் ஆலய பருத்தித்துறை (சிவன் கோவில்)

### இராஜகோபுரத் திருப்பணி

பருத்தித்துறை நகரில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் எம்பெருமானுக்கு மேற்கு வாசலில் சுமார் 75 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள இராஜகோபுரத்திற்கான அடிக்கல் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ எஸ்.சிவனேசக் குருக்கள் தலைமையில் ஆலய தர்மகர்தா தி.நாகராஜா அவர்களால் இன்று நாட்டி வைக்க திருவருள் கூடியிருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். இந்த இராஜகோபுர நிர்மாண திருப்பணி வேலைகள் சிறக்க எம்பெருமானின் அருள்கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

சுபம்

இந்து இளைஞர் சங்கம், பருத்தித்துறை. தலைவர், செயலர்.

## துயர் பகிர்கின்றோம்

எமது வித்தியாலய ஆசிரியை
திருமதி யாழினி பாலேந்திரன்
அவர்களின் அன்புத் தந்தை

**மயில்வாகனம் இராசேந்திரம்**

அவர்கள் 27.10.2008 திங்களன்று காலமானதையிட்டு துயருற்று இருக்கும் அவர்தம் குடும்பத்தினரின் துயரில் பங்கு கொள்வதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து நிற்கின்றோம்

**ஆசிரியர் கழகம்**
யா/ ஆவரங்கால் நடராஜ
இராமலிங்க வித்தியாலயம்

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையினதும் கைதடிக் கொத்தணிப் பாடசாலைகளினதும் அதிபராகச் சேவையாற்றி ஓய்வுபெற்ற

**சோமசுந்தரம் கணேசலிங்கம்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்ப தோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி, கைதடி.

(79522)

# சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது)

## கிளைக் குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

வடக்கு,கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998.05.19 ஆம் திகதிய 1028/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான வடக்கு, கிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக் குழுக்களைத் தெரிவுசெய்வதற்கான விதிகள் இதற்கமைய யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய நான் 1997.02.17 ஆம் திகதிய 963/1 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானிமூலம் எம்மீது பாரிக்கப்பட்ட அதிகாரங்களின்படி மேற்படி சங்கத்தின் துணைவிதி 23 இற்கு அமைய மேற்படி சங்கத்தின் சகல கிளைகளுக்குமான கிளைக்குழுத்தெரிவிற்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின்படி நடைபெறுவதற்காக இக்கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் பின்வரும் அலுவலர்களை பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

★ இதற்கமைய இக்கூட்டங்களில் சமுகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்கு தனித்தனி அறிவித்தல்கள் சம்பந்தப்பட்ட அலுவலர்களினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

★ கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற்கு சமுகமளித்து வாக்களிக்கத் தகுதியுள்ள உறுப்பினர்களின் நான்கிலொரு (1/4) பங்கினர் அல்லது 25 பேர் அதில் எது குறைவோ அத்தொகையாகும்.

★ தவிசாளர் குறித்த கிளையின் பொதுச்சபையில் இருந்து கிளைக்குழுவிற்கான ஒன்பது (9) உறுப்பினர்களைத் தெரிவுசெய்யும்படி கிளையின் பொதுச்சபையைக் கோருவார். இவர்களுள் ஆகக்குறைந்தது இருவராவது (02) 18 வயதிற்கும் 35 வயதிற்கும் இடைப்பட்டவராக இருத்தல்வேண்டும்.

★ சபையிலிருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் (09) பெயருக்கு மேற்படின் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவினை மேற்கொள்வார்.

★ இரண்டு வேட்பாளருக்கு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட வேட்பாளருக்கு இடையே சம வாக்குகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் திருவுளச் சீட்டு மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும்.

★ தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களை தவிசாளர் கிளையின் பொதுச் சபையில் பிரகடனப்படுத்துவதுடன், சங்கச்செயலாளருக்கும் எனக்கும் எழுத்து மூலம் அறிவிப்பார்.

★ தகுதியுள்ள கிளைப்பொதுச்சபை அங்கத்தவர்களுக்கு கிளைக்குழுத் தெரிவு தொடர்பான அறிவித்தல்கள் தனித்தனியாக அனுப்பி வைக்கப்படுகின்றன. இவ்வறிவித்தல்கள் கிடைக்கப்பெறாத எவரேனும் தகுதியுள்ள அங்கத்தவர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொண்டு இக்கிளைப் பொதுச்சபை நடைபெறும் திகதிகளில் தங்களுக்குரிய கிளைப்பொதுச்சபைக் கூட்டத்திற்கு சமுகமளித்து கிளைக்குழுவைத் தெரிவு செய்யுமாறு வேண்டுகின்றேன்.

## கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான விவரம்

### கிளைப் பொதுச்சபைக்கூட்டங்கள் 01.11.2008 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப. 10 மணி

| தொ. இல. | கி. இல. | கிளையின் பெயர் | தவிசாளர் பெயர் | திகதி | நேரம் | கிளைப் பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | 01 | சுன்னாகம் | திருமதி த.சிவகுமாரி | 01.11.2008 | சனிக்கிழமை 10 மணி | தலைமைக் காரியாலய மண்டபம் |
| 02 | 02 | சந்தையடி, சுன்னாகம். | செல்வி சு.கமலலோஜினி | 01.11.2008 | சனிக்கிழமை 10 மணி | றோ.க.த. பாடசாலை, சுன்னாகம். |
| 03 | 03 | சுன்னாகம் மேற்கு | திரு.வே.பிரதீஸ்குமார் | 01.11.2008 | சனிக்கிழமை 10 மணி | சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை |
| 04 | 04 | சுந்தரோடை | திரு.அ.தயாளன் | 01.11.2008 | சனிக்கிழமை 10 மணி | சுந்தரோடை தமிழ் சுந்தையா வித்தியாசாலை |
| 05 | 05 | உடுவில், டச்சு வீதி. | திரு.பா.ஸ்ரீக்குமார் | 01.11.2008 | சனிக்கிழமை 10 மணி | உடுவில் மான்ஸ் ஆங்கில கலவன் பாடசாலை |
| 06 | 06 | சங்குவேலி | திரு. ஐ.நாகேஸ்வரன் | 01.11.2008 | சனிக்கிழமை 10 மணி | சங்குவேலி தமிழ்க் கலவன் பாடசாலை |
| 07 | 07 | உடுவில், மானிப்பாய் வீதி. | திரு.க.திசாகரன் | 01.11.2008 | சனிக்கிழமை 10 மணி | கிளை 07, உடுவில் கட்டடம். |
| 08 | 08 | மல்வம் | திரு.க.நிமலன் | 01.11.2008 | சனிக்கிழமை 10 மணி | கிளை 08, மல்வம் கட்டடம். |
| 09 | 09 | உடுவில் தெற்கு | திரு.வி.ஜெயந்தன் | 01.11.2008 | சனிக்கிழமை 10 மணி | கிளை 09, உடுவில் தெற்குக் கட்டடம். |
| 10 | 10 | தாவடி தெற்கு | திரு.ஜேம்ஸ் மேசன் | 01.11.2008 | சனிக்கிழமை 10 மணி | கிளை 10, தாவடி தெற்குக் கட்டடம். |
| 11 | 11 | பிள்ளையார் கோவிலடி, தாவடி. | திரு.தி.வித்தக கலாநிதி | 01.11.2008 | சனிக்கிழமை 10 மணி | கிளை 11 தாவடிக் கட்டடம். |
| 12 | 12 | பரராஜசேகரப்பிள்ளையார் கோவிலடி, இணு. | திரு.க.சசிதரன் | 01.11.2008 | சனிக்கிழமை 10 மணி | இந்துக் கல்லூரி , இணுவில். |
| 13 | 13 | இணுவில் சந்தி | திரு.சி.ஸ்ரீதரன் | 01.11.2008 | சனிக்கிழமை 10 மணி | கிளை 13, இணுவில் சந்திக் கட்டடம் |
| 14 | 14 | கே.கே.எஸ்.வீதி, இணுவில். | செல்வி சி.சிவயோகினி | 01.11.2008 | சனிக்கிழமை 10 மணி | மத்திய கல்லூரி இணுவில் (மேற்பிரிவு) |
| 15 | 15 | ஆஸ்பத்திரியடி, இணுவில். | திருமதி பா.கலைச்செல்வி | 01.11.2008 | சனிக்கிழமை 10 மணி | மத்திய கல்லூரி இணுவில் (மேற்பிரிவு) |
| 16 | 16 | கே.கே.எஸ். வீதி, சுன்னாகம். | திரு.அ.சிராளன் | 01.11.2008 | சனிக்கிழமை 10 மணி | உடுவில் மான்ஸ் தமிழ்க் கலவன் பாடசாலை |
| 17 | 17 | கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம். | திருமதி சி.கணேசு | 01.11.2008 | சனிக்கிழமை 10 மணி | முன்னால் இருக்கும் தனியார் கட்டடம் |
| 18 | 18 | புன்னாலைக் கட்டுவன் தெற்கு | திரு.த.செல்வசோதி | 01.11.2008 | சனிக்கிழமை 10 மணி | புன்னாலைக் கட்டுவன் அரசினர் த.க. பாடசாலை |
| 19 | 19 | ஈவினை | திரு.வி.சிவகுமார் | 01.11.2008 | சனிக்கிழமை 10 மணி | ஈவினை கற்பக விநாயகர் மடாலயம் |
| 20 | 20 | குப்பிளான் | திரு.பா.சிவபாலன் | 01.11.2008 | சனிக்கிழமை 10 மணி | குப்பிளான் விக்னேஸ்வரா வித்தியாசாலை |
| 21 | 21 | ஏழாலை வடக்கு | திரு.வை. கைலைநாதன் | 01.11.2008 | சனிக்கிழமை 10 மணி | கிளை 21 ஏழாலை வடக்குக் கட்டடம் |
| 22 | 22 | ஏழாலை கிழக்கு | திரு.இ.விஜயமோகனராஜன் | 01.11.2008 | சனிக்கிழமை 10 மணி | கிளை 22 ஏழாலை கிழக்கு கட்டடம் |
| 23 | 23 | ஏழாலை தெற்கு, சுன்னாகம். | திரு.ந.பத்மசோதி | 01.11.2008 | சனிக்கிழமை 10 மணி | கிளை 23 ஏழாலை தெற்குக் கட்டடம் |
| 24 | 23ஏ | மயிலங்காடு, சுன்னாகம். | திருமதி அ.ஜெகநாதன் | 01.11.2008 | சனிக்கிழமை 10 மணி | கிளை 23 ஏ மயிலங்காடு கட்டடம் |
| 25 | 24 | ஏழாலை மத்தி. | திரு.ச.சஜீந்திரன் | 01.11.2008 | சனிக்கிழமை 10 மணி | கிளை 23 ஏழாலை தெற்குக் கட்டடம் |
| 26 | 25 | ஏழாலை மேற்கு. | திரு.அ.விமல்ராஜ் | 01.11.2008 | சனிக்கிழமை 10 மணி | கிளை 25 ஏழாலை மேற்குக் கட்டடம் |
| 27 | 26 | திடற்புலம், வசாவிளான். | திரு.சி.குணாளன் | 01.11.2008 | சனிக்கிழமை 10 மணி | ஈவினை கற்பக விநாயகர் ச.ச. நிலைய மண்டபம் |
| 28 | 28 | மயிலனி, சுன்னாகம். | திரு.க.கமலநாதன் | 01.11.2008 | சனிக்கிழமை 10 மணி | கிளை 28 மயிலணி கட்டடம் |
| 29 | 29 | கற்பகப்பிள்ளையார் கோவிலடி, உடுவில். | திரு.சு.கணேசு | 01.11.2008 | சனிக்கிழமை 10 மணி | கிளை 29 கற்.பிள்ளையார் கோவிலடி, உடுவில் கட்டடம் |
| 30 | 30 | புன்னாலைக் கட்டுவன் வடக்கு | திரு.ஆர். பாலச்சந்திரன் | 01.11.2008 | சனிக்கிழமை 10 மணி | கிளை 19 ஈவினை கட்டடம் |

முக்கிய குறிப்பு: வாக்களிக்கத் தகுதியுள்ள சகல உறுப்பினர்களுக்கும் அறிவித்தல் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அறிவித்தல் கிடைக்கப்பெறாதவர்களும் இந்த அறிவித்தலை தனிப்பட்ட அறிவித்தலாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

கூ.அ.உ.ஆணையாளர் பணிமனை,
யாழ்ப்பாணம். 22.10.2008

ஒப்பம்: பொ.சிவலிங்கம்,
கூ.அ.உ.ஆணையாளர், யாழ்.மாவட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒபாமாவை கொல்லச்சதி திட்டம் தீட்டிய இருவர் கைது


டேனியல் கோவர்ட்


போல்கிளிசல் மேன்

வாஷிங்டன்,ஒக்.29

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஜனநாயக்கட்சி வேட்பாளர் பராக் ஒபாமாவை கொலைசெய்ய சதித்திட்டம் தீட்டியவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில், பொலிஸார் இருவரைக் கைது செய்துள்ளனர்.

18வயதான போல் கிளிசல் மேன் என்னும் இளைஞரும், 20 வயதான டேனியல் கோவர்ட் என்னும் இளைஞருமே கைது செய்யப்பட்டவர்களாவர். இவர்களிடமிருந்து பொலிஸாரால் மூன்று துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இன வெறியைத்தூண்டி, அமெரிக்காவின் பல்வேறு பகுதிகளிலும் கலவரங்களை மூட்டிவிடவும், கலவரங்களுக்கு மத்தியில் ஒபாமாவைச் சுட்டுக்கொல்லவும் இருவர் சதித்திட்டம் தீட்டியுள்ளனர் என உளவுத் துறையினரால் கண்டு பிடிக்கப்பட்டது.

உளவுத்துறையினர் அளித்த தகவலை அடுத்து, இவ்விரு சந்தேக நபர்களும் டென்னிசி மாநிலத்தில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, விசாரணைக்கு உட்படுத்தப் பட்டார்கள்.

இவ்விசாரணைகள் மூலம், நூற்றுக்கு மேற்பட்ட கறுப்பு இனத்தவர்களைச் சுட்டுக் கொன்று, இன மோதலை ஏற்படுத்தவும், இறுதியில் ஒபாமாவை சுட்டுக் கொல்லவும் சதித்திட்டம் தீட்டப்பட்டிருந்தமை தெரிய வந்துள்ளது என பொலிஸ் வட்டாரம் குறிப்பிட்டுள்ளது.

இதற்காக இவ்விரு சந்தேக நபர்களும் ஒரு துப்பாக்கி விற்பனைக் கடையிலிருந்து துப்பாக்கிகளை கொள்ளையிட திட்டமிட்டிருந்தமையும் தெரியவந்துள்ளது. அதே வேளை, டேனியல் தனது தாத்தாவின் துப்பாக்கியை திருடி வைத்திருந்தமையும் தெரியவந்துள்ளது என்றும் இவ்வட்டாரம் தெரிவித்தது.

பொதுக்கூட்டத்தில் ஒபாமா பேசும் போது அவரை நோக்கி வேகமாகக் காரை ஓட்டிச் செல்லவும், காரின் ஜன்னலுக்கூடாக அவரை நோக்கி சரமாரியாக துப்பாக்கி பிரயோகம் செய்யவும் தான் திட்டமிட்டிருந்தார் என, டேனியல் விசாரணையில் குறிப்பிட்டுள்ளார். இவ்விரு சந்தேக நபர்களும் மாணவர்களாவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

## மாவோவுக்கு சீனாவில் பிரமாண்டமான சிலை

பீஜிங்,ஒக்.29

சீனாவில் கம்யூனிச புரட்சிக்கு வித்திட்ட மாவோவுக்கு 20 மீட்டர் உயர இரும்புச் சிலை அமைக்கப்பட்டுள்ளது.

சீனாவிலுள்ள சாங்குவிங் மருத்துவனை பல்கலைக்கழகத்தில் இந்த சிலை அமைப் பட்டுள்ளது. 1949 ஆண்டு மாவோ சீனாவில் கம்யூனிச புரட்சி ஏற்பட வழி செய்தார்.

நவீன சீனாவின் தந்தையாக அவர் கருதப்பட்டு வருகிறார். அந்நாட்டு பல்கலைக் கழகங்களில் மாவோவுக்கு சிலை வைத்து கௌரவிக்கும் பழக்கம் இருந்து வருகின்றது.

இதன் படி மருத்துவமனை பல்கலைக் கழகத்தில் 20 அடி இரும்புச் சிலை மாவோவுக்கு அமைக்கப்பட்டுள்ளது. சிலையின் பீடத்தை சேர்த்து 34 அடி அளவுக்கு இது பிரமாண்டமாக அமைந்துள்ளது.

## செவ்வாய்க் கிரக ஆராய்ச்சி துரிதம்

வாஷிங்டன்,ஒக்.29



செவ்வாய்க் கிரக ஆராய்ச்சியில் அமெரிக்காவின் நாசா நிறுவன விஞ்ஞானிகளும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகளும் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

சிவப்புக் கிரகம் என்று அழைக்கப்படும் செவ்வாய்க் கிரகம் 6755 கி.மீ விட்டம் உள்ளது. சூரியனிலிருந்து 22 கோடி கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளது.

செவ்வாய்க் கிரகத்தில் தண்ணீர் இருப்பதை சமீபத்தில் நடத்திய ஆய்வில் விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர். செவ்வாய் கிரகத்துக்கு அனுப்பப்பட்ட ஆய்வுக் கிரகம் அனுப்பிய படங்கள் மூலம் இது தெரிய வந்துள்ளது.

இந்த நிலையில் செவ்வாய்க் கிரகத்தில் என்றாவது ஒரு நாள் மனிதன் குடியேற முடியும் என்று விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

முதல் கட்டமாக செவ்வாய்க் கிரகத்தில் ஆராய்ச்சி நடத்துவதற்காக விண்வெளி நிபுணர்களை அனுப்பவும் அந்த நிபுணர்கள் தங்குவதற்காக குடியிருப்புகள் கட்டவும் விஞ்ஞானிகள் திட்டமிட்டுள்ளனர்.

அந்த வீடுகளைக் கட்டுவதற்காக தேனீக்கள் மற்றும் எறும்பு வடிவிலான ரோபோக்களை தயாரிக்கும் முயற்சியில் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர்.

இது போன்று 100 சிறு ரோபோக்கள் முதல் கட்டமாக உருவாக்கப்படும். அங்கு ரோபோக்கள் ஒன்றுக்கொன்று தானாகே தகவல்களை பரிமாறிக்கொள்ளும். தேவைப்பட்டால் அவை ஒன்று சேர்ந்து பெரிய ரோபோக்களாக உருமாறிக் கொள்ளும்.

## சீனத் தொழிலாளர்கள் சூடானில் சுட்டுக்கொலை

கார்டூம்,ஒக்.29

சூடானில் தீவிரவாத ஆயுததாரிகளால் கடத்தப்பட்ட ஒன்பது சீனத் தொழிலாளர்களில் ஐவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர் என சூடானிய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

கோர்டோபேன் பிராந்தியத்திலுள்ள எண்ணெய் வயலிலிருந்து, கடந்த ஒன்பது நாள்களுக்கு முன்னர், இந்த சீனத்தொழிலாளர்கள் ஆயுததாரிகளால் கடத்தப்பட்டார்கள் என்றும் அது குறிப்பிட்டுள்ளது.

கோர்டோபேன் எல்லையை அடுத்துள்ள டாபூர் பிராந்திய தீவிரவாத ஆயுததாரிகளே இவர்களைக் கடத்தியுள்ளார்கள். இத் தீவிரவாதிகள் டாபூர் நீதிக்கும் சமத்துவத்திற்குமான அமைப்பைச் சேர்ந்தவர்கள் என வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் அலி அல்-சத்தீக் தெரிவித்துள்ளார்.

நீதிக்கும் சமத்துவத்துக்குமான அமைப்பின் நேரடி பணிப்புரைக்கிணங்கவே இவர்கள் கடத்தப்பட்டுள்ளார்கள். இதில் சந்தேகமில்லை என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். இதனை இந்த அமைப்பு நிராகரித்துள்ளது.

கோர்ட்டோபேன் பிராந்தியத்தில் எங்கள் தீவிரவாதப் போராளிகளும் உள்ளார்கள். எனினும் சீனத் தொழிலாளர்கள் கடத்தலிலும், ஐவர் படுகொலையிலும் இவர்கள் சம்பந்தப்படவில்லை என அமைப்பின் பேச்சாளரொருவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஒன்பது நாட்களுக்கு முன்னர், எண்ணெய் வயலுக்கருகிலிருந்து இரு வாகனங்களில் பயணித்த ஒன்பது சீனத் தொழிலாளர்களும், உள்ளூர் சாரதிகளும் ஆயுததாரிகளால் கடத்தப்பட்டார்கள். எனினும் சாரதிகளில் ஒருவர் விடுவிக்கப்பட்டார்.

விடுவிக்கப்பட்ட சாரதியிடம் கடத்தல்காரர்களால் ஒப்படைக்கப்பட்ட கடிதமொன்றில், பிராந்திய எண்ணெய் வளத்தில் எங்களுக்கும் பங்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை அடங்கியிருந்தது.

## கொங்கோ தீவிரவாதிகளுக்கு எதிராக ஐ.நா.அமைதிப்படை அதிரடித் தாக்குதல்

திஜிபோதி,ஒக்.29

கொங்கோ ஜனநாயகக்குடியரசின் கிழக்கில், தீவிரவாதப் போராளிகளுக்கு எதிரான அதிரடித்தாக்குதல்களை கொங்கோ அரச படைகளும், ஐ.நா. அமைதிப்படைகளும் கூட்டாக மேற்கொண்டுள்ளன என இராணுவ வட்டாரம் தெரிவித்தது.

வட கிவூ மாகாணத் தலைநகரான கோமாவை நோக்கி தீவிரவாதப் போராளிகள் முன்னேறி வருகிறார்கள். இவர்கள் இராணுவத்திலிருந்து நீக்கப்பட்ட ஜெனரல் லோரண்ட் நிகுண்டாவிற்கு விசுவாசமானவர்கள் என ஐ.நா. பணியகத் தலைவர் அலண்டோஸ் கூறினார்.

இப்போராளிகள் தடுத்து நிறுத்தப்படுவார்கள். அப்பகுதிக்கு அரச துருப்புகள் விரைந்துள்ளன. அப்பகுதிக்கு அனுசரணையாக அமைதிப்படை செயல்படும் என்றும் அவர் பி.பி.சி. க்குத் தெரிவித்தார்.

குண்டு வீச்சு ஹெலிக்கொப்டர்கள், கவச வாகனங்கள் ஆகியவை சகிதம் கொங்கோலிய அரச துருப்புகள் கோமாவின் வடக்கை நோக்கி விரைந்துள்ளன. அமைதிப்படைகள் அவற்றிற்கு உதவும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அகதி முகாம்கள், மக்கள் நலன் காப்பகங்கள் ஆகியவை மீதான தாக்குதல்களை அனுமதிக்க முடியாது. அவற்றைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளில் அமைதிப் படைகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

கிழக்கு கொங்கோவின் இதர பகுதிகளிலும் தீவிரவாதப் போராளிகளுக்கும் அரச படைகளுக்கு மிடையே கடும் மோதல்கள் ஏற்பட்டுள்ளன. அரச படைகளுக்கு அனுசரணையாக அமைதிப்படைகளும் செயற்படுகின்றன என இராணுவ அதிகாரியொருவர் விளக்கினார்.

கிழக்குக் கொங்கோவில் மூண்டுள்ள மோதல்களால், நூற்றுக்கணக்கான சிவிலியன்கள் இடம் பெயர்ந்து வருகிறார்கள். அதேவேளை தீவிரவாதிகளின் தாக்குதல்களிலிருந்து தம்மைப் பாதுகாக்க ஐ.நா. அமைதிப்படைகள் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறிவிட்டன என குடியிருப்பாளர்கள் குற்றஞ்சாட்டி வருகிறார்கள்.

இக்குற்றச்சாட்டின் பேரில் பிராந்தியத் தலைநகரிலுள்ள ஐ.நா. தலைமையகம் நூற்றுக் கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்களால் தாக்கப்பட்டுள்ளது. கொங்கோவில் 17 ஆயிரம் வீரர்களைக் கொண்ட வலிமை படைத்த ஐ.நா. படை நிலைகொண்டுள்ளது. எனினும் எம்மைப் பாதுகாக்கத்தக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் இவர்கள் முறையிட்டுள்ளார்கள்.

ஐ.நா. தலைமையக ஜன்னல்கள் ஆர்ப்பாட்டக்காரர்களால் அடித்து நொறுக்கப்பட்டுள்ளன. வாகனங்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளன என கோமாவிலுள்ள ஐ.நா. பெண் பேச்சாளரொருவர் பி.பி.சி. செய்திச் சேவைக்குத் தெரிவித்தார்.

இந்த ஆர்ப்பாட்டத்தையடுத்தே தீவிரவாதப் போராளிகளுக்கு எதிரான தாக்குதலில், அரச படைகளுக்கு எதிரான தாக்குதலில், அரச படைகளுடன் ஐ.நா. அமைதிப்படையும் கூட்டாக ஈடுபட்டுள்ளது என கோமா நகர குடியிருப்பாளர் ஒருவர் குறிப்பிட்டார்.




## குழந்தைகளை தத்தெடுக்க நேபாளத்தில் பச்சைக்கொடி

காத்மண்டு,ஒக்.29

வெளிநாட்டுப் பிரஜைகள் நேபாளக் குழந்தைகளைத் தத்தெடுப்பதற்கு நேபாள அரசு மீண்டும் அனுமதி அளித்துள்ளது. கடந்த ஆண்டு இந்த அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

குழந்தைகளைத் தத்தெடுக்கும் வெளிநாட்டு முகவர் நிறுவனங்களுக்கு இந்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அமெரிக்கா, ஜெர்மனி, கனடா ஆகிய நாடுகள் உட்பட பல நாடுகளைச் சேர்ந்த வசதிபடைத்த பெற்றோரின் வேண்டுகோள்களுக்கிணங்க, இந் நிறுவனங்கள் குழந்தைகளைத் தத்தெடுக்கின்றன.

இப்பெற்றோர்கள் குழந்தைகளைத் தத்தெடுத்து, வளர்த்து, பராமரித்து வருவர். நல்ல கல்வித்தரம் முறையான சுக நலன் பேணும் திட்டங்கள் ஆகியவற்றைக் கொண்ட நாடுகளே குழந்தைகள் சுவீகாரத்துக்கு அனுமதிக்கப்பட்டுள்ளன என நேபாள அதிகாரியொருவர் தெரிவித்தார்.

குழந்தைகளைக் கையளிக்கும் விடயத்தில் ஊழல்கள் இடம் பெறுகின்றன. குழந்தை விற்பனையும் இடம் பெறுகிறது என முன்னர் முறையீடுகள் எழுந்தன. இவற்றையொட்டியே, கடந்த ஆண்டு குழந்தை சுவீகாரத்துக்கு தடை விதிக்கப்பட்டிருந்தது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நம்பகத்தன்மை மிக்க முகவர் நிறுவனங்களுக் கூடாக, விண்ணப்பிக்கும் வசதி படைத்த குடும்பங்களின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்காக குழந்தைகள் கையளிக்கப்படும் என மகளிருக்கான குழந்தைகள், சமூக நல பராமரிப்பு அமைச்சைச் சேர்ந்த பிரகாஷ் குமார் அதிகாரி தெரிவித்துள்ளார்.

58 வெளிநாட்டு முகவர் நிறுவனங்களுக்கு இந்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. குழந்தைகளை சுவீகரிக்கும் குடும்பங்களுக்கும் நேபாள அதிகாரிளுக்கு மிடையிலான ஊடகங்களாக இந்நிறுவனங்கள் செயல்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## இரு கொலையாளிகளுக்கு ஜப்பானில் மரணதண்டனை

டோக்கியோ,ஒக்.29

ஜப்பான் மேலும் இரு கொலையாளிகளைத் தூக்கிலிட்டது. இவர்களில் ஒரு கொலைஞர் இரு மாணவிகளின் கழுத்தை நெரித்துக் கொன்றவராவார். இவர்களோடு ஜப்பானில் இவ்வாண்டு, 15 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஜப்பானிய நீதியமைச்சு அறிக்கை யொன்றை விடுத்துள்ளது. இதில் கொலைக் குற்றச்சாட்டுகளில் குற்றவாளிகளாகத் தீர்க்கப்பட்ட இரு கொலைஞர்கள் செவ்வாய்கிழமை தூக்கிலிடப்பட்டார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மிச்சி டொஷி குமா என்னும் 70 வயதான நபரும், மஸாஹிரோ தகாஷியோ என்னும் 55 வயதான நபருமே தூக்கிலிடப்பட்டார்கள் என்றும் இவ்வறிக்கையில் விவரிக்கப் பட்டுள்ளது.

1992 ஆம் வருட பெப்ரவரியில் மிச்சி டொஷி குமா, தென் ஜப்பானில் பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்த ஏழு வயதான இரு மாணவிகளைக் கடத்தி, கழுத்தை நெரித்துக் கொன்று, மலைப்பிராந்தியத்துக்குள் சடலங்களை போட்டுள்ளார் என்றும் இதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மஸா ஹிரோ தகா ஷியோ 2004 ஆம் வருட மார்ச்சில், வட ஜப்பானில் பல வந்தமாக ஒரு வீட்டை உடைத்து உட்சென்று, 55 வயதான ஒரு பெண்ணையும், 83 வயதான அவரது தாயாரையும் கத்தியால் குத்திக் கொன்றுவிட்டு, 50,000 யென்களைத் திருடிச் சென்றுள்ளார் என்றும் அறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ளது.

இந்தஇரு கொலைகளும் குரூர நோக்கத்தின் அடிப்படையில் புரியப்பட்டவை என நீதியமைச்சர் எஸூக்கி மோரி செய்தியாளர்கள் மாநாடொன்றில் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டில்லியில் இன்று மூன்றாவது டெஸ்ட் ஆரம்பம்!

## தொடரை வெல்லுமா இந்தியா?

புதுடில்லி, ஒக். 29

இந்தியா, அவுஸ்திரேலியா அணிகள் மோதும் மூன்றாவது டெஸ்ட் போட்டி இன்று டில்லியில் ஆரம்பமாகின்றது மொஹாலியில் பிரமாண்ட வெற்றியை எட்டிய இந்திய அணி, தொடரைக் கைப்பற்றும் முனைப்புடன் களமிறங்குகிறது. இந்திய மண்ணில் தடுமாறி வரும் அவுஸ்திரேலிய அணி, பதிலடி கொடுக்க தீவிரமாகத் தயாராகி வருகிறது.

இந்தியா சென்றுள்ள அவுஸ்திரேலிய அணி நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. பெங்களூரில் நடந்த முதல் போட்டி சமநிலையில் முடிந்தது. மொஹாலியில் நடந்த இரண்டாவது டெஸ்டில் இந்திய அணி 320 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று, 1-0 என்ற முன்னிலையில் உள்ளது.

மூன்றாவது டெஸ்ட் போட்டி இன்று டில்லி, பெரோஸ் ஷா கோட்லா மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

இந்திய அணியைப் பொறுத்த வரை, இத்தொடரில் திறமையை வெளிப்படுத்தி வருகிறது. கூட்டு முயற்சியுடன் போராடி வரும் இந்திய அணியின் முன்பாக, அவுஸ்திரேலியா திணறி வருகிறது.

பல்வேறு விமர்சனங்களுக்கு மத்தியில் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில் களமிறங்கிய சச்சின், தமது திறமையை சிறப்பாக வெளிப்படுத்தி வருகிறார். மொஹாலி டெஸ்டில் அரைச்சதம் கடந்து அணியை பலப்படுத்தியதோடு, டெஸ்ட் அரங்கில் அதிக ஓட்டங்கள் குவித்து புதிய உலக சாதனையும் அவர் படைத்தார். தற்போது நல்ல நிலையில் இருக்கும் சச்சின், டில்லி டெஸ்டிலும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்தொடருடன் டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற உள்ள கங்குலி, எந்த வித நெருக்கடியும் இல்லாமல் மிரட்டி வருகிறார். இரண்டாவது டெஸ்டில் சதமடித்து அணியின் வெற்றிக்கு அவர் வித்திட்டார். டில்லியிலும் கங்குலி சாதிக்க அதிக வாய்ப்புகள் உள்ளன. மற்றொரு சிரேஷ்ட வீரர் டிராவிட்டும் தனது பங்குக்கு சிறப்பாகவே ஆடி வருகின்றமை இந்திய அணிக்கு கூடுதல் பலம்.

ஷேவாக், கம்பீர் ஜோடியின் ஆரம்பத் துடுப்பாட்டம் இந்திய அணிக்குப் பலமாக உள்ளது. ஷேவாக் அதிரடியாக ஓட்டங்கள் சேர்க்க, கம்பீர் நிதானமாக ஆடி நம்பிக்கை அளிக்கிறார். மொஹாலி டெஸ்டில் சதம் பதிவு செய்த கம்பீர், இரண்டு டெஸ்ட் போட்டிகளின் முடிவில் 221 ஓட்டங்கள் சேர்த்து இந்தியா தரப்பில் முதலிடத்தில் உள்ளார். சொந்த ஊரில் களமிறங்கும் இந்த ஜோடி, தங்களது வழக்கமான ஆட்டத்தை தொடரும் பட்சத்தில், இந்திய அணி மற்றொரு வெற்றியை எட்டலாம்.

மொத்தத்தில் இந்திய அணியின் அபார பந்து வீச்சு, டில்லி டெஸ்டிலும் தொடர்ந்தால் இந்தியா தொடரை 2-0 என கைப்பற்றி சாதிக்கலாம்.

தோள்பட்டை காயம் காரணமாக மொஹாலி டெஸ்டிலிருந்து விலகிய, டெஸ்ட் தலைவர் கும்ளே, டில்லியில் கலக்கத் தயாராக இருக்கிறார். டில்லி மைதானம் கும்ளேயின் சாதனைக் களம் என்பதால், அவுஸ்திரேலிய அணியின் அச்சம் அதிகரித்துள்ளது. ஆனால் தற்போது பின்னடைவைச் சந்தித்திருக்கும் கும்ளே, சிறப்பான பந்து வீச்சை வெளிப்படுத்த வேண்டியது கட்டாயம். இவர் அணியில் இடம்பெறும் பட்சத்தில் மொஹாலி டெஸ்டில் 7 விக்கெட் கைப்பற்றிய அமித் மிஸ்ரா நீக்கப்படலாம்.

இந்திய மண்ணில் உலக சாம்பியனான அவுஸ்திரேலிய அணி தடுமாறி வருகிறது.

## பழி தீர்க்குமா அவுஸ்திரேலியா?

மொஹாலி டெஸ்டில் தோல்வியைப் பதிவு செய்து, அவுஸ்திரேலிய ஊடகங்களின் கண்டனத்துக்குள்ளாகியுள்ளது. அந்த அணியின் துவக்க வீரர் ஹைடனின் துடுப்பாட்டம் பெரும் பின்னடைவில் உள்ளது. கடிச் ஆறுதல் அளித்து வருகிறார்.

தற்போதைக்கு துடுப்பாட்டத்தில் அவுஸ்திரேலிய அணியின் மிகப் பெரிய பலமே, ஹஸி தான். இதுவரை நடந்த இரண்டு டெஸ்ட் போட்டிகளில் 232 ஓட்டங்கள் குவித்து முதலிடத்தில் உள்ளார் ஹஸி. டில்லி டெஸ்டிலும் ஹசியின் அபார ஆட்டம் தொடரும் பட்சத்தில், இந்திய அணிக்கு நெருக்கடி கொடுக்கலாம். பெங்களூர் டெஸ்டில் சதமடித்த ஆஸி. அணித் தலைவர் பொண்டிங், டில்லி போட்டியில் சாதித்துக் காட்ட வேண்டிய கட்டாயத்தில் உள்ளார். துணைத் தலைவர் மைக்கல் கிளார்க், பெரிய அளவில் சாதிக்காதது அவுஸ்திரேலியாவுக்கு ஏமாற்றம் அளித்துள்ளது. மொஹாலி டெஸ்டின் இரண்டாவது இன்னிங்ஸில் கடைசி வரை போராடிய மைக்கல் கிளார்க், டில்லியில் சிறப்பாக விளையாட வாய்ப்புள்ளது.

சைமண்ட்சுக்கு பதில் அணியில் இடம் பிடித்த ஷேன் வட்சன், அவரது பணியை சிறப்பாகச் செய்து வருகின்றமை அவுஸ்திரேலியாவுக்கு ஆறுதலாக அமைந்துள்ளது. சகலதுறை ஆட்டக்காரர் வட்சன், டில்லி டெஸ்டில் இந்தியாவுக்கு நெருக்கடி கொடுப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஷேன் வோர்ன், மெக்ராத் ஆகியோர் இல்லாத அவுஸ்திரேலிய அணி தத்தளித்து வருகிறது. தற்போது அணியில் இடம் பெற்றுள்ள பந்து வீச்சாளர்கள் எவருக்கும், இந்திய மண்ணில் பந்து வீசிய முன் அனுபவம் இல்லை. இதனால் விக்கெட்டுக்களைக் கைப்பற்றத் திணறி வருகின்றனர். முன்னணி வீரர் பிரட் லீயின் பந்து வீச்சு சுத்தமாக எடுபடவில்லை. மொஹாலி டெஸ்டில் இவருக்கு தலைவர் பொண்டிங் போதிய வாய்ப்பு அளிக்கவில்லை. இதன் காரணமாக பொண்டிங், பிரட் லீ இடையே மோதல் ஏற்பட்டுள்ளது. ஜோன்சன், அறிமுக வீரர் சிடில் ஆகியோர் ஆறுதல் அளிக்கின்றனர். காயத்திலிருந்து மீண்டு வரும் ஸ்ருவேர்ட் கிளார்க், டில்லி டெஸ்டில் அவுஸ்திரேலியாவுக்கு பக்கபலமாக இருப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. அறிமுக சுழற்பந்து வீச்சாளர் கிரஞ்ஜாவை, மூன்றாவது டெஸ்டில் களமிறக்க அவுஸ்திரேலியா தீவிரம் காட்டி வருகிறது. எதுவாக இருப்பினும் டில்லி டெஸ்ட் போட்டியில், அவுஸ்திரேலிய அணி பந்து வீச்சை பன்மடங்கு பலத்துடன் களமிறக்கும் என்பதில் சந்தேகமில்லை.

டில்லி பெரோஸ் ஷா கோட்லா மைதானம் சுழற்பந்து வீச்சாளர்களுக்கு சாதகமானது. வேகப்பந்து வீச்சு இம்மைதானத்தில் அவ்வளவாக எடுபடாது. இந்திய அணியை பொறுத்தவரை, கும்ளே, ஹர்பஜன், மிஸ்ரா என சுழலுக்கு பிரத்தியேகப் பந்து வீச்சாளர்கள் உள்ளனர். அவுஸ்திரேலிய அணியில் திறமையான சுழற்பந்து வீச்சாளர்கள் தற்போது இல்லை. இருப்பினும் மைக்கல் கிளார்க், கிரஞ்ஜா, வைற் ஆகியோர் சாதிக்க வாய்ப்பு உள்ளது. மொத்தத்தில் டில்லி டெஸ்ட், இரு அணிகளுக்கும் சவாலாக அமையும்.

டில்லி பெரோஸ் ஷா கோட்லா மைதானம் இந்திய அணித் தலைவர் அனில் கும்ளேயின் ராசியான மைதானம். இங்கு கடந்த 1999ல் நடந்த பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் போட்டியின் இரண்டாவது இன்னிங்ஸில் தானே 10 விக்கெட்டுக்களையும் கைப்பற்றி, உலக சாதனை படைத்தார்.

இதன்மூலம் இங்கிலாந்து வீரர் ஜிம் லேகருக்கு அடுத்து ஒரே இன்னிங்ஸில் 10 விக்கெட் வீழ்த்திய இரண்டாவது வீரர் என்ற பெருமையை கும்ளே பெற்றார்.

## லக்ஷ்மன் அவுட்!

புதுடில்லி, ஒக். 29

''டில்லி டெஸ்டில் லக்ஷ்மனுக்குப் பதில் அமித் மிஸ்ராவுக்கு வாய்ப்பு கொடுப்பது இந்தியாவின் வெற்றி வாய்ப்பை பிரகாசமாக்கும்,'' என்று தேர்வுக்குழுத் தலைவர் கிரண் மோரே தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், ''டில்லி ஆடுகளம் சுழற்பந்து வீச்சுக்கு மிகவும் சாதகமானது. இங்கு 10 விக்கெட்டுகள் வீழ்த்தி சாதனை புரிந்துள்ளார் அனில் கும்ளே. ஹர்பஜன், அறிமுக வீரர் அமித் மிஸ்ரா ஆகியோரும் சிறப்பாக செயல்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில் டில்லி டெஸ்டில் மூன்று சுழற்பந்து வீச்சாளர்களையும் களமிறக்கலாம். இது அவுஸ்திரேலியாவுக்கு அதிர்ச்சியை அளிக்கும். தவிர, இந்தியாவின் வெற்றி வாய்ப்பும் பிரகாசமாகும். அதற்குப் பதில் தற்போது தடுமாறிவரும் சிரேஷ்ட வீரர் லக்ஷ்மனை நீக்கி விடலாம்.'' என்றார்.




## சம்பியனாவாரா ஆனந்த்?

ஜேர்மனி, ஒக். 29

உலக செஸ் சம்பியன் போட்டி ஜேர்மனியில் உள்ள பான் நகரில் நடைபெற்று வருகிறது.

12 சுற்றுக்களைக் கொண்ட இந்தப்போட்டியில் நடப்புச் சம்பியனும், இந்திய கிராண்ட் மாஸ்டருமான விஸ்வநாதன் ஆனந்த்-ரஷ்ய கிராண்ட் மாஸ்டர் விளாடிமிர் கிராம்னிக் ஆகியோர் மோதி வருகிறார்கள். யார் முதலில் 6.5 புள்ளிகளைப் பெறுகிறாரோ அவர் சம்பியன் பட்டம் பெறுவார்.

10-வது சுற்று நேற்று முன்தினம் நடந்தது. இதில் ஆனந்த் வெள்ளை நிற காய்களுடன் விளையாடினார். இதில் சமநிலை அடைந்தாலே ஆனந்த் சம்பியன் பட்டம் பெறுவார் என்ற நிலை இருந்தது.

ஆனால் எதிர்பாராத விதமாக ஆனந்த் 29ஆவது காய் நகர்த்தலுக்குப் பிறகு தோல்வி அடைந்தார். இதன் மூலம் கிராம்னிக் பெற்ற முதல் வெற்றி இதுவாகும். ஆனந்த் 3 வெற்றி பெற்றுள்ளார். 6 சுற்றுகள் சமநிலையில் முடிவடைந்தன.

10 சுற்றுகள் முடிவில் ஆனந்த் 6-4 என்ற புள்ளிக் கணக்கில் முன்னணியில் உள்ளார். ஆனந்த் இன்னும் 0.5 புள்ளி பெற்றால் உலக சம்பியன் பட்டத்தைப் பெறுவார்.

இன்னும் 2 சுற்றுகள் எஞ்சியுள்ளன. இதில் ஏதாவது ஒரு சுற்றில் சமநிலை அடைந்தாலே ஆனந்த் பட்டம் பெறுவார். ஒருவேளை 2 சுற்றிலும் ஆனந்த் தோற்றால் 6-6 என்ற சமநிலை ஏற்படும். பின்னர் டை பிரேக்கர் மூலம் முடிவு எட்டப்படும். இந்த நிலைமைக்கு ஆனந்த் கொண்டு செல்ல விடமாட்டார் என்று தெரிகிறது.



11-வது சுற்று இன்று (புதன்கிழமை) நடக்கிறது. இந்த ஆட்டம் சமநிலை அடைந்தால் ஆனந்த் 3ஆவது முறையாக உலக சம்பியன் பட்டத்தைப் பெறுவார். 2000, 2007ஆம் ஆண்டுக்கான அவர் உலக சம்பியன் பட்டத்தைப் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 300 விக்கெட் நோக்கி ஹர்பஜன்!




இந்திய அணியின் சர்ச்சைக்குரிய சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங், அவுஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டிகளில் ஆக்ரோஷமாக விளையாடக்கூடியவர். அதிலும் ஆஸி. அணித் தலைவர் பொண்டிங்கின் விக்கெட்டை வீழ்த்தி, அவரை அதிக முறை ஆட்டமிழக்கச் செய்தவர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார். டில்லி டெஸ்டில் இவர் 300 விக்கெட் என்ற மைல்கல்லை எட்டக் காத்திருக்கிறார்.

ஹர்பஜன் 1998இல் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான பெங்களூர் டெஸ்டில் அறிமுகமானார். தனது முதல் டெஸ்டில் அவர் பெரிதாகச் சாதிக்கவில்லை. பின்னர் 2001இல் நடந்த அவுஸ்திரேலியாவுக்கு எதிரான தொடர் இவருக்கு திருப்பு முனையாக அமைந்தது. 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட இத்தொடரில் ஒட்டு மொத்தமாக 32 விக்கெட் வீழ்த்தினார். கும்ளே காயம் காரணமாக பங்கேற்காத நிலையில் முழுப் பொறுப்பும் இவர் மீது விழுந்தது. மும்பையில் நடந்த முதல் டெஸ்டில் சொல்லிக் கொள்ளும்படி விளையாடவில்லை. இதையடுத்து இந்தியா தோல்வி அடைந்தது.

அடுத்து நடந்த கொல்கொத்தா டெஸ்டில் முதல் இன்னிங்ஸில் பொண்டிங், கில்கிறிஸ்ட், வோர்ன் ஆகியோரை வரிசையாக வெளியேற்றி, டெஸ்ட் போட்டிகளில் 'ஹாட்ரிக்' விக்கெட் வீழ்த்திய முதல் இந்தியர் என்ற பெருமையைப் பெற்றார். இரண்டு இன்னிங்ஸிலும் சேர்த்து 13 விக்கெட்டைக்கைப்பற்றி, அணிக்கு வெற்றி தேடிக் கொடுத்தார். தொடர்ந்து 16 டெஸ்டில் வென்று சாதனையை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்த அவுஸ்திரேலியாவின் வெற்றிப் பயணத்தை முடித்துவைத்தவர் ஹர்பஜன்சிங் தான். இத்தோல்வியின் மூலம் தொடர்ந்து 17 டெஸ்ட் வெற்றி என்ற அவுஸ்திரேலியாவின் கனவு பலிக்காமல் போனது.

சென்னையில் நடந்த மூன்றாவது டெஸ்டில் 15 விக்கெட் (இரண்டு இன்னிங்ஸிலும் சேர்த்து) எடுக்க, இந்தியா தொடரை வென்றது. ஆட்டநாயகன் மற்றும் தொடர் நாயகன் விருதை ஹர்பஜன் தட்டிச் சென்றார். இத்தொடரில் நடந்த கொல்கொத்தா மற்றும் சென்னை டெஸ்ட் என இவர் பந்துவீசிய நான்கு இன்னிங்ஸ்களும் 'விஸ்டனின்' 'ரொப்-100' பந்து வீச்சில் இடம் பெற்றுள்ளது. தொடர்ந்து திறமையாக விளையாடிவரும் இவர் தற்போதைய தொடரில் மொஹாலி டெஸ்டில் 5 விக்கெட் வீழ்த்தி, தனது பங்களிப்பைச் சிறப்பாகச் செய்துள்ளார். இதுவரை 71 டெஸ்ட் போட்டியில் பங்கேற்று மொத்தம் 299 விக்கெட் வீழ்த்தியுள்ளார் ஹர்பஜன்சிங். சுழற்பந்து வீச்சுக்குச் சாதகமான டில்லி டெஸ்டில் இவர் ஒரு விக்கெட் கைப்பற்றும் பட்சத்தில், டெஸ்ட் அரங்கில் 300 விக்கெட் வீழ்த்திய மூன்றாவது இந்திய வீரர் என்ற பெருமையைப் பெறுவார். முன்னதாக கும்ளே (616), கபில் தேவ் (434) இம்மைல்கல்லை எட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆண்டின் சிறந்த வீரர் ரொனால்டோ



பரிஸ், ஒக்.29

இந்த ஆண்டின் சிறந்த கால்பந்து விளையாட்டு வீரர் என்ற விருதை போர்த்துக்கல் நாட்டைச் சேர்ந்த இளம் வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ பெற்றுள்ளார்.

உலக கால்பந்து சம்மேளனமான பிபா அமைப்பைச் சேர்ந்த 57 ஆயிரத்து 500 உறுப்பினர்கள் ஆண்டுதோறும் சிறந்த விளையாட்டு வீரரை வாக்களித்து தேர்ந்தெடுப்பது வழக்கம்.

அது போன்று இந்த ஆண்டு நடைபெற்ற வாக்கெடுப்பில் 55 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குகளைப் பெற்று கிறிஸ்டியானோ ரொனால்டோ இந்த ஆண்டின் சிறந்த விளையாட்டு வீரர் என்ற விருதைத் தட்டிச் சென்றார்.

போர்த்துக்கல் நாட்டைச்சேர்ந்த ரொனால்டோ, மான்செஸ்டர் யுனைடெட் அணியில் விளையாடி வருகிறார். அந்த அணி நடப்பு ஆண்டின் சம்பியன்ஸ் லீக் மற்றும் பிரீமியர் லீக் என இரண்டு கோப்பைகளையும் தட்டிச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

நடப்பு காலத்தில் ரொனால்டோ 42 கோல்கள் அடித்து அதிக கோல்கள் அடித்தவர் பட்டியலில் முதலிடத்தில் உள்ளார். இதே போன்று பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த கால்பந்து இதழான 'பிரெஞ்சு புட்போல்' நடத்திய ஐரோப்பிய தங்கப் பந்து விருதுக்கும் ரொனால்டோ தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இந்த விருது கிடைத்ததற்கு சக வீரர்கள், பயிற்சியாளர்கள் என அனைவருக்கும் இந்த நேரத்தில் நன்றி தெரிவித்துக் கொள்வதாக ரொனால்டோ தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் உணவுப் பொருள்களை முழுமையாகச் சோதிக்க உத்தரவு

## மேல் நீதிமன்றம் நேற்றுக் கட்டளை

கொழும்பு, ஒக். 29

நாட்டில் விற்பனை செய்யப்பட்டுவரும் சிறுவர்களின் பால்மாப் பொருள்ளகள் மற்றும் உணவு வகைகள் அனைத்தும் அவர்ளின் உடல் நலத்திற்கு உகந்தவையா என்பது குறித்து பரிசோதிக்குமாறு சுகாதார அமைச்சுக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டது.

'எட்னா' சொக்லேட் நிறுவனத்தினால் மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யயப்பட்டிருந்த மேன்முறையீட்டு மனுவைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட சமயமே சுகாதார அமைச்சுக்கு மன்று இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

சகல பால்மாக்களிலிருந்தும் தயாரிக்கப்படும் உணவுப் பொருட்களை சிங்கப்பூருக்கு அனுப்பி, அங்கு உணவு மற்றும் ஔடதக் கட்டுப்பாட்டுக் குழுவின் சோதனை அறிக்கையைப் பெற்று மன்றுக்குச் சமர்ப்பிக்குமாறு சுகாதார அமைச்சுக்கு மேல்நீதிமன்ற நீதிபதி குமுதினி விக்கிரமசிங்க உத்தரவிட்டார்.

இந்த அனைத்துச் செயற்பாடுகளும் சட்டமா அதிபர் மற்றும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரின் நேரடிக் கண்காணிப்பில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் மன்று பணித்தது.

இச் செயற்பாடுகளுக்கு எவராயினும் இடையூறு விளைவித்தால் அவர்கள் மன்றை அவமதித்தனர் என்ற குற்றச்சாட்டின்பேரில் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

தமது நிறுவனத்தின் உற்பத்தி, விற்பனை, விளம்பரம், விநியோகம் ஆகியவற்றை உடனடியாக நிறுத்தி மறு அறிவித்தல்வரை தமது நிறுவனத்தை மூடுமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் அண்மையில் விடுத்த உத்தரவை ஆட்சேபித்து 'எட்னா' நிறுவனம் இந்த மேன்முறையீட்டு மனுவைக் கொழும்பு மேல்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தது.

'எட்னா' நிறுவனத்திற்கு எதிராகக் கொழும்பு நீதிவான் நீதிமன்றம் பிறப்பித்த சகல தடை உத்தரவுகளையும் இடைநிறுத்தி, தான் முன்னர் விடுத்திருந்த உத்தரவை கொழும்பு மேல்நீதிமன்றம் எதிர்வரும் நவம்பர் மாதம் நான்காம் திகதி வரை நீடிக்க நேற்றுக் கட்டளை பிறப்பித்தது.

அதேசமயம், 'எட்னா' சொக்கலேட் நிறுவனத்தினால் தயாரிக்கப்படும் உற்பத்திகள் அனைத்தையும் நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபையின் கீழ் கொண்டுவந்து, அவற்றின் மாதிரிகளை இரசாயன ஆய்வுக்கு உட்படுத்துமாறும் மேல்நீதிமன்றம் நேற்று பணிப்புரை விடுத்தது. (அ-சி)

## முதலாம் வருட நினைவில்...



| தாயிடம் | நோயிடம் |
|---|---|
| 18 | 11 |
| ★ | ★ |
| 09 | 10 |
| ★ | ★ |
| 1985 | 2007 |

*திதி: பிரதமை (29.10.2008)*

### செல்வி தாமினி கங்காதரன்

*அன்பிற்கே அடிமைகொண்டாய்*
*அருமகளாய் பெருமை கண்டாய்*
*கல்வியே கண் என்றாய் கலைமகளாய் வடிவெடுத்தாய்*
*உயிராக உனை நினைத்தோம்*
*உறவையெல்லாம் மறந்து சென்றாய்*
*ஓர் ஆண்டு ஓடியதே எம் அன்பு மகளே*
*ஓயவில்லை கண்ணீர் அலையிங்கே*
*உற்றவரும் பெற்றவரும் உனை எண்ண*
*உன் உருவந்தனை மறவாமல் கண்ணில் வைத்தோம்.*

*இல: 2, ஆசீர்வாதம் ஒழுங்கை,*
*ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (79525)

உன் நினைவில்
நாம் எல்லோரும்.

## மரண அறிவித்தல்கள்

### தம்பையா அருளானந்தம் (அருள்)
### (முன்னாள் வைரமாளிகை ஊழியர்)



யாழ்ப்பாணம் நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா அருளானந்தம் 27.10.2008 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா (பத்தர்) - சரஸ்வதி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சண்முகம் (பத்தர்) - இராசபுஸ்பம் தம்பதியினரின் அன்பு மருமகனும் நிர்மலாதேவியின் அன்புக் கணவரும் ரூபாதேவி, லிங்கா (உசா, டென்மார்க்), லதா (வவுனியா), மேனகா, சுயந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் உதயராசா (இலங்கை மின்சார சபை, யாழ்ப்பாணம்.), சத்தியமூர்த்தி (டென்மார்க்), பாலமுரளி (வவுனியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் தட்சாகினி, விவேகா, ஜனகன், சங்கீத்,செந்தூரன், லக்ஷன், டிலக்ஷன், லோகஜன், குருவிந் ஆகியோரின் அன்புப் பேரனும் சச்சிதானந்தம் (அச்சாதம்பி - ஜேர்மனி), மஞ்சுளா (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் விஜயசேகரம், சரவணபவானந்தன் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும் கமலநாதன், லிங்கநாதன், சசிகலாதேவி, ஜெகநாதன் (ஜெயா), தயாநிதி (பிரான்ஸ்), மனோரதி, நகுலேஸ்வரி, சோமசுந்தரம் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் தையல்நாயகி காலஞ்சென்ற தனபாலசிங்கம் (சுப்பர்) மற்றும் கார்த்திகா, றஞ்சிதகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.10.2008) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப 12.30 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எற்றுக் கொள்ளவும்.

*இல:7, இராமநாதன் வீதி,*
*நாச்சிமார்கோயிலடி, யாழ்ப்பாணம்.*

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி சண்முகம் பொன்னம்மா

கோப்பாய் வடக்கு, பிராமனோடையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சண்முகம் பொன்னம்மா நேற்று (28.10.2008) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம்-சேதுப்பிள்ளை தம்பதியினரின் மூத்த மகளும் காலஞ்சென்ற வல்லிபுரம் சண்முகம் (நீர்வேலி தெற்கு) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பொன்னையா வேலுப்பிள்ளை, நாகம்மா, தம்பாப்பிள்ளை (சிங்கப்பூர்), பார்வதிப்பிள்ளை மற்றும் தர்மலிங்கம், கதிரவேலு (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், செல்வமலர் (ஓய்வுபெற்ற நிதி உதவியாளர், பிரதேச செயலகம், கோப்பாய்), காலஞ்சென்ற குணசிங்கம் (முன்னாள் நீர்வேலி ப.நோ.கூ.ச. அலுவலர், மிருதங்க வித்துவான்) மற்றும் தனபாலசிங்கம், சரஸ்வதி, பரராஜசிங்கம், லோகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்ற சிவஞானரத்தினம் மற்றும் அன்னம்மா (ஓய்வுபெற்ற ஆசிரியை), கமலேஸ்வரி, சிவசுப்பிரமணியம், சந்தானலட்சுமி, சிவராசா (ஓய்வுபெற்ற ஆசிரியர்) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (29.10.2008) புதன்கிழமை மு.ப. 11 மணிக்கு நடைபெற்று பூதவுடல் இளங்காடு இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*பிராமனோடை,*
**கோப்பாய் வடக்கு, கோப்பாய்.**

தகவல்:
குடும்பத்தினர்

## அத்தியாவசியசேவைக் கூட்டம் வெள்ளியன்று இடம்பெறும்

யாழ்ப்பாணம், ஒக். 29

யாழ். குடாநாட்டுக்கு அத்தியாவசிய சேவைகள் தொடர்பான கலந்துரையாடல் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என மேலதிக அரச அதிபர் ஆ.சிவசாமி தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடல் இன்று இடம்பெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது என்றும் தற்போது பிற்போடப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (1)

## இலங்கை வங்கி அச்சுவேலிக் கிளையில் தரம் உயர்வு நிகழ்வு

அச்சுவேலி, ஒக்.29

அச்சுவேலி இலங்கை வங்கிக்கிளையின் தரம் உயர்த்துகை அங்குரார்ப்பண விழா இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு வங்கி மண்டபத்தில் நடைபெறும்.

அச்சுவேலி இலங்கை வங்கிக்கிளை முகாமையாளர்ரி.புவனேந்திரன் தலைமையில் நடை பெறும் இந்த விழாவில் இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொது முகாமையா ளர் பி.ஏ.அருமைநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கின்றார்.

சிறப்பு விருந்தினர்களாக வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளர்கள் என்.சிவரட்ணம், கே.உலகநாதன், வலி.கிழக்கு பிரதேச செயலாளர் சி.ஏ.மோகன்ராஜ், மாவட்ட முகாமையாளர் எஸ்.சிவநாதன் யாழ்.அதிமேற்தர பிரதான முகாமையாளர் ஆர்.ஜெயேந்திரா, சுன்னாகம் வங்கி முகாமையாளர் எஸ்.அரசகுமார், முன்னாள் உதவிப் பொது முகாமையாளர் கே.பாலசுப்பிரமணியம், மக்கள் வங்கி அச்சுவேலி முகாமையார் ஆர்.யோகராசா, அச்சுவேலி அரசினர் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் எஸ்.விமலேந்திரன் ஆகியோர் கலந்துகொள்கின்றனர். (1-11)

## ரூ.10 லட்சம் வழங்கி நிவாரண நிதியை முதல்வர் கருணாநிதி நேற்றுத் தொடக்கி வைத்தார்.

சென்னை, ஒக்.29

இலங்கையில் இன்னலுறும் தமிழ் மக்களுக்காக உதவுவதற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள "இலங்கைத் தமிழர் நிவாரண நிதி"யை முதலமைச்சர் கருணாநிதி தொடக்கிவைத்தார்.

முதலமைச்சர் சொந்தப் பணத்தில் இருந்து 10 லட்சம் ரூபாவை (இந்திய மதிப்பில்) இலங்கை தமிழர்களுக்காக வழங்கினார். அதற்கான காசோலையை அவர் தலைமைச் செயலாளர் ஸ்ரீபதியிடம் கொடுத்தார்.இதைத் தொடர்ந்து அமைச்சர்கள், எம்.பிக்கள் மற்றும் முதல்வர் அலுவலக ஊழியர்கள் ஆகியோர் உதவி நிதியை கருணாநிதியிடம் வழங்கினார்கள்.

ஆற்காடு வீராசாமி - ரூபா 21,750 (ஒரு மாத சம்பளம்), மு.க.ஸ்டாலின் - ரூபா 25 ஆயிரம், துரைமுருகன் - ரூபா 22 ஆயிரம், பொன்முடி - ரூபா 25 ஆயிரம், எ.வ.வேலு - ரூபா 22 ஆயிரம், கே.கே.எஸ்.எஸ்.ராமச்சந்திரன் - ரூபா 22 ஆயிரம், தங்கம் தென்னரசு - ரூபா 22 ஆயிரம் வெள்ளக்கோவில் சாமிநாதன் - ரூபா 22 ஆயிரம், டி.ஆர்.பாலு - ரூபா 50 ஆயிரம், ஆர்.ராஜா - ரூபா 50 ஆயிரம், பழனிமாணிக்கம் - ரூபா 50 ஆயிரம், ரகுபதி - ரூபா 50 ஆயிரம், வேங்கடபதி - ரூபா 50 ஆயிரம், ராதிகா செல்வி - ரூபா 50 ஆயிரம், கவிஞர் வைரமுத்து - ரூபா 1 லட்சம், செ.குப்புசாமி - ரூபா 25 ஆயிரம்

கனிமொழி - ரூபா 50 ஆயிரம், வசந்தி ஸ்டான்லி - ரூபா 25 ஆயிரம், ஜின்னா - ரூபா 25 ஆயிரம், கிருஷ்ணசாமி - ரூபா 25 ஆயிரம், பூங்கோதை - ரூபா 25 ஆயிரம்.(அ-சி)

## வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு
## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
### பரீட்சை நேரமாற்றம் தொடர்பான அறிவித்தல்
### வெளிவாரிப் பரீட்சைகள் - 2007
### கலைமுதற் தேர்வு - 2006 (வெளிவாரி)

மேற்படி கலைமுதற் தேர்வு பரீட்சையில் **23.10.2008 (வியாழக்கிழமை)** அன்று நடைபெறவிருந்து, தவிர்க்க முடியாத காரணத்தினால், பிற்போடப்பட்ட பின்வரும் பாடங்களுக்கான பரீட்சைகள், **03.11.2008 (திங்கட் கிழமை)** அன்று ஆசிரிய பயிற்சிக்கலாசாலை, கோப்பாயிலும், வவுனியா வளாகத்திலும் பழைய நேர அட்டவணை யின் படி நடாத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. பரீட்சார்த்திகள் ஏற்கனவே எம்மால் வழங்கப்பட்ட பரீட்சை அனுமதி அட்டையுடன் பரீட்சைகளுக்கு தோற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

| பாடம் | பாடக்குறியீடு | நேரம் |
|---|---|---|
| சுற்றுப்புறச் சூழற்கல்வி | EX.ES.1.0 | 8.45 - 11.45 |
| ஆங்கில இலக்கியம் | EX.EN.1.1 | 12.30 - 03.30 |
| சங்கீத அறிமுறை | EX.MCV.1.2 | |
| நடன அறிமுறை | EX.MCVB.1.2 | |

மேலதிக விவரங்களுக்கு **021 222 3612** என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

**பதில் பதிவாளர்.** 28.10.2008

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் கனகமணி



மண்கும்பான் 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், இல.9, கண்ணாபுரம், கொட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் கனகமணி (25.10.2008) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.10.2008) புதன்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்துமயான திற்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எற்றுக் கொள்ளவும்.

*இல.9, கண்ணாபுரம்*
*கொட்டடி.* (சி/555122)

தகவல்:
கணவர்.

### சின்னத்தம்பி சிவசுப்பிரமணியம்

புன்னாலைக்கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சிவசுப்பிரமணியம் (27.10.2008) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - நாகம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சிவசிதம்பரம் - ரத்தினம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் திருவருள்தேவியின் அன்புக் கணவரும் விஸ்ணுகுமார் (கணக்காளர், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், திருகோணமலை), சுமதி ஆகியோரின் அன்புத் தந்தையும் மதிவினோதினி (ஆசிரியர், பாரதி வித்தியாலயம், திருகோணமலை), கணேசமூர்த்தி ஆகியோரின் அன்பு மாமனாரும் துவாரகன், கயாணி, பானுசன், புருஷோத்மன், சிந்தூரி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.10.2008) புதன்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக புன்னாலைக்கட்டுவன் விலங்கன் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எற்றுக் கொள்ளவும்.

*ஆஸ்பத்திரி வீதி,*
*புன்னாலைக்கட்டுவன் தெற்கு,*
*புன்னாலைக்கட்டுவன்.* (79529)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகத்துறைப் படிப்பகம் மாநகர சபை, யாழ்ப்பாணம்.

# பரந்தனில் விமானக் குண்டுவீச்சு மூவர் பலி; 11 பேர் காயம்!

## 1,300 மாணவர்களும் அருந்தப்பு

கொழும்பு, ஒக் 29

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பரந்தன் பாடசாலைக்கு அருகான மக்கள் குடியிருப்புகள் மீது அரச வான்படை நடத்திய குண்டுத் தாக்குதலில் அப்பாவிப் பொது மக்கள் மூன்று பேர் கொல்லப்பட்டுள்ளனர். 11 பேர் காயமடைந்துள்ளனர். இச்சம்பவத்தில் 1,300 மாணவர்கள் நூலிழையில் உயிர் தப்பியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றன.

பரந்தன் குமரபுரம் கிராமத்தில் உள்ள பரந்தன் இந்துவித்தியாலயத்துக்கு அருகான மக்கள் குடியிருப்புக்கள் மீது நேற்று செவ்வாய்க்கிழமை மிக் - 27 ரக விமானங்கள் இந்தக் குண்டுத்தாக்குதலை நடத்தியுள்ளன.

மக்கள் செறிவாக வாழ்ந்து வரும் குடியிருப்பு மற்றும் போக்குவரத்து வீதியை இலக்கு வைத்து இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது எனவும் கூறப்படுகிறது.

சுமார் 1,300 மாணவர்கள் கல்வி கற்றுக் கொண்டிருந்த வேளையில் பரந்தன் சந்தை மற்றும் நகரம் செறிவான மக்களுடன் இயங்கிக்கொண்டிருந்த வேளையில் மக்களுக்கு அவலத்தையும் அழிவையும் ஏற்படுத்தும் வகையில் மக்கள் குடியிருப்புகள் மீது அரச வான்படையின் விமானங்கள் குண்டுத் தாக்குதலை நடத்தின எனத் தெரிவிக்கப்பட்டது

இதன்போது வீதியால் சென்று கொண்டிருந்த மூன்று பொதுமக்கள் கொல்லப்பட்டனர். பொதுமக்களின் எட்டு வீடுகள் அழிந்துள்ளதுடன் பத்து வீடுகள் கடுமையான சேதங்களுக்கு உள்ளாகியுள்ளன. வீடுகளில் இருந்த பொதுமக்கள் மூவரும், மாணவர்கள் மூவருமாக ஆறு பேர் காயமடைந்தனர்.

குண்டுத்தாக்குதல் இடம்பெற்றபோது பாடசாலை மாணவர்கள் தேர்வு எழுதிக் கொண்டிருந்தனர். வான்படையின் குண்டுத் தாக்குதலால் மாணவர்கள் பதறி- அவலப்பட்டு- சிதறி ஓடினர்.

மாணவர் அவலப்பட்டு பதுங்குகுழிகளுக்கு உள்ளும் வெளியிலும் கதறி அழுதவாறு சிதறியோடினர். பாடசாலை வளாகத்திலும் வகுப்பறைகளிலும் குண்டுச்சிதறல்கள் வீழ்ந்துள்ளன. இதில் மாணவர்கள் காயமடைந்தனர்.

இந்தக் குண்டுத்தாக்குதலினால் பரந்தன் நகரம் அவலப்பட்டு சிதறி ஓடியது.

குண்டுத்தாக்குதலில் கிறிஸ்டி (வயது - 16) எனும் மாணவனின் வாயில் குண்டுச்சிதறல் தாக்கியுள்ளதுடன் கனிஸ்டன், தனுசன் ஆகிய மாணவர்களும் காயமடைந்துள்ளனர்.

வீடுகளிலிருந்து காயமடைந்த சுகுமார்ரதி (வயது - 47), பத்மசீலன் (வயது - 37), வீ.காண்டீபன் (வயது - 29) ஆகியோர் கிளிநொச்சி நகரில் இயங்கிவரும் பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

# பெற்றோலியக் கூ.தாபனத்துக்கு தினமும் 15 கோடி ரூபா இலாபம்!

## நட்டம் என்று கூறுவது பொய் என்கிறது ஐ.தே.க

தினமும் நட்டத்தில் இயங்குவதாகப் பொய் கூறும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஒவ்வொரு நாளும் 15 கோடி ரூபாவை இலாபமாகப் பெறுகின்றது என்று ஐ.தே.கட்சியின் பொதுச் செயலாளரும் எம்.பியுமான திஸ்ஸ அத்தநாயக்க கூறினார்.

அதேபோல் இந்தியன் ஓயில் கம்பனியும் (ஐ.ஓ.சி.) நாளான்றுக்கு எட்டுக்கோடி ரூபாவை இலாபமாகப் பெறுகிறது என்றும் அவர் சொன்னார்.

அதன்படி இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தினமும் பெற்றோல் விற்பனையில் 3 கோடி 85 லட்சம் ரூபாவையும், டீசல் விற்பனையில் 10 கோடி 25 லட்சம் ரூபாவையும் மண்ணெண்ணெய் விற்பனையில் 85 லட்சம் ரூபாவையும் இலாபமாகப் பெறுகிறது.

இக்கூட்டுத்தாபனம் நாளொன்றுக்கு 770 மெற்றிக்தொன் பெற்றோலையும் இரண்டாயிரத்து 800 மெற்றிக் தொன் மண்ணெண்ணெயையும் விற்பனை செய்கிறது.

அதேபோல் இந்தியன் ஓயில் கம்பனி நாளொன்றுக்கு பெற்றோல் விற்பனையில் மூன்று கோடி 65 லட்சம் ரூபாவையும், டீசல் விற்பனையில் 4 கோடி 40 லட்சம் ரூபாவையும் இலாபமாகப் பெறுகிறது.

அக்கம்பனி நாளொன்றுக்கு 330 மெற்றிக் தொன் பெற்றோலையும், 1,200 மெற்றிக்தொன் டீசலையும் விற்பனை செய்கிறது.

ஆகவே, இந்தத் தொகை பணத்தை இலாபமாகப் பெறும் அரசு எரிபொருள்களின் விலைகளை இன்னும் குறைக்காமல் இருப்பது அநீதியாகும் என்று திஸ்ஸ அத்தநாயக்க கூறினார். (சி)

## தள்ளாடியிலும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களனிதிஸ்ஸ மின்நிலையம் விமானத் தாக்குதலுக்கு உள்ளாகி யதைத் தொடர்ந்து கொழும்பு நகரின் பெரும்பாகம் முழுவதும் இரவு 10.30 மணி தொடக்கம் இரவு 11.45 மணிவரை இருளில் மூழ்கியிருந்தது.

தள்ளாடியில் விமானத்தாக்குதல் நடத்திய விடுதலைப்புலிகள் கொழும்பு நகரத்தையும் தாக்கலாம் என்று ஊகித்து 10.30 மணிக்கு மின்விநியோகம் தடை செய்யப்பட்டது.

இதனால் கொழும்பின் பெரும் பாகம் முழுவதிலும் மக்கள் பதற்றத்துடனும் பீதியுடனும் என்ன நடந்தது, ஏது நடக்கப்போகின்றது என்று நிமிடங்களை பெரும் ஏக்கத்துடன் கழித்தனர்.

இடத்துக்கிடம் வேறுபட்ட நேரங்களில் மின்தடை இருந்த போதிலும், நள்ளிரவு சுமார் 12.30 மணிக்கே வெளிச்சம் வந்தது.

களனிதிஸ்ஸவில் விடுதலைப்புலிகள் நடத்திய விமானத்தாக்கு தலில் மின்உற்பத்தி நிலையத்தின் ஒரு பகுதி எரிந்ததாகவும், மின்சார விநியோகம் திரும்பியபின்னரும் நெருப்பு எரிவதைக் காணக்கூடியதாக இருந்ததாகவும் வத்தளை வாசி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை விமானத் தாக்குதல்கள் காரணமாக பொலநறுவை, அநுராதபுரம் மற்றும் பல இராணுவ கேந்திரப் பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருந்தது. (அ-1)

COMPUTER EXPRESS
Institute of Information Technology
No 167, Kasturiar Road, Jaffna.
புலமைபரிசில்திட்டம் - 2008
அனைத்துக் கற்கைநெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.
80% Off
ஆரம்பம்:
Batch I: 30/10/2008-09AM
Batch II: 01/11/2008 {09AM 02PM
Batch III: 02/11/2008 {09AM 02PM
Batch VI: 04/11/2008-09AM

## மேற்குலக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் இதனைக் கூறினார்.

மேற்குலக நாடுகள் சில, இலங்கை தொடர்பான தமது கொள்கையை தொடர்ச்சியாக மாற்றி வருகின்றன என்றும் அவர் கவலை வெளியிட்டார். மேற்கு நாடுகள் விடுதலைப் புலிகளுக்கு உதவுகின்றனவா என்று சந்தேகிக்க வேண்டியிருக்கிறது என்றும், பஸில் பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் கூறினார் .

விடுதலைப் புலிகளுக்கு சில மேற்கு நாடுகள் ஆதரவளித்துள்ளமை எமது வரலாற்றில் இடம்பெற்றுள்ள உண்மை. அதுவே இப்போதும் இடம்பெறத் தொடங்கியிருக்கிறது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வன்னி மக்களின் நிலைமை குறித்து பி.பி.ஸியிடம் கருத்துத் தெரிவிக்கையில், வடபகுதி மக்களுக்கு ஏற்கனவே போதிய ளவு விநியோகங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எதிர்கால நடவடிக்கைகள் குறித்து அரச அதிகாரிகள் மற்றும் இந்திய உயர் மட்டத்தினருடன் பேசி ஆலோசித்து வருகிறோம்'' என்று கூறினார். (அ-சி)

புவியியல்: N.பாபு
paper class A/L - 2009 சனி, ஞாயிறு
பிரிவு -I - 10 மணி, பிரிவு - II - 12 மணி
★ உலகப்படம் குறித்தல்
★ சுழற் புவியியல் } பகுதி -I (MCQ)
★ மானிடப் புவியியல் } பகுதி - II
கடந்தகால விளக்கம்,மாதிரி விளக்கமுடன் கூடிய மீட்டல் வகுப்பு
வெளி மாணவர்களுக்குப் புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
DMI நாவலர் வீதி, யாழ்.

# சம்பள உயர்வு கோரி ஆசிரியர்கள் நாளை சுகவீன லீவுப் போராட்டம்!

கொழும்பு, ஒக். 29

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் சம்பளத்தை அதிகரிக்குமாறு கோரி ஆசிரியர்கள் நாளை வியாழக்கிழமை நாடளாவிய ரீதியில் ஒருநாள் சுகவீன விடுறைப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

இதனால், அன்றைய தினம் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்படும் என்றும் இப்போராட்டத்திற்கு உரிய பதில் கிடைக்காவிட்டால் வெவ்வேறு வடிவங்களில் போராட்டம் தொடரும் என்றும் இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பொதுச் செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு :-

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் சம்பளத்தை அதிகரிக்குமாறு நாம் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகின்றபோதும் அரசு இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

சம்பள ஆணைக்குழுவின் சிபாரிசுகளும் உயர் நீதிமன்ற தீர்ப்பும் அரசுக்கு வழங்கப்பட்ட போதிலும் சம்பளத்தை அதிகரிக்க அரசு எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

இதன் காரணமாக மீண்டும் ஒருமுறை அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் நோக்கில் வியாழக்கிழமை நாடளாவிய ரீதியில் ஒருநாள் சுகவீன விடுமுறைப் போராட்டத்தை நடத்த நாம் முடிவு செய்துள்ளோம்.

அதற்குப் பதில் கிடைக்காத பட்சத்தில் எமது போராட்டம் வெவ்வேறு வடிவில் தொடரும் - என்றார். (அ-சி)

## விமானத்தாக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு மற்றும் புறநகர் பகுதிகளில் மின்விநியோகம் தடைசெய்யப்பட்டது. போக்குவரத்துக்கள் யாவும் நிறுத்தப்பட்டன.

மக்களை வெளியே வரவேண்டாம் எனப் படையினர் அறிவுறுத்தினர்.

வீதிகள் எங்கும் படையினர் குவிக்கப்பட்டு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டது.

விமானம் வருவதாக 'ராடர்' மூலம் தெரியவந்ததை அடுத்து கொழும்பு நகர்ப்பகுதியில் பொருத்தப்பட்டிருந்த விமான எதிர்ப்புப் பீரங்கிகள் முழங்கின. இதனால் கொழும்பு நகரே அதிர்ந்தது.

நேற்று நள்ளிரவு 12.35 மணியளவிலேயே கொழும்பு நகருக்கு மீண்டும் மின் விநியோகம் வழங்கப்பட்டது. அதன் பின்னரே கொழும்பு மாநகரம் வழமைக்குத் திரும்பியது.

இதேவேளை மின் விநியோகம் திரும்பிய பின்னர், களனி திஸ்ஸ மின் நிலையத்தின் ஒரு பகுதியில் மின் வெளிச்சம் காணப்பட்டதாகவும் மற்றப் பகுதி இருளில் மூழ்கியிருந்ததாகவும் அப்பகுதி பொதுமக்கள் தெரிவித்தனர்.

குண்டு வீழ்ந்து வெடித்தவுடன் மின் நிலையத்தில் தீப்பிழம்பு மேலேழுந்ததாகவும் அப்போது விமானம் பறந்து சென்றதை காணக்கூடியதாக இருந்ததாகவும் அப்பகுதி மக்கள் மேலும் தெரிவித்தனர்.

நேற்று நள்ளிரவு வரை களனிதிஸ்ஸ மின்னிலையத்தைஅண்மித்த பகுதிக்குச் செல்வதற்கு பொதுமக்கள் அனுமதிக்கப்படவில்லை. (அ-1)

## தொண்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைத்துப்பாக்கிகள் கண்டுபிடிக்கப்பட்டன என்று ஐக்கிய நாடுகள் சபை தனது செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளது. இது குறித்து பொலிஸாருக்கும் அரச அதிகாரிகளுக்கும் உடனடியாகத் தெரியப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் இதுகுறித்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் அந்தச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-சி)

## யதார்த்தத்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரா.சம்பந்தன் மேலும் கூறியதாவது:

தமிழக அரசும் அரசியல் கட்சிகளும் கொடுத்து வந்த அழுத்தம் காரணமாக இலங்கைத் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க இந்தியாவின் பங்களிப்பு அவசியம் என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. அதற்கான நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

இப்போது உருவாகியுள்ள நிலைமையை மத்திய, மாநில அரசுகள் சரிவர பயன்படுத்தி, ஈழத்தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வுகாண முயலவேண்டும்.

இந்தியா தமிழர்களுக்கு 800 மெற்றிக் தொன் உணவுப் பொருளை அனுப்புவதை வரவேற்கின்றோம். எமது மக்களுக்கு கிடைக்கும் உதவியைநாம் நிராகரிக்க மாட்டோம்.

இந்த உதவிக்கு மேலாக இந்திய மத்திய, மாநில அரசுகள் தமிழ் மக்களின் எதிர்காலம் குறித்து சிந்திக்கவேண்டிய நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை விவகாரத்துக்கு யுத்தத்தின் மூலம் தீர்வைக்காண முடியாது என்ற யதார்த்தத்தை உணர்ந்துள்ள இந்தியமத்திய அரசு, பேச்சு மூலம் ஆக்கபூர்வமான தீர்வு கிடைப்பதற்கு உருப்படியான நடவடிக்கைஎடுக்கவேண்டும் என்பது எமது நிலைப்பாடும் எதிர்பார்ப்பும் - என்றார். (அ-1)

# உடுப்பிட்டியில் கொள்ளை; நால்வர் கைது

மந்திகை, ஒக்.29

உடுப்பிட்டியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கொள்ளைச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் பருத்தித்துறை நீதிவான் க.அரியநாயகம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இந்த சம்பவம் தொடர்பாக மேலும் சிலரை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர். (1-218)

## அதிரடிப்படை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் விசேட அதிரடிப்படையைச் சேர்ந்த மூவரும் சிவிலியன்கள் இருவரும் காயமடைந்தனர் என்று கூறப்படுகிறது.

காயமடைந்தவர்கள் மட்டக்களப்பு வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே இத்தாக்குதலை நடத்திவிட்டுத் தப்பிச் சென்றனர் என்று பொலிஸ் தரப்பில் கூறப்பட்டது. இச்சம்பவத்தை அடுத்து அப்பகுதியில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து சுற்றிவளைப்புத் தேடுதலை நடத்தினர். (அ-சி)

## செங்கலடியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளின் அணி ஒன்றே தாக்குதல் நடத்தியது என்றும், தாக்குதலாளிகள் ரி - 56 - 2ரகத் துப்பாக்கிகள் ஐந்தையும், ரி - 56 ரகத் துப்பாக்கி மூன்றையும் மற்றும் பெருமளவிலான வெடிபொருள்களையும் கைப்பற்றிச் சென்றனர் என்றும் - கூறப்பட்டது.

கருணா குழுவைச் சேர்ந்த அஜந்தன், வில்வன், ராசன் மற்றும் மணிவண்ணன் ஆகியோரே இத்தாக்குதலில் கொல்லப்பட்டனர் என்றும் - மேலும் ஐவர் காணாமற்போயுள்ளனர் என்றும் - கருணா குழுவின் முக்கியஸ்தரும் ஜனாதிபதியின் அம்பாறை மாவட்டத்திற்கான இணைப்புச் செயலாளருமான இனியபாரதி தெரிவித்துள்ளார்.

கருணா குழுவின் முகாம் மீதான தாக்குதலை பொலிஸ் தரப்பும் உறுதிப்படுத்தியிருக்கிறது. தாக்குதல் நடந்த சமயத்தில் குறித்த அலுவலகத்தில் கருணா குழுவைச் சேர்ந்த ஒன்பது பேர் கடமையிலிருந்தனர் என்றும் பொலிஸ் தரப்பில் கூறப்பட்டது.

உயிரிழந்தோரின் சடலங்கள் மட்டக்களப்பு வைத்தியசாலையில் நேற்று வைக்கப்பட்டிருந்தன.

இச்சம்பவத்தை அடுத்து அப்பகுதியில் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைத்து சுற்றி வளைப்புத் தேடுதல்களை மேற்கொண்டனர்.

கருணாகுழுவின் செங்கலடி முகாமை தமது அணியினர் தாக்குதல் நடத்தி ஆறு பேரை சிறைபிடித்ததுடன், ஆயுதங்களையும் கைப்பற்றியதாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

இதைத் தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் பேச்சாளர் அசாத் மௌலான- மறுத்தார்.

குழப்பத்தை ஏற்படுத்த புலிகள் முயற்சிக்கின்றனர். அதிஉயர் பாதுகாப்பு வலயத்துக்குள் ஊடுருவி அவர்களால் தாக்குதல் நடத்த முடியாது. கிழக்கில் தாம் இன்னமும் பலமாக உள்ளார்கள் என்பதனைக் காட்டுவதற்காக விடுதலைப்புலிகள் பரப்பியுள்ள வதந்தி இது. கிழக்கில் முதலமைச்சர் பாதுகாப்பை உறுதிப்படுத்தியுள்ளார். மக்கள் பாதுகாப்பாக இருக்கின்றார்கள் - என்றார் அவர். (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.10.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.